18] புரட்டாசிமீ : : September, 1926 [பகுதி 9

விவேக போதினி

VIVEKA BODHINI

பொருளடக்கம்

	பக்கம்
முருகன் வழிபாடு ...	321
இந்திய சரித்திர ஆரம்பம் ...	322
இரு வீரபத்தினிகள்	327
பெரும் போட்டி ...	332
கேசவ சந்திரசேனர்	337
இராஞ்சிதம்—(நாவல்) ...	340
சிறுத்தொண்டர்—(நாடகம்) ...	353
சிறுவர்களுக்கான பக்கங்கள்—(பரசுராமாவதாரம்) ...	356
ஸ்திரீகளுக்கான பக்கங்கள்	359
வர்த்தமானக் குறிப்புகள்	360

சித்திரப் படங்கள்

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS ✱ MADRAS ✱
10 NOV 1926

SCANNED

JL
ZM211, N08VB
N26.18.9.
218382

குறைக்கப்பட்ட ... தம் (தபால் செலவடங்க) ... உள்நாடுகளுக்கு ரூ. 3.8.0. வெளிநாடுகளுக்கு ரூ. 4.

நீ உன்னுடைய மூளையை உபயோகப் படுத்துகிறாயா.

நீ மாணாக்கனாகவாவது அல்லது மூளையை உபயோகித்துப் பணம் சம்பாதிக்கவாவ திடமாயிருக்கவேண்டும். உனக்கு விஷயங்களின் உண்மையை யறியக்கூடுமென்றும், அதற்கே வாறு நடக்கக்கூடுமென்றும் நம்பிக்கைவேண்டும். மனதினாலும், சரீரத்தினாலும் எடுக்கும் முயற்சி னால் குறைகிற சக்தியையும் பலத்தையும் திரும்பிக்கொண்டுவர நல்ல போஷாப்பு வேண்டியதவசியம்.

நெஸ்லேஸ் பால் ஆகாரம் (Nestle's Milk Food) மன உழைப்பாளிகளுக்கு சீக்கிரத்தில் ஜீர்ணிக்கக்கூடிய மேலான பால்கஞ்சி. அது வெகு சீக்கிரத்தில் ஜீர்ணமாக உடம்புடன் சிரமமில்லாமல் கலந்து விடுகிறது. அது பலத்தைத்தரும் ஆகாரங்களால் செய்யப்பட்டதால் உடம்பில் வழிந்துபோன பலத்தை திருப்பிக்கொடுத்து விருத்திசெய்கிறது.

போட்டி போட்டுக்கொண்டு வாசிக் ம் மாணாக்கர்களும், தங்கள் முயற்சிகளி தான், தங்கள் வேலை முடிவுபெற வேண்டுமென்று புத்தியை உபயோகப்படுத்துபவர்களும், நெஸ் லேஸ் பால் ஆகாரத்தைச் சாப்பிட்டால் அது அவர்களுக்குப் பலத்தையும் ஆரோக்கியத்தையும் தரும் மருந்துபோலாகும்.

நெஸ்லேஸ் பால் ஆகாரம் நல்ல பாலும் கோதுமையும் சேர்த்து சாஸ்திரப்படி செய் பட்டதுடன் ஓர்வித மணமு மிருப்பதால் மன உழைப்பாளிகளுக்கு சிநேகிதன்போல் உ செய்கிறது.

பெரிய டின் 1-க்கு விலை ரூபா 1-6-0 (தான்.)

வலதுபுறத்தி லிருக்கும்
மேல் விலாசத்திற்கு
எந்த பாஷையில்
எழுதி விசாரித்
தாலும் பதில்
அனுப்பப்படும்.

கீழ்க்கண்ட விலாசத்தைக்
கிழித்து கவர் அல்லது
கார்ட் மேல் ஒட்டி
அனுப்பவும்.

NESTLÉ & ANGLO SWISS
CONDENSED MILK CO.,
POST BOX NO. 396
CALCUTTA.

தமிழ் அபிமானிகளுக்கு

சென்ற 19-வருஷகாலமாக, தமிழ் அபிவிருத்தியின் பொருட்டு, விவேக போதினி, எவ்வித ...றுகளையும் பொருட்படுத்தாமல், எவ்வயதினர்க்கும் எக்காலத்துக்கும் உபயோகப்படக் கூடிய மிக்க விஷயங்களையே தாங்கி வெளிவந்துகொண் டிருப்பதை நேயர்கள் நன்கு அறிவர். இதன் உப...ந்தை இன்னும் அதிகப்படுத்த விரும்பி, சந்தாவை கீழ்க்கண்டபடி மிகவும் குறைத்துவிட்டோம். ...களின் பூரண ஆதரவை எதிர்பார்க்கிறோம். சந்தாதார்களுக்கு புத்தகங்கள் குறைந்த விலை.

குறைக்கப்பட்ட சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன்	ரூ.	3—8—0
பினங், சிங்கப்பூர், நேடால், மோரீசு தீவுகள்	,,	4—0—0
தனி சஞ்சிகை	,,	0—5—0

சந்தாவைக் குறைத்தபோதிலும், இருபாலார்க்கும் உபயோகமான அருமையான வியாசங்களே ...க்கம்போல் உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அழகிய ஆப்டோன் படங்களுடன் வெளியிடப்படுகிறது.

குறிப்பு:— ரூ. 1-8-0 விலையுள்ள இனாம் புத்தகங்கள் கொடுத்துவந்ததை நிறுத்தி விட்டோம். ...ல் சந்தாதார்க்கு மாத்திரம் (சந்தாவை பாக்கியில் வைத்துக்கொண்டிராதவர்களுக்கு) எங்கள் காரியா...த்திலுள்ள எவ்விதத் தமிழ்ப் புத்தகங்களும் மிகக் குறைந்த விலைக்கு அனுப்பப்படும்.

சந்தாதார்க்கு மாத்திரம் மிகக் குறைந்த விலை

		ரூ.	அ			ரூ.	அ
1.	இராமாயண வினாவிடை	1	8	28.	சுந்தரர்	0	2
2.	இராமாயண ஸாரம்	1	0	29.	மூர்த்திநாயனார் சரித்திரம்	0	3
3.	ஸ்ரீமத் பாரத ஸாரம்	1	2	30.	விசாரசன்மர்	0	3
4.	ஸ்ரீமத் பாகவத ஸாரம்	1	0	31.	கந்தரலங்காரம், கந்தானுபூதி	0	3
5.	ஆரியமத உபாக்கியானம் I	0	8	32.	பஞ்சரத்தினம்	0	12
6.	ஷை 2-ம் பாகம்	0	10	33.	மரகதவல்லி	0	12
7.	ஸ்ரீமத் பாரத வினாவிடை II	1	4	34.	கமலாகாந்தன்	0	2
8.	ஷை III	1	4	35.	திருமயிலைச் சிறப்பு	0	2
9.	ஜகஜ்ஜோதி	0	10	36.	இயற்கை அற்புதங்கள்	0	10
10.	புலவர் சரித்திரத் திரட்டு	0	8	37.	பூதத் வபோதினி	0	10
11.	பீமலா (திவான் மகள்)	0	8	38.	ஹநுமப் பிரபாவம்	0	2
12.	ஸ்திரீ ரத்னம்	1	4	39.	தேடாத செல்வம்	0	3
13.	ஐரோப்பிய மஹா யுத்தம்	1	4	40.	பிரபாவதி	0	3
14.	வியாஸ விதானம்	0	12	41.	கிரிஸெல்டா	0	4
15.	ருக்மிணி (பதி பக்தி)	0	8	42.	பரதன் (நாடகம்)	0	13
16.	ஸ்ரீ பால பாரதம்	0	8	43.	திருக்குறள் நீதிக்கதைகள்	0	10
17.	ஸ்ரீ பால ராமாயணம்	0	8	44.	பாதாள வாசி	0	6
18.	நால்வர் சரித்திரம்	0	12	45.	தசகுமார சரித்திரம்	0	6
19.	பாண்டவ சரித்திரம்	2	4	46.	கன்றுங் கனியுதவும்	0	6
20.	திருமூலர் திருமந்திரம்	2	4	47.	தஞ்சைநாயகர் தாழ்வு	1	0
21.	தஞ்சாவூர் ஜில்லா வரலாறு	0	8	48.	விஜயபாஸ்கரன்	2	0
22.	ஷண்முக விஜயம்	0	12	49.	ஷண்முகசுந்தரம்	2	0
23.	பால ஷண்முக விஜயம்	0	8	50.	தனபாக்கியம்	2	0
24.	திருப்புகழ் பாராயணத் திருமுறை	1	0	51.	விக்ரமசிங்கன் கோட்டை மர்மம்	1	0
25.	திருப்புகழ் இரத்தினமாலை	0	3	52.	மோகனாங்கி	1	4
26.	திருஞான சம்பந்தர்	0	2½	53.	சிவகுமாரன்	1	0
27.	மாணிக்க வாசகர்	0	2	54.	மைதிலி	0	12

குறிப்பு:—மேற்கண்ட புத்தகங்கள், சந்தாதார்களுக்கு மாத்திரம், "ரூபாய்க்கு 3 அணா வீதம்" கமிஷன் தள்ளி அனுப்பப்படும். ஒரு ரூபாய்க்குக் குறைந்த புத்தகங்கள் வி. பியில் அனுப்பப்படமாட்டா. புத்தக விலைக்கு தபால் தலைகள் அனுப்பினால் புத்தகங்கள் அனுப்பப்படும். சந்தாவை பாக்கியில் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு, புத்தகங்கள் குறைந்த விலைக்கு அகப்படாதென்பதைக் கவனிக்கவும்.

விலாசம்:— மானேஜர், விவேகபோதினி, மயிலாப்பூர், சென்னை.

A. (No. 963) **Aletris Cordial**

அல்லெட்டரிஸ் கார்டியல்

ஸ்திரீகளின் பலஹீனத்தைத் தீர்க்கும் மருந்து

உலகெங்கும் வைத்தியர் யாவராலும் ஸ்திரீகளின் சகலவிதமான நோய்களுக்கு உபயோகிக்கப் படுவது. ருது அடையநிற்கும் சிறுமிகளுக்கும் இம்மருந்து மிகச் சிறந்தது.

அளவு :—தேபிலேக் கரண்டி மருந்தை, உண்ட பின்னும், நித்திரைக்குப் போவதற்கு முன்னும் உட்கொள்ளவேண்டும். உஷ்ணமான ஜலத்துடன் கலந்துகொண்டால் விசேஷ குணம் உண்டு.

Celerina

ஸிலரீ ஞ

பலமற்றவர்க்குக் கைகண்ட மரு

உண்பதற்கும், உறங்குவதற்கும் ஒரு ம முன்பு ஒரு தேபிலேக் கரண்டியளவு, நாள் மும்முறை சாப்பிட்டால், மனத்தளர்ச்சி, அ டல், புரட்டல், தூக்கமில்லாமை, மூர்ச்சை, க கம், நரம்புக்கேடா லாகும் அஜீர்ணம், ஹீனம், குடிக்கேடால் விளையும் நோய்கள் இ யாவும் ஒழிந்து உடம்பு புஷ்களமடையும். லா வஸ்துக்கள் கலவாது, மூளை வஸ்து விரு யடைய, கவனத்துடன் செய்யப்பட்டது.

இப்பிரசித்திபெற்ற மருந்துபோல் போலியாக இருக்கும் மருந்துகளைப் பார்த்து ஏமாறாமல்

RIO CHEMICAL COMPANY, NEW YORK CITY, U. S. A.

என்ற லேபிலேப் பார்த்து வாங்கவும். இது மருந்துக்கடைகளில் எங்கும் கிடைக்கும்.

(A. No. 2278)

பாலாஜி அண்டு கம்பெனி, காசி.

புதிய சரக்குகள் ! உடனே எழுதுங்கள் !! சகாய விலைகள் !!

புதுமாதிரி பட்டுப் புடவைகள்

இந்தப் புடவைகள் மெல்லிய பட்டினல் பளபளப்பாகவும் அழுத்தமாகவும் நெசவு செய்யப்பட்டுள்ளது. சிவப்பு, பச்சை, ரோஜா, நூீலம் முதலிய கலர்களில் விழிம்பு முந்திகளும் அழகான ஜரிகை வேலையும் செய்யப்பட்டுள்ளது. 8 கஜம் 2½ முழம் அகலம், புடவை 1-க்கு விலை ரூ. 25, 30, 35-முதல் 45-வரை.

பட்டு ரவிக்கைகள்

உடல் சாதா விழிம்புக்கு அழகான ஜரிகைவேலை செய்யப்பட்டு பலவித புதுமாதிரி கலர்களில், ரவிக்கை 1-க்கு விலை ரூ. 3-முதல் ரூ. 5-வரை.

விளையாட்டுப் பாத்திரங்கள்

பித்தளை வெங்கலத்தால் செய்த 32-வித சாமான்கள் அடங்கியதும், குழந்தைகளுக்கு சந்தோஷத்தை உண்டுபண்ணக் கூடியதுமானவை :

1 நெ. பெரிய செட் 1-க்கு	ரூ. 5 0 0
2 நெ. மத்திம செட் 1-க்கு	ரூ. 3 0 0
3 நெ. சிறிய செட் 1-க்கு	ரூ. 2 8 0

அன்னபூர்ணி அம்மன் ஸ்தோத்திரம் இனம்.

218382

Balajee & Co., Silk Merchants,

Benares City.

JL Ym 24, N 08 ... N26. 18-9

விக்ரமசிங்கன் கோட்டை மர்மம்

இப்புதிய நாவல் பெயர்பெற்ற துப்பஞன ஷண்முக சுந்தரத்தின் துப்புத் திறத்தை நன்கு விளக்கிக் காட்டுகிறது. ஆரம்பத்தில் எவரும் பிரவேசிப்பதற் கரிதான கருங்கற்கோட்டையில் காவற்காரன் எஜமானியைக் கொன்றதாகத் தெரியவருகிறது. அச்சந்தர்ப்பத்தில் ஷண்முகசுந்தரம் அழைக்கப்பட்டு, அந்த அம்மாள் இறக்கவில்லையென்று அறிந்து அவளை உயிர்ப்பித்து, காவற்காரன் குற்றவாளியல்லவென நிரூபித்து, அப்பிராந்தத்தில் பேர்பெற்ற கொள்ளைக்காரஞன சிங்கமாமுகனைத தொடர்ந்து, அவன் தாசியை மயக்கி அவனதிருப்பிடத்தையறிந்து, சந்நியாசிவேடம் பூண்டு சிங்கமாமுகனுக்குச் சிகிச்சைசெய்யச் சென்று, அப்போது தன் மந்திர சக்தியால் தீரஞன சிங்கமாமுகனையடக்கி வீழ்த்தி அவனைக் கொல்ல முயன்ற துருக்க சந்நியாசி யொருவனை தன்னுடைய நிகரற்ற மந்திர சக்தியால் அடக்கி, சிங்கமாமுகன்பூண்ட பலவேடங்களையும் துருக்கச் சந்நியாசியின் வேடத்தையும் எளிதில் ஊகித்து, அந்த அம்மாளது கணவஞன துருக்கச் சந்நியாசியையும் சகோதரஞன சிங்கமாமுகனையும் சிநேகப்படுத்தி, கற்பின் அவதாரமான அந்த அம்மாளது கற்பைச் சந்தேகித்து ஆராயாது செய்த செய்கைகளில் யாவருமுற்ற துயரத்தை எடுத்துக்காட்டுகிறான். மிகவும் எளியநடையில் எழுதப்பட்டுளது. எடுத்தவர் படித்துமுடிக்காமல் கீழே வைக்கமுடியாது. நான்கு அழகிய சித்திரப்படங்கள் அடங்கியது. விலை ரூ. ஒன்றுதான். விவேக போதினி சந்தாதார்க்கு மாத்திரம், அணா **12**

சில முக்கிய அபிப்பிராயங்கள்

சுதேசமித்திரன்.—* எல்லாவற்றிலும் ஸ்திரீகளுக்கு முக்கிய ஆபரணமாகவுள்ள கற்பின் மகிமையையும், அதைக் கடைப்பிடித்தோருக்கு எததனை இடுக்கண் நேரிடினும் முடிவில் அவர்களுக்கு வெற்றியே ஏற்படுமென்பதையும் நிரூபித்து இக்கதை எழுதப்பட்டிருக்கிறது ** படிக்கப் படிக்க அறிவையும், தெய்வ பக்தியையும், கற்பின் மகிமையையும், பசுமரத்தாணிபோல், மனதில் பதிக்குமாறு இப்புத்தகம் எழுதப் பெற்றிருப்பதால் இதனைப்படிப்போர் பயனுறுவார்களென்பதில் சந்தேகமில்லை.

***

இந்துநேசன்.—** முதலிலிருந்து ஈறுவரையில் கதையிற் கூறியுள்ள சம்பவங்கள் படிப்போர் மனத்தை கவரத்தக்கனவா யிருக்கின்றன. * * இனிய தமிழில் எழுதப்பட்டுள்ளது.

***

New India—The language is chaste without pedantry and fine without bombast. The story depicts modern life in India with its Western manners and Western engines of destruction. The hero of course, is the detective Shanmugasundaram, who has already made himself popular as the hero of a novel bearing that name and written by the same author * * * ** The story is full of interest from beginning to end.*

***

சுதேசபரிபாலினி.—* தற்சமயம் வெளிவந்துலவும் துப்பறியும் நாவல்களுள் இது மிகவும் சிறந்ததென்றே கூறவேண்டும். * * துப்பறியும் சமர்த்தர் (ஷண்முகசுந்தரம்) எடுத்துக்கொள்ளும் கஷ்டம் படிப்போருக்கு அளவில்லா ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் ஒருங்கே அளிக்குந் தன்மையில் இருக்கின்றது. புத்தகத்தைக் கையிலெடுப்போர், முடிவு காணும் வரையில் கீழே வைக்க மாட்டார். இடையிடையே அரிய பல நீதிபோதனைகளும், பக்திமார்க்கங்களும் காட்டப்பட் டிருக்கின்றன.

ஸ்ரீமான் வா. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள், எம். ஏ.—* கதையின் சுவையும் கற்கண்டின் சுவைபோல ஒரே தன்மையதாய் முதன் முதல் இறுதிவரையும் நன்கு அமையப்பெற்றுளது. இந்நூலில் முக்கிய புருஷஞன ஷண்முகசுந்தரத்தின் துப்பறியும் திறமும், பக்தியின் சிறப்பும் உத்தம குணங்களும் படிப்பவர் மனத்தைக் கவர்ந்து இன்பம் விளைவிக்கின்றன.

***

நவசக்தி.—இந்நூலுக்கு உயிர் நாடியாகவுள்ள ஷணமுகசுந்தரம் தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட குற்றத்தை ஆராய்ச்சிசெய்வதில் காண்பிக்கும் சாமர்த்தியங்கள் போற்றத் தக்கனவா யிருக்கின்றன. இந்நூலைப் படிக்கும் காலத்து உள்ளத்தில் ஒருவித இன்பம் உண்டாகிறதென்பதை ஈண்டும் குறிப்பிட விரும்புகிறோம். இதைத் தமிழர் ஒவ்வொருவரும் வாங்கிப் படிக்கவேண்டுவது அவசியம்.

***

The Hindu.—*This is an interesting detective novel *the story is designed to bring out the strength and value of chastity for women folk and as such the book deserves to be placed in the hands of all young girls. The style is simple and the printing good.

***

வைசியமித்திரன்.—* * அழகிய தமிழில் கற்பனை செறிந்த அலங்கார நடையில் எழுதப்பெற்றிருக்கிறது. * கதையின் போக்கும், குற்றங்காணு முறையும் கதா புருஷர்களின் செயலும் கற்பின் வெற்றிக்கொடியை நிலை நாடியே செல்கின்றது. படிப்போருக்கு பக்தி ரசமும் நகைச் சுவையும் முன் வந்து நிற்கும். இனிய நடையில் குற்றங் குறைகளின்றிச் செவ்வனே எழுதப்பெற்றது.

விலாஸம்:— மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

கந்தபுராணச்சுருக்கம்

மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்

இந்நூல் ஸ்ரீமத் - சம்பந்தசரணலய சுவாமிகளால் சொற்சுவை, பொருட்சுவை, சந்தச்சுவை முதலியன ததும்ப 1000 பாடல்களாகப் பாடப்பட்டது. கடல்போல் பரந்து கிடக்கும் பெரிய கந்தபுராணக் கதையை இனிது விளக்குவது. மூலத்திற்கேற்ற பொழிப்புரையும், விருத்தியும் பலநூற் பிரமாணங்களுடன் எழுதப்பட்டுள்ளன. டிம்மி 8-பக்கம் அளவில் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டது. 496 பக்கங்கொண்டது.

காலிகோ பயிண்டு விலை ரூ. 3

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்	0	12	0
குசலோபாக்கியானம் மூலமும் அரும்பதவிளக்கமும்...	0	12	0
உத்தியோகம் (நாடகம்)	0	6	0

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

பாதி விலை ! **ஒரு மாதம் வரை** பாதி விலை !!



அசல் விலை ரூ. 14.

பாதி விலை ரூ. 7.

22 காரட்ரோல்டு கோல்டு கைக் கெடியாரம் 5-வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயிருக்கும். இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பி வைக்கப் படும். பாதி விலை ரூ. 7.

ஒவ்வொரு கடியாரமும் ஒரு பட்டுப் பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

ஸ்வான் ஹவுஸ்,

தபால் பெட்டி 508,

பி. டி. மதராஸ்.

A. (No. 2700)

ஷண்முகம் மூக்குத்தூள்

70-வருஷ காலமாக குணத்தில் உயர்ந்ததாயும், மணத்தில் இதர பொடியைவிட மேன்மையாயுமிருந்து, இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களில் ஏராளமாய் விற்பனையாய் வருகிறது.

4 பலம் **13** அணா. **5** பலம் **15** அணா.

ஆர். கே பரிமள மூக்குத்தூள் 1புட்டி அணா **4.**

(போஸ்டேஜ் உள்பட)

மறந்துவிடுமுன் எழுதவும்

ஷண்முகம் ஸ்னப் கம்பெனி, லிமிடெட்,

தபாற்பெட்டி நெ. 140, சென்னை.

பெரிய கம்பெனி! பெரிய கம்பெனி!!

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி

நாணயமான சரக்குகள்

சுத்தமான பட்டு! சகாய விலை!!

உயர்தரமான

பட்டு பீதாம்பர சேலைகள் ரவிக்கைகள்

துப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், உருமால்கள் முதலிய எல்லாத் தினுசுகளும், சிவப்பு, ரோஸ், ஊதா, பச்சை, மஞ்சள், மேகவர்ணம், வெள்ளை, சிலேட் கலர், ஆரஞ்சு, கத்தரிப்பூக் கலர், கிரிம்ஸன் முதலிய எல்லா இங்கிலீஷ் கலர்களிலும் மிகவும் சரச விலைக்குக் கிடைக்கும்.

பட்டு பீதாம்பர கேட்லாக் இனாம்.

உடனே எழுதுங்கள்.

Address.—Manager, (A. No. 2914)

Silk Pitamber Co., *Benares City.*

விலாஸம்:—மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி.

குணப்படுத்துவதற்கு மாத்திரமல்ல

(இன்னும்)

வியாதிகள் அணுகாவண்ணம் தடுப்பதற்கும்

எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

பெரும் புகழும் பெற்றிருக்கின்றன!

அஜீரணம், பலஹீனம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, மூளைக்கொதிப்பு இன்னும் இவைபோன்ற மற்ற வியாதிகளை குணப்படுத்தி அவைகளை அணுகாதபடி செய்யும்.

32-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூபாய் 1.

விவரம் வேண்டுவோர்

கீழ்க்கண்டவருக்கு எழுதவும்:—

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26-பிராட்வே, மதராஸ்.

இனாம் ! இனாம் !! முற்றிலும் இனாம் !!!

'C' ரிஜிஸ்டர் டைம்பீஸ் இனாம். 'C' Regd. டைம்பீஸ் இனாம்.



எங்களின் "தாராலீவர் 18 காரட்டு ரோல்டு கோல்டு, பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்ட பாக்கட் கடியாரம் வாங்குகிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ. 5. இக்கடியாரத்தில் உள்ள டயலின்பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிடப்பட்டிருக்கிறது, முந்துங்கள்.

காப்டன் வாட்ச் கம்பெனி,

தபால் பெட்டி நெ. 265, மதராஸ்.

லோகோபகாரி

முப்பத்திரண்டு ஆண்டுகளாய் நிலவும்

வாரப் பத்திரிகை.

பத்திராதிபர்:—பரலி - சு. நெல்லியப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிரும் புதுவாழ்வும் பெறுவதற்காகப் பாடுபட்டு வரும் வாரப் பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். சிறந்த பாடல்களும், சித்திரப் படங்களும் அவ்வப்போது வெளிவரும். பாரத தேசம் சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற்று, லோகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பதே லோகோபகாரியின் நோக்கம். உலகத்தில் அறநெறியும் அன்பு நெறியும் வளர்ந்து இன்பம் நிலவுமாறு லோகோபகாரி நெடுங்காலமாக உழைத்து வருகிறது. இதனைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும்.

வருஷ சந்தா ரூபாய். 4—0—0 வெளி நாட்டுக்கு ரூபாய். 6—0—0.

மாதிரிப் பிரதி இனாம்.

லோகோபகாரி பத்திரிகாலயம்,

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 18 } அக்ஷயஷு புரட்டாசிமீ :: 1926-ஷு செப்டம்பர்மீ } பகுதி 9

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

தந்தனன தந்தனந் தந்தனன தந்தனந்
தந்தனன தந்தநந் தந்தனன தந்தநந்—தந்ததான

தண்டையணி வெண்டையம் கிண்கிணிச தங்கையும்
தண்கழல்சி லம்புடன் கொஞ்சவேநின்-
தந்தையினை முன்பரிந் தின்பவுரி கொண்டுநன்
சந்தொடம ணைந்துநின் றன்புபோலக்;
கண்டுறகட டம்புடன் சந்தமகு டங்களும்
கஞ்சமலர் செங்கையும் சிந்துவேலும்-
கண்களுமு கங்களும் சந்திரநி றங்களும்
கண்குளிர என்றன்முன் சந்தியாவோ?
புண்டரிக ரண்டமும் கொண்டபகி ரண்டமும்
பொங்கியெழ வெங்களம் கொண்டபோது-
பொன்கிரியெனஞ்சிறந் தெங்கினும்வளர்ந்துமுன்
புண்டரிகர் தந்தையும் சிந்தைகூர;
கொண்டநட னம்பதம் செந்திலிலும் என்றன்முன்
கொஞ்சிநட னங்கொளுங் கந்தவேளே!
கொங்கைகுற மங்கையின் சந்தமணம் உண்டிடும்
கும்பமுநி கும்பிடும் தம்பிரானே.

(ப-ரை.) புண்டரிகர் அண்டமும்—(திருமாலின் உந்தித்) தாமரையில் தோன்றிய பிரமதேவரது அண்டமான பிரமாண்டமும், கொண்ட பகிர் அண்டமும்-(அவ்வண்டத்தைத் தன்னகத்தே) அடக்கிக்கொண்டுள்ள பேரண்டமும், பொங்கி எழ—கொதித்துக் கிளம்புமாறு, உக்கிரமான கோபத்துடன், வெம்களம் கொண்டபோது-கொடிய போர்க்களத்தை அடைந்தபோது, பொன் கிரி என அம்சிறந்து—பொன்மலையைப்போல் அழகிற் சிறந்து, எங்கினும் வளர்ந்து—எல்லாப் புறங்களிலும் பெருகி விசுவரூபம் எடுத்துக்கொண்டு, முன் புண்டரிகர் தந்தையும் சிந்தை கூர—முன்பு விசுவரூபம் எடுத்துக்கொண்ட (வரும்) மலரோனாகிய பிரமதேவரது தந்தை(யுமான) திருமால் அதிசயித்து ஆலோசனை செய்யும் வண்ணம், நடனம் கொண்ட—திருவிளையாடலைப் புரிந்த, பதம் செந்திலிலும்—நினது இருப்பிடமான திருச்செந்தூரிலும், என்றன்முன்—அடியேன் முன்னே, கொஞ்சி—அழகாக, நடனம் கொளும்—நிர்த்தனஞ் செய்த, கந்த—கந்தனே! வேளே—கட்டழகு வாய்ந்தவனே! கொங்கைகுற மங்கையின்—அழகிய தனபாரங்களை யுடைய குறப்பெண்ணான வள்ளிநாயகியின், சந்த மணம் உண்டிடும்—(தனபாரங்களின்மீது பூசப்பெற்ற) சந்தனத்தின் வாசனையை (மகிழ்ச்சியுடன்) முகர்பவனும், கும்பமுநி கும்பிடும்—கும்பத்திலுதித்த முநிவரான அகத்தியமா முநிவரால் வணங்கப்படுபவனுமான, தம்பிரானே—நாயகனே! தண்டை அணிவெண்டையம்-(நினது கால்களில் அணிந்துள்ள) தண்டைகளில் பொருந்திய அழகிய சதங்கைகளும், தன்கழல் சிலம்புடன்—இனிய நாதம் பொருந்திய கழல்களுடனும் சிலம்புகளுடனும், கொஞ்சவே—இனிமையாக ஒலிக்கும் வண்ணம், முன் நின் தந்தையினை பரிந்து—முன்பு நினது தந்தையினிடத்து அன்புற்று, இன்பவுரி கொண்டு—இனிமையான விசித்திர நிர்த்தனம் புரிந்து, நல் சந்தொடம் அணைந்து நின்ற அன்புபோல—மிகுந்த சந்தோஷத்துடன் (முக்கணெந்தையை) அணைந்து நின்றபோது காட்டிய அன்பையொத்த அன்பு (அடியேனிடத்தும்) பூண்டு, கண்டு உற—நின்னை (அடியேன் தரிசித்து) நின்னை அடையும் வண்ணம், கடம்புடன்—கடம்ப மலர்மாலையும், சந்தமகுடங்களும்—அழகிய கிரீடங்களும், கஞ்ச மலர் செம் கையும்—தாமரை மலரையொத்த அழகிய கைகளும், சிந்து வேலும்—(பேரொளி) வீசும் வேலாயுதமும், கண்களும்—(கருணைபொழியும்) பன்னிரு கண்களும், முகங்களும்—ஆறுமுகங்களும், சந்திர நிறங்களும் (அம்முகங்கள் வீசும்)சந்திரனையொத்த பிரகாசமும், கண்குளிர—அடியேனது கண்கள் இன்பமடையுமாறு, என்றன்முன்—அடியேன் முன்னே, சந்தியாவோ—தோன்றும்படி நீ என் முன்னே வாராயோ! திருப்புகழ் விருத்தியுரை, 347-ம் பக்கம்.

விவேக போதினி

தொ. 18] அக்ஷய ௵ புரட்டாசி ௴ [ப. 9

இந்திய சரித்திர ஆரம்பம்

• BEGINNINGS OF INDIAN HISTORY

ஒரு தேச சரித்திரம் அதிலுள்ள மனிதர்களின் வாழ்வைப்பற்றிய விஷயங்கள் அடங்கியது. ஆதலால் அங்கு ஜனங்கள் உற்பத்தியான கால முதல் அது ஆரம்பித்ததென்னலாம். ஆயினும் அவர்கள் வாழ்வைப்பற்றி விவரங்கள் நமக்குக் கிடைத்தால் மட்டுமே நாம் அவற்றைக் குறிப்பிடமுடியும். முதலில் மனுஷ்ய வர்க்கம் உலகத்திலுண்டான காலம் இற்றைக்கு 5 முதல் 10 லக்ஷத்துக்கு முந்தினதெனக் கருதப்படுகிறது. ஆயினும் அப்பழைய மனிதர்களைப்பற்றி ஒன்றும் நிச்சயமாக நம்மால் சொல்லமுடியாது. நமக்குக் கிடைத்திருக்கும் சில பொதுவான தகவல்கள் பூதத்துவ நூலோரால் (Geologists) உத்தேசமாகத் தொகுத்துச் சொல்லப்பட்டவையே. மனிதன் பேசுந்திறமை வாய்ந்து மற்ற ஜந்துக்களை அடக்கித் தனக்கு உபயோகப்படுமாறு செய்து தனக்குவேண்டிய ஆயுதங்களையும் செய்துகொண்ட காலத்தியத் தகவல்கள் நமக்கு அத்தியந்தம் ஆச்சரியம் தரத்தக்கனவாக இருக்கலாம். ஆயினும் அவற்றையெல்லாம்பற்றி நமக்குக் கிடைக்கக்கூடிய விவரம் மிகச் சிறிய அளவே.

ஆதலால் நம் பாரத நாட்டில் நாகரிகம் விருத்தியாகி அதன் பலனை நம்முன்னோரால் நூல்கள் முதலியன இயற்றப்பட்ட காலமே நமது தேச சரித்திரத்துக்கு ஆரம்பமெனச் சொல்லவேண்டும். அம் மாதிரி நமது தேசத்தில் முதலில் ஏற்பட்ட நூல்கள் நம்மவரில் இந்துக்களால் தெய்வீகமெனக் கருதப்படும் ரிக் முதலிய வேதங்களாம். ஆயினும் சரித்திர வாராய்ச்சிக்கு இன்றியமையாதெனக் கருதப்படும் காலக்குறிப்பு; அவ்வக்காலத்தில் அரசுபுரிந்த ராஜ பரம்பரைகள்; சிரேஷ்டர்களான அரசரோ, வேறு மனிதரோ செய்த பெருங்காரியம்; முதலியவற்றை நம்மவர் தனித்துக் குறித்திராததினால், நமது தேச சரித்திரத்தைத் தொடர்ந்து ரிக்வேத காலங்களிலிருந்து எழுதப் போதுமான விவரங்கள் இல்லையெனச் சொல்லுவாருமுளர். அப்படிச் சொல்பவர் கிறிஸ்து பிறக்க 600-௵த்துக்கு முன் இருந்து அதை ஒருவாறு தொடர்ச்சியாக எழுத இடமிருக்கிறதென்று அபிப்பிராயப்படுகின்றனர். ஆயினும் இதெல்லாம் முஸ்லீம்கள் இந்தியாவுக்கு வரும் முன்னர் உள்ள ஆதி இந்திய சரித்திரத்தைப்பற்றியே. அவர்கள் இத்தேசத்துக்கு வந்தபோது அம்மதத்தைச்சார்ந்த சரித்திரக்காரர்கள் எழுதி வைத்த புத்தகங்களிருக்கின்றன. அப்படியே ஐரோப்பியரும் இத்தேசத்தில் தாம் நிகழ்த்திய காரியங்களைப்பற்றிச் சரித்திரம் எழுதியுள்ளார்.

ஆகவே முற்காலத்தில் நடந்த விஷயங்களுக்கு ஆதாரம் குறைவென்றே சொல்லவேண்டும். ஆயினும் வேதங்களைப்போல அந்தந்தக் காலத்தில் எழுதப்பெற்ற கிரந்தங்களும் சரித்திர ஆராயச்சிக்குவேண்டிய சாதனங்களென்பதைப்பற்றி தடையில்லை. அக்காலங்களில் நடந்த வரலாற்றைக் கோர்வையாக அறிய முடியவில்லையாயினும், அக்காலத்து ஜனங்கள் மதவிஷயத்திலும் தினசரியையிலும் எதை அனுஷ்டித்து வந்தார்களென்பதற்கு இவை சிறந்த அத்தாக்ஷிகளாம். நமது இதிஹாஸ புராணங்களும் மற்றுமுள்ள கிரந்தங்களும் ஒருவாறு அக்காலங்களிலிருந்த அரசர்களின் பெயர்களையும் அவர்கள் சரித்திரங்களையும் நமக்குத் தெரிவிக்கின்றன. ஆயினும் அவற்றில் எந்த விஷயம் முன் நடந்தது; எது பின்னர் நடந்தது; அவைகளில் கண்டுள்ள விஷயங்களில் எல்லாவற்றையும் உண்மையாக நடந்ததாகவே நாம் மதிப்பதா, அல்லது அவற்றுள் சில அக்காலத்து அரசர்களையோ, ஆசிரியர்களையோ சிறப்பித்துச் சொல்ல ஏற்பட்டனவென்று விட்டுவிடுவதா; அவைகளில் எங்கெந்த பாகங்கள் புதிதாக வழக்

நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த வில்லாண்மை யாக்கிக் கொளல்.

கத்தில் வந்துள்ள காரியங்களுக்குத் தொன்மை ஏற்படுத்திக் காட்டவென்று வரிபிளந்து சேர்ச்கப்பட்டிருக்கின்றன; என்னும் இவைகளை ஆராய்ச்சி செய்வது அவசியமாகிறது. உதாரணமாக: மகா பாரதத்தில் உள்ள லக்ஷம் கிரந்தங்கள் இன்னின்ன பாகங்களில் இவ்வளவு இவ்வளவு இருக்கின்றனவென ஒரு காலத்தில் கணக்கிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆயினும் வங்காளம், பம்பாய், தென்தேசம் முதலியவிடங்களில் உள்ள மகாபாரதப் புத்தகங்கள் சிற்சில பாகங்களில் ஒன்றிலிருந்து ஒன்று மாறுதல் அடைந்திருக்கின்றன. தக்ஷிணத்தில் வழங்கும் பாரதத்தில் இந்த லக்ஷத்துக்கு அதிகம் சுலோகங்கள் இருக்கின்றன. அம்மாதிரியே இந்தக் கணக்கு எடுப்பதற்குமுன் அவ்விதிகாஸத்தில் பல பாகங்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன என்றும், ஆதிமகாபாரதம் எண்ணுயிரம் கிரந்தங்களுடைய ஒரு சிறு காவியமெனவும் அபிப்பிராயம் வெளிவந்திருக்கிறது. அப்படியே இராமாயணமும் புராணங்களும்.

ஆயினும் இவையெல்லாம் நம்மவர் வெகு காலமாக அனுசரித்து வந்த வழக்கங்களையும், அவர்களுடைய மனோபாவங்களையும், பூஜித்த தெய்வங்களையும், அக்காலங்களில் கையாடிய அரசு முறைகளையும் நன்கு விவரிக்கின்றன.

நமது தேச ராஜாக்கள் அரசாண்டுவந்த காலங்களை ஒருவாறு நமக்குத் தெரிவிக்கச் சாதனங்களில்லாம லிருக்கவில்லை. அவற்றுள் அவ்வரசர்கள் வழங்கிவந்த நாணயங்களில் பதிந்துள்ள உருவமும், நாணயம் அடித்த காலமும், அவர்கள் பெயரும் வெகு பிரயோசனமுள்ளன. இந்நாணயங்கள் ஆங்காங்கு ஒரு சிறிது அகப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கொண்டு நாணய ஆராய்ச்சி நிபுணர் பல விஷயங்களைக் கண்டுபிடித்திருக்கின்றனர். ஆயினும் அவை கால வரையை நிச்சயம் செய்யப்பூர்ணமாக உபயோகமாகவில்லை. அதற்குக் காரணம் நமது தேசத்தில் ஏற்பட்டுள்ள பலவித சகாப்தங்களாகும். சகாப்தமென்பது வருஷங்களை கணக்கிட ஏற்பட்ட ஒரு முறை. கிறிஸ்து சகாப்தம் என்பது அம்மகான் அவதார காலத்திலிருந்து கணக்கிடப்பட்ட வருஷத் தொகுதியைக் குறிக்கும். அம்மாதிரியே ஹிஜிரா என்பது முகம்மது நபீ மெக்காவை விட்டு மதீனாவுக்குப்போன காலத்திலிருந்து செல்லா நின்ற வருஷங்களைக் குறிக்கிறது. விக்கிரம சகாப்தமென்பது விக்கிரமாதித்திய அரசன் அம்மாதிரி ஏற்படுத்திய காலவரைக் குறிப்பை உணர்த்தும். வேறு தேசங்களில் இக்கால வரையறைகள் சந்தேகமில்லாமல் ஏற்பட்டுள்ளன. நமது தேசத்திலோ அப்படியல்ல. முப்பது வெவ்வேறு சகாப்தங்கள் இருக்கின்றனவென ஒரு ஆராய்ச்சிக்காரர் எழுதி யிருக்கிருர். இவற்றுள் ஒன்றுக்கொன்றுள்ள பொருத்தம் தெரியாததினுல் நாணய ஆராய்ச்சியிலிருந்து போதிய பலன் அடையமுடியவில்லை.

அப்படியே இவ்வாராய்ச்சிக்கே உபயோகமான சிலாசாஸனங்களும், தாமிரப்பட்டயங்களும் அவைகளால் ஏற்படக்கூடிய முழுப்பயனையும் தருவதில்லை. பழைய காலத்தில் நம்தேசத்தில் அரசரும் தனவந்தரும் அநேக இடங்களில், முக்கியமாக தேவாலயங்களில், தாம் செய்த தருமத்தைப் பற்றியும் அவை நடக்க வேண்டிய விதங்களைப்பற்றியும் கல்வெட்டு சாஸனங்கள் ஏற்படுத்தி யிருக்கின்றனர். தர்மாத்மாவான அசோக சக்கரவர்த்தி என்னும் பெரியோன் தமது விசாலமான ராஜ்யத்தில் பலவிடங்களில் பாறைகளிலும் கருங்கல் ஸ்தம்பங்களிலும் பௌத்த தருமத்தைப்பற்றி ஜனங்கள் அறியுமாறு சாஸனங்கள் வெட்டியுள்ளார். சில இடங்களில் அரசர்கள் தமது பெருமையைச் சிலாகித்து பிரசஸ்திகள் எழுதச்சொல்லி அவற்றைக் கல்லில் பதிப்பித்திருக்கிறுர்கள். அம்மாதிரி சரித்திர ஆராய்ச்சிக்காரர் கண்டுபிடித்திருக்கும் சாசனங்கள் அநேக ஆயிரங்களாம். இவையெல்லாம் அவ்வாராய்ச்சிக்கு மிக்க உபயோகமாக இருக்கின்றன. ஆயினும் ஒவ்வொரு முக்கிய அரசனும் தான் ராஜ்யமாள ஆரம்பித்த காலமே முக்கியமானதென நினைத்துப் புது சகாப்தமேற்படுத்துவதுடன் அக்காலத்தில் வழங்கி வந்த மற்ற சகாப்தங்களைக் குறிப்பிடாது சாஸனங்களேற்படுத்தினுல், அவன் காலத்தில் இருந்தவர்களுக்கு அதைப்பற்றிச் சந்தேகமில்லாவிடினும் அவனுக்குப்பின் இத்தனை காலம் கழித்து அச்சாஸனங்களை ஆராய்ச்சி செய்பவர் அந்த சகாப்தம் எப்பொழுது ஏற்பட்டதெனக் காண்பது கடினமல்லவா?

எனினும் இச்சாஸனங்கள் இந்திய சரித்திரத்தை ஒருங்குபடுத்த எவ்வளவோ பயன்பட்டிருக்கின்றன. சில ஆசிரியர்கள் அவைகளையே

இச்சரித்திரத்துக்குப் பெரிதும் உபயோக மானவையெனக் கருதுகின்றனர்.

அம்மாதிரியே பழையகாலப் பட்டணங்களி லுள்ள கட்டடங்களையும், மற்றுமுள்ள சித்திர வேலைகளையும் பரிசீலனை செய்து அநேக விஷ யங்களைத் தெரிந்துகொள்ள சாத்தியமாகின்றது. இவையெல்லாம் தற்காலத்தில் மண்ணால் மூடப் பட்டுப் புதைந்து கிடக்கின்றன. அவைகளை வெட்டிப்பார்த்து அவற்றில் உள்ள விக்கிரகங் கள், படங்கள், அவைகள் இருக்கும் பூஜா கிர கங்கள், ஸ்தூபிகள், அரண்மனைகள் முதலிய வைகளைப் பரிசீலனை செய்வதால் பலவிதப் புஸ் தகங்களைப் படிப்பது முதலியவற்றால் ஏற்படும் விஷயங்கள் பொருத்தமாக இருக்கின்றனவா எனப் பார்க்கச் சாத்தியமாகின்றது.

அம்மாதிரி மண்ணில் பதிந்துகிடக்கும் பழைய பட்டணங்கள் பல. வட இந்தியாவில் தக்ஷசிலம் என்னுமிடத்தில் மண்ணை வெட்டி எடுத்ததி லிருந்து தெரியவந்த விஷயங்கள் மிகவாம். பாட லீபுரம் என்னுமிடத்தில் சில வருஷங்களுக்கு முன் இவ்வேலை நடந்தது. தற்காலம் ஸிந்து மாகாணத்தில் மோஹேஞ்ஜோ டோரோ என் னுமிடத்திலும் ஹாரப்பா என்னுமிடத்திலும் இப்பரிசீலனை நடந்துகொண்டிருக்கிறது. தென் இந்தியாவிலும் இவ்வேலை நடக்கிறது. திருநெல் வேலிக்கடுத்த ஆதித்த நல்லூரில் ஒரு பழைய பட்டணம் மண்ணைத் தோண்டியதனால் வெளிப் பட்டிருக்கிறது.

இவை தவிர சீனதேசத்திலிருந்தும், கிரேக்க ரோம சரித்திராசிரியர்க ளிடமிருந்தும் நமது தேசத்துப் பழைய காதையைப்பற்றிப் பல குறிப் புகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. பௌத்த சமயத்தை மேற்கொண்ட சீனத்தர் அம்மதாசா ரியர் இருந்து பிரசாரம் செய்த தேசத்தில் தாம் அறியக்கூடியவற்றை அறிந்துபோகவும், மேலும் பௌத்தர்களால் புண்ணிய ஸ்தலங்கள் எனக் கருதப்படும் இடங்களுக்கு வந்து தரிசித்துப் போகவும் வெகு சிரமப்பட்டு இங்கு வந்தனர். அவர்கள் எழுதியுள்ள புத்தகங்கள் அந்தந்தக் காலங்களில் நிகழ்ந்த சமாசாரங்களுக்கு நல்ல அத்தாக்ஷிகளாக இருக்கின்றன. அம்மாதிரியே கிரேக்க ரோம சரித்திராசிரியர்களும். மகா அலெக்சாண்டர் என்னும் கிரேக்க வீரன் லோக சாம்ராஜ்யம் பெற எண்ணி மாஸிடன் என்னும் தனது தேசத்திலிருந்து திக்விஜயத்துக்கு ஆரம் பித்து அக்காலத்தில் நாகரிகம் பெற்றிருந்த ஐரோப்பிய ஆப்பிரிக்க, ஆசிய கண்டங்களிலுள்ள தேசங்களை வசப்படுத்தி இந்தியாவில் ஸிந்து நதிக்கு இப்பாலும் வந்து போயினனெனப் பின் னர் சொல்லுவோம். அவ்வி ராஜஸிம்ஹத்தி னுடன் வந்தவர்கள் அக்கதையை விசேஷமாக எழுதி யிருக்கின்றனர். அக்காலத்தில் இந்தியா வுக்கும் மேற்கிலுள்ள தேசங்களுக்கும் ஏற்பட்ட சம்பந்தத்தின் பலனைப் போக்குவரத்து உண்டா யிற்று. அந்தந்தக் காலங்களில் இங்கு வந்தோர் தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும்பற்றி எழுதியிருக்கிறார்கள். ஆயினும் அப்புத்தகங்க ளெல்லாம் இப்பொழுது நமக்குக் கிடைக்க வில்லை. ஆங்காங்கு அவற்றிலிருந்து பெயர்த் தெழுதிய சில பாகங்கள் மாத்திரமே நமக்குக் கிடைத்திருக்கின்றன. இன்னும் நமது தேசத் தைச் சுற்றியுள்ள தேசங்களிலிருந்து அநேக தகவல்களும் கிடைக்கலாம். உதாரணமாக: இந்தியாவின் வட மேற்கெல்லைப் பிராந்தங்களில் ஆராய்ச்சிசெய்து வரும் ஸர். ஆரெல் ஸ்டெய்ன் என்பவர் அங்கும் க்ஹோ(ட்)டான் என்னும் பிரதேசத்திலும் தாம் கவனித்துள்ள விஷயங் களைக் கொண்டு ஏற்கெனவே சரித்திரக்காரர்கள் எழுதியுள்ள விஷயங்களில் சிலவற்றைக் கண் டித்தும், மற்றவைகளை ஊர்ஜிதப்படுத்தியு மிருக் கிறார்.

ஆயினும் இங்கெல்லாம் வேலைசெய்யும் ஐரோப் பியருடன் அந்த தேசங்களிலேயே பிறந்து கல்வி கேள்விகளில் சிறந்து தம் நாட்டு நூல்களை ஆராய்ச்சி செய்பவல்ல ஆப்கானியரும் துருக்கி ஸ்தானத்தாரும் பாரஸீகத்தாரும் இந்தியா வுக்கு கிழக்கிலுள்ள பர்மா, சீயம் சம்(ப்)பா என்னும் ஏனம், மலேயத் தீவுப்பிராந்தங்கள் முதலியவற்றிலுள்ள ஜனங்களும் முன்வந்து ஆராய்ச்சிசெய்து தமக்குக் கிடைத்த விஷயங் களை எல்லாம் ஒத்திட்டுப் பார்த்துத் தொகுத்த சரித்திரந்தான் நாமெல்லோரும் சரியென ஒப் புக்கொள்ளும் கிரந்தமாகும். அது ஏற்படுவது எக்காலமோ?

* * *

நமது தேசத்தில் பூர்வகாலத்திலிருந்த பூமி அராவலிமலையையும் விந்திய பர்வதத்தையும் வடக்கிலுடையதாய் மேற்கு கிழக்குத் தொடர்ச் சிமலைகளினிடையேயுள்ள முக்கோண வடிவான பிரதேசம். இங்கு வெகுகாலமாக மனிதர் வசித்து

வந்ததாக ஏற்படுகின்றது. மனுஷ்ய வர்க்கம் புதிதாய் உலகத்தில் உதித்ததே இங்குதான் என்று உரைக்கும் சரித்திராசிரியருமுளர். அந்த ஜனங்கள் மரக் கழிகள், கற்கள், எலும்புகள் முதலியவற்றை ஆயுதமாக உபயோகித்துள்ளார். அவர்கள் மழைக்கும் வெயிலுக்கும் தங்குமிடம் மரத்தடியும் பாறைகளின் அடிவாரமும் குகைகளுமே. அவர்கள் ஆகாரம் வேட்டையாடிய மிருகங்களும் காட்டில் அகப்படும் பதார்த்தங்களுமா யிருந்திருக்கவேண்டும். அவர்களுக்கு மண் பாண்டங்கள் செய்யத் தெரியாது. அவர்களுடைய எலும்புமுதலியன அகப்படுமிடங்களில் கருங்கல்லால் செய்த கருவிகளைத் தவிர இரும்பு முதலிய உலோகங்களால் ஆனவை ஒன்றும் அகப்படாததால் அவர்களுக்கு உலோகங்களைப் பற்றிய ஞானமே கிடையாது எனக் கருதப்படுகிறது. அவர்கள் உபயோகித்துவந்த கல் கருவிகளும் உடைக்கவும், வெட்டவும், தொளை போடவும், சீவவும் உபயோகமாகும்படி வெகு சிரமத்துடன் செய்யப்பட்டுள்ளன. இவைகள் முறடாகவும், அழகில்லாமலும் இருப்பதால் இவைகளைச் செய்தவர்களுக்கு அம்மாதிரி ஆயுதம் செப்பனிடுவதில் சாமர்த்தியம் போதாதென்றே ஏற்படும். இவர்களுக்குப் பழங்கற்கருவி மனிதர் எனவும் இவர்கள் இருந்த காலத்துக்கு பழங்கற்கருவிக்காலமெனவும் பெயரிட்டு அழைப்பர். இவர்கள் நமது தேசத்தில் பதினாயிரக் கணக்கான வருஷங்கள் இருந்திருக்கவேண்டும். இந்த வர்க்கத்தாரின் சந்ததியார் நமது தேசத்தில் இப்பொழுதும் இருக்கிறார்களோ வென்பது சந்தேகம்.

பழங்கற்கருவிமனிதர்களுக்குப் பிறகு வெகு காலம் கழித்துவந்தவர் புதுக்கற்கருவி மனிதர். இவர்கள் முன் சென்றவர்களின் சந்ததியாரென்று சொல்லுவதற்கில்லை. இவர்களும் கற்கருவிகளையே உபயோகித்து வந்தனரெனினும், அக் கல் ஆயுதங்கள் நன்றாகத் தேய்க்கப்பட்டு மழ மழவென்று அழகாக விருந்தன. நமது ராஜதானியில் பல்லாரி ஜில்லாவில் இவைகள் விசேஷமாக அகப்பட்டன. இந்த வர்க்கத்தார் மண் பாண்டங்கள் செய்யக் கற்றுக்கொண்டனர். முதலில் கையாலும் பிறகு குயவன் திரிகையாலும் அவற்றைச் செய்தனர். மிருகங்களைப் பழக்கித் தமக்கு உபயோகமாகும்படி செய்து கொண்டார்கள். நிலத்தையும் சாகுபடி செய்துவந்தனர். எனவே பழங் கற்கருவிக் காலத்தாரை விட இவர்கள் நாகரிகம் படைத்தவர்கள்.

இவர்கள் தம்மிலிறந்தோரைப் புதைக்கக் கருங்கற்களால் கல்லறைகள் கட்டினர். அடியில் ஒரு கல்லைப் புதைத்துப் பக்கங்களில் பலகை போன்ற கற்களை நட்டு மேலே ஒரு கல்லால் மூடப் பெற்றுள்ள இக்கல்லறைகளைத் தீபகல்ப பாகத்தில் எங்கும் காணலாம். அவற்றுள் பழையனவற்றில் உலோக ஆயுதங்களே கிடையாது. பின்னர் கட்டப்பட்ட கல்லறைகளில் வடக்கே தாமிர ஆயுதங்களும், தெற்கே இரும்பு ஆயுதங்களும் காணப்படுகின்றன. இதிலிருந்து இப் புதுக்கற்கருவிமனிதர் முதலில் உலோகங்களைத் தெரிந்துகொண்டிராவிடினும் நாளா வட்டத்தில் அவற்றின் பிரயோஜனத்தை அறிந்து அவற்றாலாக்கிய ஆயுதங்களை உபயோகித்து வந்தனரெனத் தெரிகிறது. அவர்களில் வடக்கிலுள்ளவர் முதலில் தாமிரத்தையும் பிறகு தாமிரத்துடன் வெள்ளீயம் கலந்த வெண்கலத்தையும் ஆயுதங்கள் செய்ய உபயோகித்தனர். தெற்கிலுள்ளோருக்கு ஆதியிலேயே இரும்பை உருக்கும் சாமர்த்தியம் ஏற்பட்டு விட்டபடியால் அவர்கள் அவ் வுலோகத்தினாலேயே முதலிலிருந்து தங்களுக்கு வேண்டிய ஆயுதங்களைச் செய்துகொண்டனர்.

உலோக ஆயுதங்களைச் செய்தனரென்றால் சுரங்கங்களிலிருந்து இரும்பு அல்லது தாமிரம் கலந்த மண்ணை வெட்டியெடுத்து உருக்கும் திறமை அதைச் செய்வோருக்கு இருந்ததென ஏற்படும். இந்த வர்க்கத்தார் அம்மாதிரி உலோகக் கனிகள் இருக்குமிடங்களையும் இரத்தினங்கள் கிடைக்குமிடங்களையும் கண்டுபிடித்து அவைகளில் வேலை செய்தனரென்பதில் சந்தேகமில்லை. திருநெல்வேலி ஜில்லாவில் தாம்ரபர்ணியை ஒட்டி முத்துச்சிப்பி எடுத்தும் சங்கெடுத்தும் அவர்கள் வியாபாரம் செய்தனரென்பதில் சந்தேகமில்லை. இப்புதுக்கற்கருவிமனிதர் நம் தேசத்தில் மாத்திரமல்ல, உலகத்தில் அவர்கள் பரவிய இடங்களிலெல்லாம் உலோகத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி விலைபெற்ற சாமான்களை வியாபாரம் செய்தனரென்பது பல தேசங்களில் செய்த ஆராய்ச்சிகளால் புலப்படும். இந்தியாவில் ஹைதராபாத் சமஸ்தானத்தில் மஸ்கி என்னுமிடத்தில் வெகு ஆழம் வெட்டி

அவர்கள் தங்கம் எடுத்தாரென்பது அங்குள்ள பழங்குழிகளிலிருந்து ஏற்படுகிறது.

இத் தேசத்தில் அயலிடமிருந்து முதலில் வந்து குடியேறினவர்கள் திராவிடர். இவர்கள் முதலில் இருந்த தேசம் மத்திய ஆசியாவின் கிழக்குப் பாகமாகும். ஆயினும் இவர்கள் இந்தியாவின் மேற்கிலுள்ள கணவாய்களின் வழியாய்த் தான் நமது தேசத்துக்கு வந்திருக்கவேண்டும். அதற்குக் காரணம் வடக்கிலுள்ள மலைத்தொடர்களும் மிகக் குளிரான திபெத் பீடபூமியுமாம். அவை நேராக அவர்களை உள்ளே வராவண்ணம் தடுத்தன. இத்திராவிடர் இந்தியா முழுதும் பரவியிருந்தனர். அவர்களுக்குப் பின்னர் இத்தேசத்துக்கு வந்த வர்க்கத்தாரோடு கலந்தனர். ஆயினும் இவர்கள் ஒரு தனிவர்க்கமாகக் காணப்படுவது தென்னிந்தியாவில்தான். அதற்குப் பல காரணங்களுண்டு. அவற்றுள் முக்கியமானது நமது தேசத்தின் பிரகிருதி விசேஷமாகும். மேற்கு மலைத் தொடரும், விந்தியசாத்பூரா மலைகளும், மகா காந்தாரமும், வட இந்தியாவில் அடுத்தடுத்து வந்து நிறைந்த ஜனங்களைப் பெரும்பாலும் தென்னிந்தியாவுக்கு வராமல் செய்துவிட்டன. இப்பொழுது தென்னிந்தியாவில் திராவிட பாஷைகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் முதலியவை அவர்கள் பேசிவந்த பாஷைகளிலிருந்து வழுவி வந்தவையே வடக்கிலுள்ள ஜனங்கள் பின்னர் வந்து குடியேறின ஆரியர் பாஷைகளைக் கற்று சம்ஸ்கிருதத்திலிருந்துபிறந்த பஞ்சாபி, காஷ்மீரி, ஹிந்தி, வங்காளி, ஒட்ரம், மராத்தி முதலிய பாஷைகளைப் பேசலுற்றனர். ஆயினும் அவற்றைப் பேசுபவரெல்லாம் ஆரியரல்லர்.

திரவிட பாஷையின் ஒரு பிரிவான ப்ராஹ்வி பலுசிஸ்தானத்தில் பேசப்பட்டு வருகிறது ஆதலால் திராவிடர் மேற்கிலிருந்து இந்தியாவில் வந்து குடியேறினதாக நினைக்க இடம் தருகின்றது. சில ஆசிரியர்கள் திராவிடர் இந்தியாவிலிருந்து பலுசிஸ்தானத்துக்குப் போயிருக்கலாமென நினைக்கின்றனர். ஆயினும் அயல்தேசத்தார் நமது தேசத்தை படையெடுத்து வருவதே வழக்கமாயிருக்க, யாரும் இங்கிருந்து அயல் தேசத்துக்குப் போனதாகச் சொல்லுபவரே கிடையாது.

இத்திராவிடர் ஆதியிலேயே விசேஷமான நாகரிகம் படைத்தவர். அயல் தேசங்களோடு வியாபாரமும் தமது நாட்டிலேயே விவசாயமும் கைத்தொழிலும் செய்து, தனவந்தராய் அவர்கள் பெரிய பட்டணங்கள் கட்டிக்கொண்டு வாழ்ந்தனர். தமது பாஷைகளை, முக்கியமாய் தமிழை, அபிவிருத்திசெய்து அதில் சிறந்த நூல்களை எழுதினர். இந்தியாவில் அக்காலத்தில் ஜனங்கள் தாம் பேசிவந்த பல பாஷைகளை மறந்து ஸம்ஸ்கிருதத்திலிருந்து உற்பத்தியானவைகளையே பேசிவர, இத்திரவிட பாஷைகளும், அவற்றில் முக்கியமாய் தமிழும், இப்பொழுதும் பேசும் பாஷைகளாக வளர்ந்துவருவது அவற்றின் மேன்மையையே உணர்த்தும். வைதிக மதங்களென வழங்கும் ஸ்மார்த்த வைஷ்ணவ மத்வ சித்தாந்தங்களில், வைஷ்ணவ சித்தாந்தத்தை நிர்த்தாரணம் செய்தவர் தமிழையும் தெய்வ பாஷையெனக் கருதி ஆழ்வார்கள் எழுதியுள்ள நாலாயிரம் பாசுரங்களையும் திராவிட வேதம் எனக்கருதியது அப்பாஷையில் ஆரியர்க்கே ஏற்பட்ட மதிப்பைக் காட்டும். தற்காலத்தில் தென் இந்திய ஆரியர்கள் பேசும் பாஷைகள் திரவிட பாஷைகளாம்.

அடுத்த மாதம் :—ஆரியர்களும், அவர்களது மத நூல்களும்.

சாரணச் சிறுவர்கள்:—1929-ம் வருஷத்தில் சாரண இயக்கத்திற்கு 21 ஆண்டு ஆய்விடும். அப்பொழுது ஒரு பெரிய ஜம்போரீ நடத்தப்படும். பல தேசங்களிலிருக்கும் சாரணச் சிறுவர்கள் அக்காலம் ஒன்று கூடுவார்கள்.

இவ்வியக்கத்தால் பிரயோஜனமுண்டா? நமது சிறுவர்களின்குணம் இதனால் மாறுபடுகிறதாவெனக் கேட்கலாம். அப்படி யுண்டாகும் எந்தப் பிரயோஜனமும் உடனே தெரியாது. ஆயினும் தேசங்களுக்குள் ஒற்றுமைமை விரும்பும் பெரியோர் சாரண குணம் இவ்வுலகத்தில் பிற்காலத்தில் சண்டையில்லாமல் ஒற்றுமையை உண்டுபண்ணுமென அபிப்பிராயப்படுகிறார்கள். மேலும் சாரண விளையாட்டுகள் சுயநலத்தை வளர விடுவதில்லை. போட்டி விளையாட்டுகளில் சாமர்த்தியம் வாய்ந்த ஒருவர் பயன்படுவதென்பதும், அதற்காகப் பதக்கம் முதலிய பரிசுகள் கொடுப்பதென்பதும் கிடையாது. அம்மாதிரி லாபத்தைக் கருதாமலே வரப்போகும் ஜம்போரீயில், அநேகம் சாரணர் போட்டிபோடுவார்கள் என்பது நிச்சயம்.

இரு வீரபத்தினிகள்

SACRIFICE FOR LOVE

சென்ற சில வருஷங்களுக்கு முன் கோயம்புத்தூரில் இராமகிருஷ்ணன் விசுவநாதன் என்ற இரு வர்த்தகர்களிருந்தனர். அதிக தனவந்தர்களான இவ்விருவரும் ஒருவரையொருவர் மிகவும் நேசித்து வந்தார்கள். இராமகிருஷ்ணனுக்கு ஜயராமன் என்னும் பெயருடன் இருபது வயதுள்ள ஒரு புதல்வனிருந்தான். இவன் திடகாத்திர சரீரத்தோடு மிக்க எழில் வாய்ந்திருந்ததுமன்றி, இக்கதை ஆரம்பிக்க இரண்டு வருஷங்களுக்கு முன்னால் பீ. ஏ. பட்டத்தையும் பெற்றனன். விசுவநாதனுக்கு அழகிலும் குணத்திலும் எங்கும் பிரசித்திபெற்ற ஒரு மகளிருந்தாள். துர்க்கை என்னும் பெயர்கொண்ட அப்பாவைக்கு வயது சுமார் பதினான்கேயிருக்கும். ஜயராமனும் துர்க்கையும் புருஷன் மனைவியாகவேண்டுமென இவர்களது குழந்தைப்பருவத்திலேயே இவர்களது பெற்றோர்கள் உடன்படிக்கை செய்திருந்தனர். ஆனால் பெண் ருதுவான பிறகே மணம் முடிக்க வேண்டுமெனத் துர்க்கையின் தந்தை ஒரு நிபந்தனையும் செய்திருந்தார். இதற்கு இராமகிருஷ்ணன் முதலில் ஒத்துக்கொண்டானாயினும், கொஞ்ச நாட்களுக்குப்பிறகு உடன்படிக்கையை ரத்து செய்துவிடுவதாகப் பயமுறுத்தவே, ஒரு சுபமுகூர்த்தத்தில் துர்க்கை ஜயராமனுக்கு மனைவியாக வாழ்க்கைப்பட்டாள்.

சில மாதங்களுக்குப்பிறகு ஜயராமன் தன் மனைவியைத் தன் வீட்டிற் கனுப்பும்படி தனது மாமனாரை வேண்டவே, துர்க்கையின் தந்தை மறுத்தனன். ஜயராமனது தந்தை தன் மகனுக்கு வேறொரு பெண்ணை மணமுடிப்பதாகப் பயமுறுத்த, துர்க்கையின் தந்தை யாது செய்வதென் றறியாது, அக்கலியாணத்தைக் கோர்ட்டு மூலமாய் நிருத்தி விடுவதாகப் பகர்ந்தனன். இதைக் கேட்டமாத்திரத்தில் இராமகிருஷ்ணன் வழிக்குவர இருவர்த்தகர்களும் ராஜி செய்து கொண்டனர். விசுவநாதனது பயமும் தூரவிலகிற்று. கொஞ்சநாட்களுக்குப் பின்னர், ஜயராமனுக்கு அவனது தந்தை ரகசியமாய் வேறொரு ஊரில் ஒரு பெண்ணை மணமுடிக்க, இச்சங்கதி விசுவநாதனது காதுகளுக்கு மெட்டியது. ஒரு பெண்ணையன்றிப் பலபெண்களை மணஞ்செய்து கொள்ள இடங்கொடுக்கும் நமது கெட்ட இந்து தேச வழக்கத்திற்குத் துர்க்கையும் பலியானாள். இனிமேல் அவள் பெண்ணுமல்ல, பத்தினியுமல்ல, கைம்பெண்ணுமல்ல! சட்டப்படி அவளை விவாகமான ஸ்திரீயெனவே சொல்லலாம்.

நல்ல சுபாவமும், ஈசுவரபக்தியும் நிறைந்த துர்க்கை தனக்குண்டான சங்கடத்தை நினைத்து வருந்தாது தைரியத்தைக் கைவிடாதிருந்தனள். நற்கிரந்தங்களை வாசிப்பதிலும் பாடுவதிலும் மற்றுந் தெய்வத்தைத் துதிப்பதிலும் இவள் நாட்களைக் கழித்து வந்தனள். இவ்வண்ணம் பல நாட்கள் கழிந்தன.

அவ்வருஷம் ஒத்துழையாமை உணர்ச்சி எங்கும் பரவவே, புருஷர்களும் மற்றும் ஸ்திரீகளும் தேசநன்மையை நினைக்க நேரிடும் சமயமாயிருந்தது. சரோஜனிதேவி, பீ அம்மா முதலிய ஸ்திரீகள் எங்குப் தேச நன்மையைக் கருதி பிரசங்கங்களைச் செய்துவந்தார்கள். துர்க்கையும் பாரதமாதாவின் வேண்டுகோளுக்கிணங்கி அவர்களோடு சேர்ந்தனள். தன்னாலியன்றவரை தேசத்தொண்டு புரியத் துணிந்தனள். ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை சூரியன் மேற்கு திசையைக் கிட்டுந்தருவாயில் அவ்வூர் மைதானத்திற்கு ஜனங்கள் கூட்டங் கூட்டமாய்ப் போய்க்கொண்டிருந்தனர். புருஷர்கள், ஸ்திரீகள், குழந்தைகள் எல்லோரும் ஒருமித்து பரதகண்டத்துக் கவியாகிய சரோஜனியைத் தரிசிக்க ஆவல்கொண்டு சென்றவண்ண மிருந்தார்கள். கொஞ்ச நேரத்திற்குள் திடீரெனக் கரகோஷங்களுண்டாகவே, ஸரோஜனியும் அவண்வந்து சேர்ந்தனள் என்று தெரிந்தது. அன்று அவள் செய்த பிரசங்கம் எல்லோர் மனதையுங் கவர்ந்ததெனச் சொல்லவேண்டியதில்லை. ஜனங்களெல்லோரும் பேச்சற்றுப் பிரசங்கத்தை மௌனமாய்க் கேட்டுவந்தனர். பிறகு மற்றுஞ்சிலர் பேச ஆரம்பித்தனர். அவர்களில் மிகவும் மெலிந்தும், ரக்தமற்ற முகத்தோடும், கதருடை தரித்துமிருந்த ஒரு வனிதையும் பேச எழுந்தனள். இவள் யாராயிருக்கலாம்! ஒரு மூலையிலிருந்தெழுந்த மாத்திரத்தில் அங்கிருந்தவர்களது நேத்திரங்களெல்லாம் அவளையே நாடிச்சென்றன. அம்மாது எழுந்திருந்து சபையோரை வணங்கும் பாவனையுடன் தலைகுனிந்து மிருதுவான இனிய குரலில், தேசநன்மையை நாடிப்பேச ஆரம்பித்

தனள். தேசத்தொண்டு புரிந்து வருபவர்களைப் பற்றியும், பாரதமாதாவின் தற்காலத்து வருமை ஸ்திதியைப் பற்றியும், இந்து தேசத்தவர்களது கஷ்டங்களை விலக்கக்கருதி, பெற்ரோர், மனைவி, மக்கள், சுற்றத்தார் முதலியவர்களை விட்டுச் சிறைக்கோட்டம் புகுந்திருக்கும் தேசபக்தர் களைப்பற்றியும்,பேச ஆரம்பித்தனள். தன் உபந்நியாசத்தைக் கேட்டுவந்த ஒவ்வொருவரது ஹிருதயத்தையும் இவள் அபகரித்தனள். இவள் தன் பிரசங்கத்தை முடித்து ஆசனத்திலுட்கார்ந்த மாத்திரத்தில், எங்கும் நிசப்தமே நிலைத்தது. சரோஜனிதேவி உடனே எழுந்திருந்து அங் நங்கையைக் கட்டித்தழுவி, தனக்கருகில் அவளை உட்காரவைத்துக்கொண்டனள். துர்க்கை இவ்வண்ணம் எங்கும் பிரசித்தியடைந்தனள்.

அன்று நடந்த பிரசங்கத்தைக் கேட்டு வந்தவர்களில் நமது ஜயராமனும் ஒருவன். ஆச்சரியக்கடலிலாழ்ந்த ஜயராமனது மனதில் அன்று பல எண்ணங்கள் குடிகொண்டன. ஒருபுறம் மனமகிழ்ந்தான்.மற்ருெருபுறம் தன்னை நொந்து கொண்டான். எவ்விதத்திலும் அவளை யடையவும், அவளது சரணங்களின் கீழ் உட்கார்ந்து அவளைப் பூஜிக்கவும் இச்சை கொண்டனன். அவளுடன் பேச ஆவல் கொண்டானுயினும் தைரியம் அவனை விட்டகன்றது. வீட்டிற்குத் திரும்பிவந்தும் அவளது நினைவு அவனை விட்டகலவில்லை. அன்றிரவு முழுதும் நித்திரையேயில்லாது படுக்கையி லுட்கார்ந்திருந்தனன். மிக்கநேரம் யோசித்திருந்தபின் ஒரு நிருபத்தைப் பின்வருமாறு எழுதிமுடித்தனன்.

தேவதையே !

தூபத்தாலும், புஷ்பத்தாலும் தேவதைகளை அழைத்துப் பூஜிப்பது வழக்கம். நானும் அவ்வண்ணமே உன்னைப் பூஜிக்கத் தயாராயிருக்கின்றேன். நேற்றுமாலை நடந்த பிரசங்கத்தில் பிரசித்தியடைந்த நீ, இந்த அபாக்கியசாலியாகிய என்னையேற்றுக் கிருபை கூர்ந்து என்னிடம் திரும்பிவருவாயாகில், நான் என் வாழ்நாளுள்ளவரை உனது உண்மையான கணவனுகவும் அடிமையாகவும் பக்தனுகவும் இருப்பேனென்பதிற் சந்தேகமில்லை.

இப்படிக்கு

ஜயராமன்.

துர்க்காதேவியினது பதில் பின்வருமாறு இருந்தது.

பிராணேசா !

நான் இவ்வளவு புகழ்ச்சிக்கும் பாத்திரமல்ல. ஒரு காட்டுப்புஷ்பம் தூரப்பார்வைக்கு மிக்க அழகாகவே தோன்றுகிறது. ஆயினும் ரோஜா ரோஜாவே! தற்காலத்தில் இரண்டு பத்தினிகள் ஒருமித்திருப்பது அசாத்தியமே. நேற்றுமாலை நடந்த பிரசங்கத்திற் பிரசித்தியடைந்தவள் சரோஜனியுமல்ல; நானுமல்ல. ஆனல் நமது தேசமே! நாங்கள் செய்துவரும் தேசத் தொண்டை நமது பாரதமாதாவும் அங்கீகரிப்பாளென்பதிற் சந்தேகமில்லை. நமது தேசமோ அதிகப் புராதனமானது. தொன்று தொட்டு ஸ்திரீகள் எங்கும் எப்போதும் போற்றப்பட்டு வந்துள்ளார்கள். அவமதிக்கப்பட்ட ஒரு மனைவி எவ்வளவு புகழ்ச்சிக்குட்பட்ட போதிலும் திரும்பிவருவது அசாத்தியமே! இதுவுமன்றி தேசவழக்கமோ அல்லது சட்டமோ இதற்கிடங்கொடுக்குமேயாயினும், ஒருஹிருதயமே குடும்ப நெருப்பை அணையவொட்டாமற் தடுத்திருக்க முடியும்.

அநேக நமஸ்காரம்,

துர்க்கை.

இக்காகிதத்தைப் படித்த ஜயராமன் மிக்க வியாகூலத்திற்குள்ளானுன். துர்க்கை சொல்லுவதும் நியாயமெனப்பட்டது. துர்க்கையை விடவும் மனமில்லை. சமீபத்திலேயே கலாசாலையை விடுத்து வந்துள்ளானுதலால், தனது பெற்ருேர்களைத் தடுத்து, அவர்களது நியாயவிரோதமான ஆக்ஞையை மறுக்கமுடியாமற் றவித்தான். அவளது நிருபம் அவளை அதிகமாய் நேசிக்கவும், மேன்மைப்படுத்தவும் அவனைத் தூண்டியது. அவளின்றி எங்கும் சூனியமாகத் தோற்றிய போதிலும் தைரியத்தை இழந்தவனல்ல. கூடிய சீக்கிரத்தில் அவளை அடைவோமென எண்ணினுன்.ஆனல் அவன் மனதிற்குக் கொஞ்சமேனும் அமைதி உண்டாகவில்லை. அடிக்கடி தன் வேலையை விடுத்து யோசித்தவண்ணம் வெறும் வெளியை நோக்குவான். அடிக்கடி தன் கன்னங்களில் மெதுவாக வடிந்துவருங் கண்ணீரைத் துடைத்துக்கொள்ளுவான். அவனது இரண்டாவது மனைவி ருக்மணிக்கு வயது பதினறிருக்கும். இவள் கிராமத்தில் வளர்ந்து வந்த பெண்ணு

யிருந்தபோதிலும், தனது கணவனது முகத்திலுள்ள வேறுபாட்டை உடனே அறியும் சக்தி வாய்ந்திருந்தனள், பள்ளியிற் பயிலாப்பெண்ணுயிருந்த போதிலும், ஹிருதயத்தை அறியுஞ் சக்தி வாய்ந்திருந்தனள் கணவனது நனைந்த நேத்திரங்கள், வெளுத்த கன்னங்கள், அலங்கோலமாயணிந்திருந்த ஆடைகள் இவைகளின் காரணத்தையறிய அதிகநேரம், பிடிக்கவில்லை. ஜயராமனும் ஒவ்வொரு நாளிரவுங் கனவுகண்டு, 'துர்க்கா! துர்க்கா என்று கதறுஞ் சொற்களும் இவள் காதில் விழுந்துவந்தன.

துர்க்கையைக் குறித்து எவ்வளவுதான் கதறிய போதிலும் அவள் வந்தவளல்ல. நாட்கள் வாரங்களாயின. வாரங்கள் மாதங்களாயின.

ஒருநாள் சாயங்காலம் அவ்வூர் ஸ்திரீசங்கத்தின் ஓர் அறையில் இரண்டு ஸ்திரீகள் பேசிக்கொண்டிருந்தனர். இவர்கள் யாராயிருக்கக்கூடும்? இவர்களில் ஒருத்தி தனது சகோதரிகளின் முன்னேற்றத்தைக் குறித்து முயன்றுகொண்டிருந்த துர்க்கையே! மற்ருெருவள் ருக்மணியெனச் சொல்ல வேண்டியதனவசியம். இவர்களிருவருக்கும் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது.

ருக்:—சகோதரி! நான் ஒருகாரியத்தைக் குறித்துத் தங்களிடம் ஆலோசிக்க வந்துள்ளேன்.

துர்.—சகோதரிகளுக்கு ஊழியஞ்செய்ய நான் தயாராயிருக்கிறேன்.

ருக்:—பிரேமைக்குப் பிரதிபலனென்ன ?

துர்:—பிரேமையே!

ருக்:—என்னை ஒருவர் அதிகமாய் நேசித்து வரும்பொழுது, நானும் அவர் நேசத்திற் குட்படலாமா ?

துர்:—ஆமாம்! அவர் உனது நேசத்திற்குச் சரியான பாத்திரனுயிருக்கும் பக்ஷத்தில்!

ருக்:— இல்லாவிடிலோ ?

துர்.—அப்பொழுதும் அவரிடம் மனமிரங்குவது நியாயமே.

ருக்:—ஒருவர் தான் நேசித்து வரும் ஒருவளையடைய இரவும் பகலும் வருந்துங்கால், அவள் அவரை நாடிச்செல்லவேண்டியது நியாயமல்லவா ?

துர்.—நேசமும் மானமும் சம்பந்தப்படில் நியாயமல்ல.

ருக் :—பிறரைச் சந்தோஷப்படுத்துவது கடமையல்லவா ?

துர்:—உண்மையே பெரிய கடமை.

ருக்:—மூடத்தனத்தால் பிறர் சொல்லைக் கேட்டு எனது கணவன் என்னைத் துரத்தி, வேருெரு பெண்ணை மணஞ்செய்து கொண்டார் என நினைத்துக்கொள்ளுங்கள். இப்பொழுது அவர் தான் செய்துள்ள பிசகைக் குறித்து வருந்துகின்றனர். அவர் வேருெருபெண்ணை மணந்திருந்தும் என்னை வருந்தி அழைத்தால் நான் அவரை நாடிச் செல்லுவது நியாயமாமோ ?

துர்:—இருவர் ஒரு வீட்டிலிருக்க முடியுமா? நீ அதை நல்லதென நினைக்கிருயா ?

ருக்:—இல்லை. ஆனல் நேசம் அதிகமா யிருக்கிறதே!

துர்:—ஊழியஞ் செய்வதே சிலாக்கியம்!

ருக்:—அவள் வேறெங்கேனுஞ் சென்றுவிடில், நான் என் பர்த்தாவிடஞ் செல்லலாமோ?

துர் :—ஆம். நீ இச்சைகொண்டால்.

ருக் :—நீங்களவ்விதஞ் செய்வீர்களோ ?

துர்.—இதற்கு உத்தரமுரைப்பது கடினமே. ஒருவேளை போனலும் போகலாம்.

இவர்களது சம்பாஷணை இத்துடன் முடிவு பெற்றது. ருக்மணி துர்க்கையின் உத்தரவு பெற்றுத் தன் வீடுபோய்ச் சேர்ந்தாள்.

அன்றிரவு ஜயராமன் ஆகாரமுண்டபின், மாடியறையில் உட்கார்ந்திருந்தனன். ருக்மணி படுக்கையை விரித்துக் கீழே சென்றனள்.

ஜயராமன் துர்க்கையை நினைத்து நினைத்து மனதிற்கொண்ட துக்கத்தை யகற்றவேண்டி ருக்மணியோடு சம்பாஷிக்க அவாக்கொண்டவனுய் அவளை அழைத்தனன். ஆனல் பதிலொன்றும் வரவில்லை. வீடு முழுதும் தேடினனுயினும், ருக்மணியைக் காணவில்லை. ஆச்சரியமுற்று யாது செய்வதென்றறியாது மலைத்தனன். எதிரிலிருந்த மேஜையின்மேல் காற்றில் பறந்து போகாவண்ணம் வைக்கப்பட்டிருந்த ஒரு சிறு சலவைக் கல்லுக்குக் கீழிருந்த காகிதத்தை நாடி இவன் நேத்திரங்கள் சென்றன. அவசரமாக அதை எடுத்து வாசித்தனன். அதில் பின் வருமாறு வரையப்பட்டிருந்தது.

நாதா !

இக்காகிதம் உமது கைக்கு அகப்படுவதற்குள் நான் மிக்க தூரம் போயிருப்பேன். நான் உயிருடனிருப்பது, உம்மை நினைக்கவும் உம்மைக் கனவு காணவும் உம்மை நேசிக்கவுமே! நாதா! நானுமம்மை வெறுத்துச் செல்லுவதாக நினைக்

கக் கூடாது. அழகிலும், புத்தியிலும் என்னை விடப் பன்மடங்கு சிறந்த வேறொருத்திக்கு இடமுண்டாக்கவே நான் செல்லுகிறேன். சீக்கிரத்தில் நாம் ஒருவரையொருவர் சந்திப்போம். என்னை வேலைக்காரியாகத் தம்மிடம் வைத்துக் கொள்ள இஷ்டமிருக்குமாயின் நான் உங்களை சீக்கிரம் தரிசிப்பேன். வஸ்திரங்களைத் துவைக்கவும் சமையல் செய்யவும் வீட்டைச் சுத்தஞ் செய்யவும் தயாராயிருக்கிறேன். கிணற்றிலிருந்து ஜலம் கொணர்வேன். நாதா! நாம் சீக்கிரம் சந்திப்போமென என்னற்ப அறிவுக்குத் தோற்றுகிறது.

நேசித்து ஊழியஞ் செய்யும்
ருக்மணி.

ஜயராமனது மனம் அச்சமயம் என்ன பாடு பட்டிருக்குமெனச் சொல்ல வேண்டிய தனவசியமே. அவ்வீட்டில் மற்றொரு பாகத்திலிருந்த தன் தாயிடம் ஓடினன். ஒருவேளை நமது வீடுகளில் துரதிர்ஷ்ட வசத்தால் வழக்கமாய் நடந்து வருவதுபோல், தன் தாயுடன் அவள் சண்டையிட்டுக் கொண்டனளோவென எண்ணினன். என்ன விசாரித்தும் காரண மொன்றும் வெளிப்படவில்லை.

ஜயராமன் அன்றிரவு கொஞ்சமேனும் கண்களை மூடினவனல்ல. மறுநாட்காலை, துர்க்கைக்கு இச்சங்கதி தெரிந்திருக்கலாமென எண்ணினவனாய் ஸ்திரீ சங்கத்திற்குச் சென்றனன். அவனைக் கண்ட துர்க்கை வழக்கம்போல் அவனை வரவேற்று உபசரித்தனள். ஜயராமன் உடனே அவளை நோக்கி, "துர்க்கா! நான் உன்னை வீட்டை விடுத்துத் துரத்தினேன். இப்பொழுது எனது ருக்மணியும் என்னை விடுத்துச் சென்றனள். நான் ஏகாந்த வாசத்திற் குள்ளானேன். நீ ருக்மணியை அறிவாயா? அவள் எங்கிருக்கிறாளென உனக்குத் தெரியுமா?" என வினவினன்.

துர்:—நானறியேனே! நேற்று மாலை இங்கு ஒரு பெண் வந்திருந்தனள். ஒரு வேளை அவளாயிருக்குமோ?

ஜய:—இங்கு வந்திருந்தாளா? என்ன சொன்னாள்? என்னைப்பற்றி குறை கூறினளோ?

துர்:—இல்லை. அப்படிக் கொன்றுமில்லை

பிறகு துர்க்கை தனக்கும் ருக்மணிக்கும் நடந்த சம்பாஷணையைச் சொல்லி முடித்தனள். ஜயராமன் ஆச்சரியத்துடன் காது கொடுத்துக் கேட்டிருந்தபின் துர்க்கையின் கைகளைப்பிடித்துக்கொண்டு, "துர்க்கா! நான் உன்னடிமை! என் உடல் பொருள் ஆவி யாவும் உன்னைச் சேர்ந்தவைகளே. என்னை க்ஷமித்து நேசித்து என்னுடன் வாழ்வாய்" என்றனன். துர்க்கை கொஞ்ச நேரம் யோசித்துக் கடைசியாக, "என் தந்தையைத் தரிசித்து வரவும்" என்றனள்.

சில தினங்களுக்குப் பின்னர், துர்க்கை தன் கணவன் வீட்டையடைந்து மனச் சமாதானத்தோடு அங்கே வசிக்கலானாள். ஜயராமனும் ஆனந்தசாகரத்தி லாழ்ந்திருந்தான்.

ஒரு வருஷங் கழிந்தது. இவர்களிடம் வள்ளி யெனும் ஒரு கிழவி வேலை செய்துவந்தனள். இவ்வள்ளி தன் குழந்தைப் பருவமுதல் இக்குடும்பத்திலிருந்து வந்ததால், எல்லோரும் இவளை வேலைக்காரியாகப் பாவியாது குடும்பத்தி லொருவளாகவே கருதிவந்தார்கள். ஜயராமன் இவளையுமொரு தாயாகப் பாவித்து வந்தனன். ஒரு நாள் வள்ளிக்குத் தன் ஊரிலிருந்து தனது உறவினனொருவனுக்குத் தேக அசௌக்கியமெனக் கடிதம் வந்திருந்ததால் சிலநாட்களுக்குத் தன்னூர் சென்றுவர உத்தரவு கேட்டனள். அநேக வருஷங்களாக இவள் தன் கிராமத்திற்குச் சென்றவளல்ல. இதுவுமன்றி தான் வரும் வரை வீட்டு வேலைகளைச் செய்ய வேறொரு கிழவியையும் அழைத்துவந்து விடுத்தனள். அக் கிழவியின் பெயர் சத்தியபாமா.

ஜயராமனும் மற்றோரும் வள்ளிக்குத் துக்கமுடன் விடை கொடுத்தனுப்பினர்களாயினும் புதிதாக வந்த கிழவியை அன்புடன் ஏற்றுக்கொண்டார்கள். சில நாட்களுக்குள் சத்தியபாமாவும் நல்லவளெனப் பெயர் சம்பாதித்தனள். இவள் அடிக்கடி ஜயராமனை உற்று நோக்குவதையும், அவன் பேசும் பொழுதெல்லாம் அவனையே பார்த்துப் புன்முறுவல் கொள்ளுவதையும் துர்க்கை கவனித்து வந்தாளாயினும், இக்கிழவி வீட்டிலுள்ளவர்களிடம் பக்ஷமுடனிருப்பதாகவே நினைத்தனள். இவ்வண்ணமே ஒரு வருஷங் கழிந்தது.

ஏகாதசி நாள்! நதியில் ஜலம் பிரவாகமாயிருந்தது. துர்க்கை சத்யபாமாவை அழைத்துக் கொண்டு ஸ்நானஞ் செய்துவர நதிக்குச் சென்றனள். ராமஸ்மரணை செய்துகொண்டே துர்க்கை நதியிலிறங்கி மூழ்கியபின் கரைசேர்ந்து, கிழவி

சத்யபாமாவையும் ஸ்நானஞ் செய்ய வேண்டினாள் ஆனால் அவளோ வீட்டு வேலைகளைப் பார்த்துவிட்டு ஸ்நானஞ் செய்வதாகவும், மற்றும் சில சாக்குப் போக்குகளைச் சொன்னாள். ஆனால் துர்க்கை வற்புறுத்தித் தனது துணிகளைக்கொடுத்து ஸ்நானஞ் செய்யச் சொல்லவே, சத்யபாமா சிறிது திகைத்து நின்று, வேறு வழியின்றி அவைகளை வாங்கி, கரையோரமாகக் கொஞ்ச தூரஞ் சென்று, தன் வஸ்திரங்களைக் களைந்து ஸ்நானஞ் செய்ய ஆரம்பித்தனள். துர்க்கை அக்கிழவியையே உற்றுநோக்கி வந்தாள்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு சத்யபாமா ஒரு முறை நதியில் மூழ்கி எழுந்த மாத்திரத்தில், அங்கு மிக்க எழில்வாய்ந்த ஒரு மடமங்கை இருக்கக்கண்டு ஆச்சரிய முற்றனள். கிழவி சத்யபாமா இருந்த இடத்தில், மேகத்தைப் பழித்த கருங்கூந்தலோடும், தாமரையை நிகர்த்த நேத்திரங்களோடும் பகவான் கிருஷ்ண பரமாத்மாவின் கோபிகாஸ்திரீகளில் ஒருவளோ வென நினைக்கும் வண்ணம் ஒரு நங்கை தோன்றினாள்! இவள் யார்? வேறொருவளோ? சத்யபாமா ஸ்நானத்தை முடித்துக்கொண்டு சென்று விட்டனளோ? இந்நங்கை யாராயிருக்கலாம்?' என்ற இக்கேள்விகள் ஒன்றன்பின் ஒன்றாக துர்க்கையின் மனதிற் தோன்ற, அப்பெண் கரையை யடைந்து அவசரமாய் வஸ்திரங்களைத் தரிப்பதற்குள், அவளிடஞ் சென்று நோக்க, ருக்மணி வீட்டை விடுத்துச் சென்ற அன்று மாலை தன்னுடன் சம்பாஷித்திருந்த நங்கை இவளேயென அறிந்துகொண்டனள். இவ்வளவு நாட்களாய் வஸ்திரங்களைத் துவைத்தும் சமையல் செய்தும், பாத்திரங்களை விளக்கியும் வந்த கிழவி ருக்மணியேயெனக் கண்டனள். துர்க்கையைக் கண்ட ருக்மணி திகைத்தாள் புன்முறுவலுற்றாள். பிறகு மெதுவாக, "நான் ஒரு வருஷமாக ஸ்தலயாத்திரை செய்து வந்தேன். காசி, ஹரித்வாரம் முதலிய க்ஷேத்திரங்கள் சென்றிருந்தேன். கடைசியாக இவர் ஞாபகமே என் மனதைப் பிளக்கத் திரும்பிவந்தேன். இவரைக் காண சூரியனைக் கண்ட தாமரையைப் போல் என் முகம் மலர்கின்றது. இவரின்றி என் முகம் வாட்டமடைகின்றது" என்றனள். துர்க்கை என்ன செய்வதென்றறியாது பிரமிக்கவே, ருக்மணி, "நான் உனக்கும் உனது சுக சௌக்கியத்திற்கும் நடுவில் நில்லேன். இது சத்தியம்! இந்த ஒரு வருஷமாக இருந்த வண்ணமே நான் எப்பொழுதும் உங்களது வேலைக்காரியாக இருக்கும் பக்ஷத்தில் அவரைத் தரிசிக்கவும் அவரது இனிய குரலைக் கேட்டுச் சந்தோஷப்படவும் சமயங் கிடைக்கும்" என்று சொல்லி முடிப்பதற்குள், அவள் நேத்திரங்களினின்றும் நீர் தாரைதாரையாய்ப் பெருக, அதை மறைக்கக் கருதி, வேறொரு புறம் திரும்பினாள். துர்க்கை அவளது கரங்களைப் பிடித்துத் தேறுதல் சொல்லிக்கொண்டே அவளுடன் வீட்டை நோக்கி நடந்தனள். இன்னுமொரு நாள் சத்யபாமாவாகவே இருக்கும்படி ருக்மணியை வேண்டிக் கொண்டனள். மறுநாள் ஜயராமனுக்கும் துர்க்கைக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்தது.

துர்:— நீங்களென்ன ருக்மணியைப் பற்றி நினைப்பதேயில்லை.

ஜய:—நானவளை மறந்து எவ்வளவோ மாதங்களாய் விட்டன. பாவம்! மிக்க நல்ல பெண்ணே!

துர்:—ஆனால் இன்னும் அவளைப்பற்றி ஞாபகமிருக்கிறதல்லவா?

ஜய:—அவள் இன்னும் உயிருடனிருக்கிறாளோ இல்லையோ. மிக்க நல்ல பெண் என்பதிற் சந்தேகமில்லை. ஆனால் நீ அருகிலிருக்கும் பொழுது அவளை ஏன் நினைக்கவேண்டும்?

துர்:—அவள் இந்த வீட்டிலிருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள் நீங்கள் அவளுடன் பேசுவீர்களா? அவளைப் பார்த்து சந்தோஷமடைவீர்களா?

ஜய:—துர்க்கா! அது உன்னைச் சேர்ந்ததே! என்னை ஏன் கேட்கிறாய்?

துர்க்கா உடனே சத்யபாமாவை அழைத்து, ருக்மணியை அழைத்து வரும்படி பகர, சத்யபாமா ஒரு நொடிப் பொழுதில் தன் வேஷத்தைக் களைந்து, ருக்மணியாக வந்து நின்றனள்.

ஜயராமன் ருக்மணியைக் கண்ட மாத்திரத்தில் ஆச்சரியத்திலாழ்ந்து, எழுந்து அவளைத் தழுவ எண்ணங் கொண்டானாயினும், அருகில் துர்க்கை யிருந்தாளாதலால், தன்னைத் தடுத்துக் கொண்டான். அவனது மனதில் பல எண்ணங்கள் தோன்றின. துர்க்கையும் ருக்மணியை உற்று நோக்கிப் புன்முறுவலுடன் அவளைத் தழுவினாள்.

பெரும் போட்டி

SEVERE COMPETITION

சிங்காரம், கோபுவைப்பற்றிய மற்றொரு கதை

ஒருநாள் சிங்காரம் கோபுவைப் பார்த்து, "கோபு! இனிமேல் நாம் என்ன செய்யலாமென்று நினைக்கிறாய்? கையில் பணம் குறைந்துவிட்டது. இன்னும் இரண்டு மூன்றுநாள் சென்றால் ஆள்பாடு காய்ச்சல்பாடுதான். வேறு ஏதாவது வழிபண்ணினால் நல்லது" என்றான்.

கோபு:—அதற்கென்ன? நமது ஆரோக்யாநந்தப் பல் பொடி விஷயத்தைத்தான் பார்த்துவிடுவோமே! அதிலிருந்து தற்போது செலவுக்குக் குறைவில்லாமலாவது கிடைக்கும். இன்றைய தினமே 50 செங்கல் அரைத்துவர ஏற்பாடு செய்கிறேன். நோட்டீஸ்களும் தகரங்களின் பேரில் ஒட்டத் துண்டு பத்திரிகைகளும் ஏதோ கொஞ்சம் இருகின்றன. பாக்கி ஏ. மா. ர. அச்சுக்கூடத்தில் ஒரேநாளில் அச்சிட்டு முடித்துவிடுகிறேன். சாயபுவையும் போய்ப் பார்த்து தகரச் சிமிழையும் வாங்கிவருகிறேன்.

சிங்காரம்:—நான் என்ன செய்யட்டும்?

கோபு:—நீ என்ன செய்யப் போகிறாய்? மிளகு, கிராம்பு, படிக்காரத்தை வாங்கி நன்றாகப் பொடி செய்துவை. சீக்கிரமே வந்துவிடுகிறேன்.

சாயங்காலம் இருவரும் சந்தித்தனர். கோபு கைநிறைய சிறிய நோட்டீஸ்களும் பெரிய நோட்டீஸ்களும் வைத்துக்கொண்டிருந்தான். "சிங்காரம், நோட்டீஸ் எல்லாம் அச்சாகிவிட்டது. தகரக்கார சாயபுவைப் போய்ப் பார்த்தேன். அவனிடம் தகரச் சிமிழ் அவ்வளவில்லை போலிருக்கிறது. ஆயிரம் சிமிழ் வேண்டுமென்று சொன்னேனே. அவன் 500 தான் இப்பொழுது தர முடியுமென்று சொன்னான். அதற்கும் ரூ. 60 கேட்டான். முன்னே 2-8-0 தானே தந்தேனென்று சொல்லிப் பார்த்தேன். 'ஆனாலென்ன? நான் ஏமாந்து போய்விட்டேன். முன் கொடுத்த சரக்கு மட்டம். இது புதிது; நல்லது. ரூ 50க்குக் குறைய முடியாது' என்று சொல்லிவிட்டான். நமக்கு மொத்தம் வேண்டியது 1000 ஆச்சே. வேறு எங்கும் அந்த விலைக்கும் கிடைக்காதே என்று 5 ரூபாய் அவனிடம் அச்சாரம் கொடுத்து, பாக்கிக்கு என்ன செய்யலாமென்று யோசித்துக்கொண்டே வந்தேன். உன்னைப் பார்த்தேன்" என்றான்.

"அப்படியானால் வா. ஈவினிங் பஜார் ரோட்டில் போய்ப் பார்ப்போம்."

அங்குபோய் விசாரித்தார்கள். சில்லரைக் கடைகளில் போய்க்கேட்டதில் போதுமான அளவு கிடைக்கவில்லை. விலையும் அதிகமாக விருந்தது ஒரு பெரிய கடைக்குப் போனார்கள். அங்கிருந்த செட்டியார் ஒரே சமயத்தில் 1000 வாங்கிக் கொள்வதானால் 35 ரூபாய்க்குத் தருவதாகச் சொன்னார். "இப்பொழுதுதான் மூர்மார்க்கெட்டிலிருந்து ஒரு சாயபு வந்து 1000 தகரச் சிமிழுக்கு ஒரு 'ஆர்டர்' தந்து விட்டுப் போயிருக்கிறார். அவருக்கும் ரூ. 35 தான் சொன்னேன். இதோ பாருங்கள்" என்று ஒரு கணக்குப் புஸ்தகத்தை எடுத்துக்காட்டினார்.

கோபுவும் சிங்காரமும் ஒருவர் முகத்தையொருவர் பார்த்தனர். சாயபு தங்களிடம் நல்ல லாபம் சம்பாதித்துவிடப் பார்த்தான் எனக் கண்டனர். கோபு உடனே 1000 தகரத்துக்கு ஒரு ஆர்டர் கொடுத்துவிட்டு ரூ. 10 அவர் கேட்டபடி அட்வான்ஸ் தந்து சாயபினிடம் தகரச் சிமிழே வாங்குவதில்லையெனத் தீர்மானித்தான். அவனிடம் கொடுத்த அட்வான்ஸ் நஷ்டம்.

பல் பொடியும் தயாராயிற்று. ஆங்காங்கு சுவற்றில் பெரிய நோட்டீஸ்களை யொட்டினார்கள். இரண்டு ஆள்களை நியமித்து நாலு பெயருமாகப் பட்டணத்தில் மூலை மூலையாக விற்க ஆரம்பித்தார்கள். இரண்டு மூன்று நாள்களில் எல்லாம் விற்றுப்போயிற்று. உடனே இன்னுமொரு ஆயிரம் தயாரித்தனர். அதுவும் செலவாயிற்று.

பார்த்தான் கோபு. 'சிங்காரம்! முன்னமேயே உன்னிடம் சொன்னேனே பார்த்தாயா! என்ன சுறுசுறுப்பாய் வியாபாரம் நடக்கிறது! பட்டணத்தின் ஜனத்தொகை 5 லக்ஷத்துச் சொச்சந்தானே! சென்னை மாகாணத்தில் 420 லக்ஷம் பேர் இருக்கிறார்களே. அவர்களில் ஆயிரத்தில் ஒருவன் நமது பல்பொடியை வாங்கினாலும் நாற்பதினாயிரம் உடனே செலவாகுமல்லவா! நாம் ஏன் ஒரு லக்ஷம் சிமிழ் உடனே தயார் செய்யக்கூடாது? எங்கும் ஏஜென்டுகள் வைத்து ஒரு நிமிஷம் காசு பண்ணிவிடலாம்" என்றான்.

சிங்காரம்:—ஆமாம். அதற்கு முதல் வேண்டாமா? நம்மிடம் இப்பொழுது விற்று வந்த 2000 'பல் ஆரோக்யத்'தில் கிடைத்த லாபந்

தானே இருக்கிறது. நீ சொல்லுகிறபடி செய்யப் பணம் மூட்டையாக வேண்டுமே.

கோபு.—பணம் என்னத்துக்கு? ஆங்காங்கு சாமானுக்கு ஒப்பந்தம் செய்து விடவேண்டும். ஒரே தடவையில் எல்லாவற்றையும் வாங்காமல் மாதா மாதம் இவ்வளவு கொண்டுவந்து தர வேண்டுமென்று ஏற்பாடு செய்து, அப்படிக் கொடுக்கும் காலத்தில் கொடுத்த சாமானுக்குக் கிரயம் கொடுத்து விடவேண்டும். அப்பொழுது எல்லாவற்றையும் சேகாம் செய்ய நாம் காத்திருக்கவேண்டாம். விற்க விற்கப் பணத்தையும் கொடுத்துவிடலாம். விற்காமல் நிற்கும் சாமானும் நம்மிடம் குவியாது.

சிங்:—சரி. உனக்குச் சம்மதமானால் நான் தயார்.

அன்றைய தினமே அவர்கள் அந்த வேலையை ஆரம்பித்து விட்டார்கள். கோபு சூளைக்காரனிடம் போய் வாரம் ஒன்றுக்கு 1500 செங்கல் வீதம் நன்றாகச் சுட்ட செங்கல் அனுப்பும்படி ஏற்பாடு செய்து, முன்பணமும் கொடுத்து வந்தான். இந்தப் பணம் கடைசியாய் அனுப்பும் செங்கல்லின் விலையில் குறைத்துக்கொள்ள வேண்டியது. அப்படியே தகரக்கடை செட்டியாரிடம் லக்ஷம் தகரச்சிமிழுக்கு ஒப்பந்தம் செய்தான். முதல் மாதத்தில் இரண்டு தடவையாக 20,000மும், பிறகு மாதம் பதினாயிரமும் அனுப்பும்படி ஏற்பாடுசெய்ய, அப்பொழுது கொடுத்த முன் பணம் சூளைக்காரனிடத்தில் போலவே கடைசித்தவணையில் கொடுபடவேண்டிய பணத்திலிருந்து கழித்துக் கொள்வதாக ஏற்பாடு ஆயிற்று. செட்டியாருக்குக் கொடுத்த முன் பணம் அவர்களிடமிருந்த முதலை அதிகமாகக் குறைத்துவிட்டது. அப்படியே கடை சாமானும், வேண்டிய பத்திரிகைகளும் அவர்கள் கைக்காசை அநேகமாக ஒழித்துவிட்டது.

சாமான்கள் வந்துசேர ஆரம்பித்தன. அளவு அதிகமானதால் ஏற்கெனவே அவர்கள் இருந்து வந்த ஜாகை போதுமானதாகத் தோன்றவில்லை. ஒரு பெரிய வீடு வாடகை பேச எண்ணினர். அப்பொழுது கோபு, "என்ன சிங்காரம், வாடகை ஜாஸ்தியான போதிலும் நல்ல ஷகராகப் பார்த்து ஏற்பாடுசெய்தால் மதிப்பாக இருக்கும் உன்னுடைய அபிப்பிராயமென்ன?" என்றான்.

அவனும் ஒப்புக்கொள்ள, நல்ல இடம் பார்த்தார்கள். வாடகைதான் அதிகம். ஆயினும் அவர்கள் அதை லக்ஷியம் செய்யவில்லை. தம்மிடமுள்ள சொத்துக்களை யெல்லாம் அடகு வைத்து, பெயர் எழுதிய பலகை, மேஜை நாற்காலிகள், முதலிய 'ஆபீஸு'க்கு வேண்டிய தளவாடங்கள் முதலியன சம்பாதித்து இரண்டு குமஸ்தாக்களை ஏற்படுத்தி வேலை பலமாக ஆரம்பித்தனர்.

புதிதாக ஒரு சாமானைப் பகிரங்கப் படுத்துவதும் புதிதாக ஒரு சித்தாந்தம் செய்வதும் கிட்டத்தட்ட ஒன்றெனலாம். பூர்வமாகவுள்ள சித்தாந்தங்களைக் கண்டனம் செய்து சொந்த சித்தாந்தத்தை ஊர்ஜிதப் படுத்துவது சித்தாந்தியின் வேலையென்றால், அந்த தினுசில் மற்ற சாமான்களைக் கண்டனம் செய்து தன்னுடைய சரக்கைத் தூக்கிப் பேசுவது வியாபாரியின் தருமம். கோபு சிங்காரம் சங்கதிதான் தெரியுமே. அவர்கள் அவசரமாய்க் காசு சம்பாத்தியம் செய்யப்போய், பலவித தந்த சூரணங்களை வெகுவாகக் கண்டித்து, பல் ஆரோக்யத்தைச் சிலாகித்துத் துண்டுப் பத்திரிகைகள் போடவும், சமாசார பத்திரிகைகளுக்கு எழுதவும் ஆரம்பித்தனர். அவை ஒன்றும் அவர்கள் பெயரால் வெளிவரவில்லை. "உண்மையுரைப்போன்" "உபயோகித்தோன்" "தந்த தன்வந்தரி" "சூர்ண கோலாகலன்" முதலியோரின் கையொப்பங்களின்மேல் இந்த சங்கதிகள் வெளிவந்தன. மேலும் பல பத்திரிகைகளில் பல்ஆரோக்யத்தைப் பற்றி விளம்பரங்கள் அனுப்பும்போதும், அவர்கள் எழுதிய விஷயங்கள் மற்ற தந்த சூரணம் செய்வோருக்குக் கோபத்தை யுண்டுபண்ணாமலிருக்கவில்லை. பல் ஆரோக்கியம் ஏராளமாய் விற்க ஆரம்பித்த பொழுது மற்றவர்களுக்கு நடந்துவந்த வியாபாரமும் குறைவுபட்டது.

ஆரோக்யத்தின் தாய்ச்சரக்கான செங்கல் பொடி ஒரு பெரிய ரகசியமாகவே இருந்தது. கோபு, சிங்காரம் இரண்டு பேருக்குத்தான் அது விஷயம் தெரியும். ஆயினும் அவர்களுக்கு அதைப் பொடியாக அரைத்துத்தந்த மாவுமில்காரன் அரைப்புக்கூலி போதாதென்றும் செங்கலிலிருந்த பருக்கைக் கற்கள் யந்திரத்தைக் கீறித் தேய்த்து விட்டதால், வேறுபாகம் வாங்க 100 ரூபாய் அட்வான்ஸும், அரைப்புக் கூலி அதிகமாகவும் தரவேண்டுமென்றும் சொன்னான். கோபு பார்த்தான். "எதைப் பார்த்தாலும் எல்லோரும் முன்பணமும் அதிகக் கூலியும் கேட்கிறார்கள்.

மேலும் இந்த மில்காரன் நமது ரகசியத்தைத் தெரிவித்து விட்டாலோ?—நாமோ விஸ்தார மான இடம் ஏற்பாடு செய்துவிட்டோம். ஏன் இங்கு ஒரு மில் ஏற்படுத்தக்கூடாது? 'காரி கம்பெனியார்' பல தவணைகளில் வாங்கிக்கொள்ளுவதாகக் குறைந்த விலையில் ஒரு எண்ணெய் என்ஜினையும் அரைக்கும் மில்லையும்பற்றி விளம்பரம் போட்டிருக்கிறார்களே. இவர்கள் கேட்கும் முன் பணத்தைக் கட்டினோமானால் போதும் உடனே அதை வாங்கி வந்துவிடலாம். நம்முடைய காரியத்தை ரகசியமாய்ச் செய்வதுடன் லாபகரமாக வேறு வேலையும் செய்யலாம்'' என்றான்.

அப்படியே செய்தார்கள். காரி கம்பெனி பட்டணத்தில் உள்ள மிகப் பெரிய ஸ்தாபனமன்றோ? அவர்கள் கடையில் கோபுவும் சிங்காரமும் போனபொழுது அங்குள்ள பல யந்திரங்களையும் பார்வையிட்டனர். தகடுகளை வளைத்துப் பெட்டிகள் செய்யவென்று ஒரு புது யந்திரம் வந்திருந்தது. அதை அவர்கள் கவனிக்க அக்கம்பெனி மானேஜர் ஒரு தகரத் துண்டைக் கொண்டுவந்து அதில் ஓரிடத்தில் கொடுக்க ஒரு நிமிஷத்துக்கெல்லாம் மற்றொரு பக்கத்தில் மூடியுடன் ஒரு சிமிழாக அது வந்துவிட்டது. அந்தத் தகட்டை அந்த யந்திரம் அளவாகக் கத்தரித்து வளைத்து ஈயம் வைத்து ஒட்டி மேல்மூடிகூடப் போட்டுவிட்டது. அவர்கள் பெயரையும் அதில் அழுத்த ஒரு ஏற்பாடு இருப்பதாகவும் இன்னும் சிறிது செலவில் அதையும் சேர்த்து அந்த யந்திரத்தில் பிணைத்து விடலாமெனவும் சொல்லினர். கோபுவுக்கும் சிங்காரத்துக்கும் நாக்கில் ஜலம் ஊறிற்று. ஆயினும் தகட்டுக்கு என்ன செய்வது!

காரி கம்பெனி மானேஜர் சோதிடம் உணர்ந்தவர்போல் அவர்கள் மனதில் உள்ளதை அறிந்தார். அவர்களை வேறொரு அறைக்கு இட்டுக்கொண்டுபோய் அங்கு பூமிமட்டத்திலிருந்து கூரை முகட்டுவரையில் அடுக்கியிருந்த தகடுகளைக் காட்டினார். ''இந்தத் தகடுகள் வெகு சரசம். ஒவ்வொன்று 20 சிமிழ்கள் செய்யப்போதுமானது. விலையென்னவோ மொத்தமாய் வாங்கினால் ஆயிரம் 250 ரூபாய்தான்'' என்றார்.

உடனே எல்லாவற்றையும் சேர்த்து வாங்க ஏற்பாடாயிற்று. முதல் மாதத் தவணை கட்டத்தான் பணமிருந்ததெனச் சொல்லலாம். சிப்பந்திகள் ஏராளமாக நியமிக்கவேண்டி வந்தது. ஏற்கெனவே நியமித்தவர்களுக்குச் சம்பளம் கொடுபடவில்லை. ஆயினும் மேன் மேலும் வந்த பணத்திலிருந்து செலவு நடந்துவந்தது.

இப்படியிருக்க ஒரு நாள் கோபு சவலை செட்டியார் சத்திரத்துச் சுவரில் ஒட்டியிருந்த 'பல் ஆரோக்யம்' பெரிய விளம்பரத்தின் மேலும் கீழும் இரண்டு வேறு விளம்பரங்கள் ஒட்டியிருக்கக் கண்டான். அவற்றுள் ஒன்றில்,

பல் ஆநந்தமா? கல் ஆநந்தமா?
'பல் ஆரோக்கியத்தில்' கல்!
ரசாயன சாஸ்திரியின் அபிப்பிராயம்

என அச்சிட்டிருந்தது. கீழ் விளம்பரத்திலும் பின்வருமாறு பெரிய எழுத்தில் விஷயம் கண்டிருந்தது:—

''எங்கும் பிரபலமாய் விளங்கும் புதிய பேடென்ட் ஆரோக்யாநந்தப் பல் பொடியை நமது ரசாயன சாஸ்திர நிபுணர் பரிசோதனை செய்து பார்த்தனர். அதை அவர் தண்ணீரில் கரைக்க, பாத்திரத்தினடியில் சிவப்பான ஒரு பொடி தங்கிற்று. ஜலத்தின்மேல் சில தூள்களும் எண்ணெய் போன்ற பதார்த்தமும் மிதந்தன. ஜலத்தை வேறொரு பாத்திரத்தில் இறுத்து, அடியிலுள்ள பொடியை அவர் பரிசோதிக்க, அது வழவழப்பாய் அறைத்த செங்கல் பொடிதானெனக் கண்டனர். இதுதான் இக் கம்பெனியார் ஆயிரம் பதினாயிரமாய் செலவழித்துக் கண்டுபிடித்ததாகப் பிரசுரிக்கும் தாய்ச்சரக்கு.

பாக்கி நின்ற ஜலத்தை வடிகட்டினர். வடிகட்டுக் காகிதத்தில் நின்ற பொடி மிளகும், கிராம்பும். எஞ்சி நின்ற தண்ணீரைக் காய்ச்ச, அடியில் ஒரு உப்பு இருந்தது. அது படிக்காரம். கடைசியாக அவர் பரிசோதனையில் கண்டபடி நூற்றில் 95·6 பங்கு சிவந்த செங்கல் பொடியும், 1·2 பங்கு படிக்காரமும், 1·6 பங்கு கிராம்பும், 1·5 பங்கு மிளகும் இருந்தது. பாக்கியுள்ள ஒரு பங்கு காய்ச்சும்போது காற்றாய்ப் போய்விட்ட பெப்பர்மின்ட் திராவகம்.

செங்கலுடன் படிகாரம் சேர்ந்தால் அது பல்லிடுக்கில் ஒட்டிக்கொள்ளும் தன்மையுடையதாகிறது என்று அவர் அபிப்பிராயப்படுகிறார்.

நம்மில் இம்மாதிரி போலி நிபுணத்துவம் என்று தொலையுமோ? நம்மவரிடம் வியாபார யோக்யதை என்று ஏற்படுமோ?

தெய்வமே அருள்புரிவாய்!

நம் தேசநேசன்—25—8—2

உடனே ஒரு வண்டி பிடித்துக்கொண்டு பல விடங்களில் சுற்றிப் பார்க்க, எங்கும் இந்த விளம்பரங்கள் ஒட்டியிருந்தன. அவற்றை அநேகர் நின்று படித்துக்கொண்டிருந்தனர்.

அங்கு ஓரிடத்தில் 'பல் ஆரோக்யம்' விற்பவனைச் சுற்றிப் பலர் நிற்கப் பார்த்தான். அவர்கள் அவன் கையில் உள்ள விளம்பரங்களைப் பிடுங்கிக் கொண்டு அவனைத் துரத்தினார்கள். அங்கு ஒருவன் கூட்டத்தில் கலக்காமல் ஒரு விளம்பரப் பலகையைத் தாங்கிக்கொண்டு நின்றான். அது நம் தேசநேசன் பிரசுரித்த பல் ஆரோக்யப் பரிசீலனையா யிருந்தது. பத்து இடம் போய்ப் பார்த்தான். எங்கும் அவன் கண்ணில் பட்டது அவனுக்கு வருத்தத்தையே தந்தது. திரும்பி ஆபீஸ் வந்துசேர்ந்தான்.

சிங்காரம் அப்பொழுது வாசல்படியில் நின்றுகொண் டிருந்தான். கோபு வந்ததும் அவனை அழைத்துக்கொண்டு தங்கள் ஏகாந்த அறைக்குப் போய் 'நம் தேசநேசன்' பத்திரிகையில் ஆகஸ்ட் 25வப் பதிப்பை எடுத்து அவனிடம் காட்டினன். இதுதான் பட்டணத்திலும் தமிழ்நாட்டில் எங்கும் நின்றுலவும் பிரசித்த பத்திரிகை. பல் ஆரோக்கிய விளம்பரங்கள் அதற்குக் கொடுக்கப்படவில்லை. அதற்குக் காரணம் அவர்களிடம் போதுமான பணமில்லாததுதான். அதில் ஒரு பக்கமெல்லாம் பெரிய எழுத்திலும் சிறிய எழுத்திலும் இந்த சமாசாரமே கண்டிருந்தது.

அப்பொழுது அவர்களைப் பார்க்கத் தலைமை குமாஸ்தா வந்தார். அன்று காலை 'பல் ஆரோக்யம்' விற்கச் சென்றவர் எல்லோரும் திரும்பி வந்துவிட்டதாகவும், ஒரு சிமிழாவது விற்பனையாகவில்லை யென்றும், விற்கப் போனவிடத்தில் சிலரை ஜனங்கள் கூடி அடித்தனுப்பியதாகவும், பலர் துரத்தப்பட்டு பயந்து ஓடி வந்துவிட்டதாகவும் கூறினர் கோபு உடனே வெளி வந்து அவர்களைப் பார்த்து நடந்த சங்கதிகளை விசாரித்தான். ஜனங்கள் எல்லோரும் தங்களிடம் நம்பிக்கை போய் விரோதம் கொண்டாடுவதாக அறிந்தான். அப்பொழுதே கடைக்கு வெளியில் ஒரு பெரிய ஆரவாரம் கேட்டது. ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தான். அநேகர் பலமாகக் கூச்சல் போட்டுக்கொண்டு பல்ஆரோக்யத்தையும் அதைச் செய்து விற்பவர்களையும் திட்டினார்கள். கதவைத் தாளிடச் செய்தான். ஒரு மணி கழித்துச் சத்தம் அடங்கிவிட, கோபு அங்குள்ளவர்களுக்கு நல்வார்த்தையாக தைரியம் சொல்லி மறுநாள் வரும்படி யனுப்பினன்.

அவர்களில் ஒருவன் மாத்திரம் நின்றான் அவனைக் கோபு அழைத்து சமாசாரமென்ன, வென விசாரித்தான். அவன் சொன்னதாவது:—

ஐயா! இது எல்லாம் பல்பொடி செய்வோர் சங்கத்தின் வேலை. தாங்கள் எழுதி அச்சிட்ட துண்டு பத்திரிகைகளும் பத்திரிகைவர்த்தமானங்களும் எல்லாப் பற்பொடி தயாரிப்பவர்களையும் கோபப்படுத்திவிட்டது. அவர்கள் எல்லோரும் நாலுநாளைக்குமுன் இவ்வூரில் பெயர் பெற்ற மருந்துக்கடையாகிய அகஸ்தியாசிரமத்தில் கூடினர். இம்மாகாணத்தில் பலவிடங்களிலுமிருந்து பிரதிநிதிகளும் வந்திருந்தனர். அச்சமயம் கும்பகோணம் நாராயணசாமி பண்டிதர் தலைமை வகித்தார். அவரைத் தெரியாதா உங்களுக்கு? 'சுகந்த பரிமள கல்நார் பல்பொடி' செய்பவர். உங்களது மூன்றுவது துண்டுப்பிரசுரத்தில் அதை 'மிகுந்தகரிமல பல்நார் கல்பொடி' என்று பரிகாசம் செய்திருந்தீர்கள். அது அவருக்குப் பெரிய அவமானமாக இருந்ததாம். அந்தப் பிரசுரத்தை நமது தஞ்சைஜில்லா ஏஜெண்டுகள் எங்கும் அதிகமாகக் கொடுத்துவிட்டார்களாம். அதனல் வியாபாரம் குன்றிவிட்டதாம். பல் ஆரோக்கியத்தை ஒரு கை பார்த்துவிட வேண்டுமென்று சொல்லி முடித்தார் அங்கு வந்தவர்களில் பெரும்பாலார் பேசினராம் எல்லாருக்கும் கோபந்தானும். அப்பொழுது அங்கு வந்திருந்த கிழக்கத்திப் பல்பொடி (Oriental Toothpowder) செய்யும் தாம்ஸ்ன் துரை அதை ரசாயனப் பரிசீலனை செய்துபார்க்கலாம் என்று சொல்லினர். புலி மார்க்குப் பல் பொடி செய்யும் நாராயணய்யர் தமது குமாரன் ரசாயன சாஸ்திர நிபுணர் என்றும் அவரைக்கொண்டு அதைச் செய்து வைப்பதாகவும் ஒப்புக்கொண்டதுடன் 'நம் தேச நேசன்' பத்திராதிபர் தமக்கும் நேசனுனபடியால் அவரிடம் சிபார்சுசெய்து அந்தச் சங்கத்தார் கண்டுபிடித்துச் சொல்லக் கூடிய எல்லா விஷயத்தையும் அதில் பிரசுரம் செய்ய ஏற்பாடு செய்வதாகவும் சொன்னர். மறுபடி தாம்ஸ்ன் துரை பிரேரணையின் பேரில் 'பல் பொடி காப்பு நிதி' என்றொரு நிதி ஏற்பட்டு 5000ரூ ரொக்கம் சேர்ந்திருக்கிறது அந்நிதியின் முதல் உபயோகம் உங்கள் வியாபாரத்தைக்

கெடுக்கவேண்டும் என்பதே. ஆங்காங்கு கூடிய கூட்டமும் இன்று கடை வாசலில் போட்ட இரைச்சலும் இந்த நிதி படுத்தும் பாடு ஜாக்கிரதையா யிருங்கள். சாயங்காலம் வெளிவரும் 'நேசனைப்' பாருங்கள் என்றான்.

அவன் சொன்னபடி அன்று பிரசுரமான 'நேசன்' பல் ஆரோக்ய ஸ்பெஷல் நம்பராக இருந்தது. அதன் பதினாறு பெரிய பக்கங்களில், ஆறு பக்கங்கள் பல் ஆரோக்கியக் கண்டனமாகவே இருந்தது. "ஆரோக்யாநந்தப் பொய்கள்" "பற்பொடி விற்பவர் பட்டபாடு" "பல் ஆரோக்ய பவன வாசலில் அமளி" "போலிப் பற்பொடியைப்பற்றிப் பலவிடங்களில் பேச்சு" "ஆரோக்யாநந்தத்தைப் பற்றி சில தலைவர்கள் அபிப்பிராயம்" "டாக்டர் என்கிட்டராவ் என்னும் தந்த நிபுணர் கண்டனம்" என்னும் தலைப்புகளின் கீழ் கண்ட விஷயங்கள் கோபுவுக்கு மயிர் சிலிர்க்கச் செய்தன. தலையங்கத்தில் பத்திராசிரியர் தமது அபிப்பிராயத்தில் நம்மவர்களில் வியாபார தர்மம் கெட்டுப் போனதைப் பற்றி துக்கப்பட்டார். அயலூர் வர்த்தமானத்தில் பெரும்பாகம் பல் ஆரோக்கிய விஷயந்தான் கும்பகோணத்தில் பல் ஆரோக்கியக் கடை கொள்ளை போகாமல் தப்பியது பொற்றாமரைப் போலீஸ் ஸ்டேஷன் சமீபமா யிருந்ததால்தான் ஆயினும் கடைக்காரர் இரண்டடி படாமலிருக்கவில்லை. மதுரையில் 'லாஜ்பட் சௌக்'கில் நடந்த மகாநாட்டில் கோபால ராமக்கோனார் இப் பற்பொடியைக் கண்டித்து, இந்தியா முழுதிலும் 'ராஜீய மகா சமாஜத்தில் உள்ள அங்கத்தினர் ஒருவரும் அதை வாங்கக் கூடாதென்று தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றினர். கோயம்புத்தூரில் ஆரோக்யச் சிமிழைப்போல் மிகப் பெரியதாக ஒரு சிமிழ், காகிதத்தால் செய்து அதற்கு(க் காகித)த் துணி கட்டி, 'ஆரோக்யாநந்தத்தின் கதி' என்று சுற்றிலும் எழுதி மார்க்கெட்டில் நடு இடத்தில் வைத்து எண்ணெயை ஊற்றிக் கொளுத்தினர்கள். உதக மண்டலத்திலோ ஒரு நாய் தன் முன் காலில் ஒரு ஆரோக்யாநந்தப் பல்பொடிச் சிமிழை வைத்துக்கொண்டு அதில் ஒரு சிறிது எடுத்துப் பல் தேய்க்கப் பொடி பட்ட விடமெல்லாம் கறுப்பாய் விட்டதுபோல் ஒரு பெரிய தமாஷ் படம் எழுதி அச்சடித்து ஊரெல்லாம் ஒட்டியிருந்தது. அவைகளில் இரண்டு மூன்றைத் தனது சொக்காயில் தைத்துக்கொண்டு டாம் ஜில்கிஸ் என்னும் யுரேஷ்யப் பையன் பல வேடிக்கைப் பாட்டுகள் பாடிக்கொண்டு தெருவில் எல்லாம் நடனமாடி வந்தான். இவற்றை எல்லாம் படித்த கோபு சிங்காரத்தின் மனது பட்ட பாட்டுக்கு அளவே இல்லை. அவ்வாரம் முழுதும் நம் தேசநேசன் பத்திரிகையில் பல்லாரோக்ய விமரிசைகளே வெளிவந்திருந்தன.

இதன் பலன் சீக்கிரமே வெளியாயிற்று. புதிதாக ஒரு சிமிழ் கூட விற்கவில்லை. அயலூர்களிலிருந்துஒருதம்படியாவது வரவேண்டுமே.கிடையாது. காரியஸ்தர்களுக்கும் வேலைக்காரர்களுக்கும் சம்பளம்வரவேண்டுமே என்கிற பயம் அதிகமாயிற்று. அவர்கள் இப்பொழுதெல்லாம் பல் ஆரோக்ய பவனத்துக்குவந்தால் சம்பளம் கேட்கவென்றே வந்ததாக வைத்துக்கொள்ளலாம்.

பல்லாரோக்யத்துக்கு கடன் கொடுத்தவர்களும் அவர்களிடமிருந்து நிலுவை வரவேண்டியவரும் கோபு சிங்காரம் இருவரையும் தொந்திரவு செய்ய ஆரம்பித்தனர். அவர்களுள் மு. டி. வு. செய். கருப்பய்யா செட்டியார் அவசரமாகக் கோர்ட்டில் பிராதுகொடுத்து அவர்கள் சொத்துக்களையெல்லாம் ஜப்திசெய்ய உத்திரவு பெற்றார். இது மற்ற கடன்காரர்களுக்குப் பயத்தைத் தந்தது. காரி கம்பெனியார் பல்லாரோக்யத்தை இன்ஸால்வென்ட் என தீர்ப்புச்செய்ய வேண்டுமென்றும் அவர்களுடைய சொத்துக்கு ஒரு ரிஸீவர் நியமிக்க வேண்டுமென்றும் கச்சேரியில் மனுச்செய்தனர்.

அப்படியே தீர்மானமாயிற்று. பல்லாரோக்ய சொத்து அபிசியல் அஸைனி இடம் சேர்ந்தது.

அந்த உத்தியோகஸ்தரும் சொத்தை யெல்லாம் விற்றுக் கடன்காரருக்கு ரூபாய்க்கு 3 அணா $7\frac{3}{4}$ தம்படி வீதம் ஈடுசெய்தனர். பல்லாரோக்ய விளம்பரப் பலகையையும், நல்லபிப்பிராயத்தையும் தகர சிமிழ் செட்டியார் வாங்கினர். இந்த அமளி எல்லாம் அடங்கின பிறகு சுமாராக அவருக்கு இந்தப் பல்பொடியில் வியாபாரமும் நடந்துவந்தது

கோபுவும், சிங்காரமும் சிறைதப்பியது கஷ்டமாயிற்று.

திருப்புகழ் விருத்தியுரை:
முதல் தொகுதி : : 6-படை வீடுகள்.
12-சஞ்சிகைகளாக வெளிவருகிறது. 8-அணா தபாற் தலைகள் அனுப்பி மாதிரி சஞ்சிகை பெறலாம்.

கேசவ சந்திரசேனர்

KESUB CHANDRA SEN

சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் வட இந்தியாவில் பலத்த மதக்கிளர்ச்சி ஏற்பட்டது. இந்து மதத்தை சீர்திருத்தம் செய்ய வேண்டுமெனப் பாடுபட்டவரில் ராஜா ராம் மோகன ராய் என்பவர் ஒருவர். அவர் ஏற்படுத்திய மதம் பிரம்ம மதம். அவருடைய கோட்பாடுகளை ஒப்புக்கொண்டு இந்து மதத்திலிருந்து விலகி நின்றவர் பிரம்ம ஸமாஜத்தார்.

இம்மதத்தின் முக்கிய கோட்பாடுகள் பல மதங்களிலிருந்து சேர்த்துத் தொகுத்தப்பட்டன. ராமமோகனரைப் பற்றி எழுதின ஒரு ஆங்கில கனவான், "தமது வாழ்நாள் முழுவதும் ராமமோகனர் ஒரே மதத்தைப் பின்பற்றினார் என்பது இல்லை. இந்துக்கள் வேதாந்தியென்றும், முகம்மதியர் முஸ்லீம் என்றும், கிறிஸ்தவர்கள் தம் மதத்தைச் சேர்ந்தவர் என்றும் அவரைச்சொல்வது அவருக்குத்திருப்தி உண்டு பண்ணிற்று. ஒரு காலத்தில் ஒரு தேசத்தில் உள்ளவர்களுக்கு மாத்திரம் கடவுள் உண்மையான மதத்தைப் போதித்ததாக அவர் நம்பவில்லை. பல மதங்களிலுமுள்ள தத்துவங்களை அவர் தெரிந்து அவற்றையெல்லாம் அனுசரிக்கத் தலைப்பட்டார். ஒரு மதத்தில் கண்ட விஷயம் உண்மையா இல்லையா யென அறிய வழி ஒன்றுதான். அது நமது யுக்திக்கும், அனுபவத்துக்கும் ஒத்து மனத்திருப்தியைத் தருகிறதா என்று பார்ப்பதுதான் என்பதே ராமமோகனரின் அபிப்பிராயம்'' என்று எழுதியிருக்கிறார்.

ராமமோகனருக்குப் பிறகு பிரம்ம ஸஜாமத்தை விருத்திக்குக் கொண்டுவந்து அதை உலகோர் அறியும்படி செய்தவர் கேசவ சந்திர சேனர் ஆகும். இவர் பிறந்தது வைத்திய குலம். வங்க நாட்டில் கல்கத்தாவுக்குச் சமீபத்தில் கௌரீபுரம் என்னும் கௌர்ப்பே கிராமத்தில் கோலுஸ்தலசேனர் என்னும் ஒரு குடும்பத்தார் இருந்தனர். அவர்களில் ராம கமலசேனர் என்பவர் சிறு பிராயத்தில் சொற்ப சம்பளத்தில் அமர்ந்து தமது சாமர்த்தியத்தால் வெகு உயர்ந்த பதவிக்கு வந்தனர். மேலும் நல்லஞானவான் கேசவ சந்திரசேனர் ராமகமலருக்குப் பேரப்பிள்ளை. அவரது இரண்டாவது பிள்ளையின் மூன்றாவது புத்திரர். அவர் தகப்பனார் நல்ல ரூபவான். சாந்தகுண முள்ளவர். வைஷ்ணவ மதத்தில் பற்று உடையவர். கேசவருடைய தாயும் சாதாரணமான ஸ்திரீ அல்ல. சிறந்த தெய்வபக்தி உடையவள். "தம்மைப் போல் வேறுதாயும் உண்டோ? தமது நற்குணங்களை எல்லாம் கடவுள் எனக்குத் தந்திருக்கிறார். யான் எனது என்று சொல்லக்கூடிய எதுவும் தமதன்றோ'' எனக் கேசவர் தமது அன்னையைப் பார்த்து கூறியிருக்கிறார்.

இளம்பிராய முதல் கேசவர் நல்ல சாமர்த்தியவான் எனப் பெயர் எடுத்தார். "குழந்தையாயிருக்கும்பொழுதே கேசவர் தமது தாய்க்குப் பெருமையையும் தமது குடும்பத்தாருக்குச் சந்தோஷத்தையும் தந்தனர். தமது பள்ளிக்கூடத்துக்கு அவர் ஒரு அலங்காரமாகவும், தமது கிராமத்துக்கே ஒரு கௌரவமாகவும் இருந்தனர். தமது தோழருக்கெல்லாம் அவரே முதல்வர்'' என அவர் சரித்திரத்தை எழுதியவர் கூறியிருக்கிறார்: சிறிது காலம் தமது கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் வாசித்த பிறகு கேசவர் கல்

இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி னின்மையே யின்னா தது.

கத்தாவில் ஹிந்து காலேஜில் சேர்க்கப்பட்டார். இது சிறந்த பள்ளிக்கூடமாயினும் அக்காலத்தில் பல இந்து சிறுவர்களுக்குத் தமது மதத்தைவிட்டு விலக இடம் தந்தது. அதற்குக் காரணம் அங்கு நமது மத விஷயங்களைப் பற்றி போதியாம லிருந்ததுதான். அதனால் அல்லவா வங்கதேசத்தில் மாத்திரமல்ல — இந்து தேசத்தில் எங்கு பார்த்தாலும் கிறிஸ்தவப் பாதிரிமார் தமது மதத்தைப் போதித்து இந்தியச் சிறுவர்களை கிறிஸ்தவர்களாக்கிப் பல குடும்பங்களைக் கலைத்து விட்டனர். அம்மாதிரி மத பேதம் இப்பொழுது நமது பள்ளிக்கூடங்களில் ஏற்பட வில்லையாயினும் வேறு காரணங்களால் முன்போல் கிறிஸ்தவமதப்பிரசாரம்பலிக்கவில்லை. இவ்விஷயத்தை நாம் மனதில் வைத்துக்கொண்டோமானால் கேசவ சந்திரசேனருடைய மனப்போக்கு நமக்கு எளிதில் புலப்படும்.

கேசவர் நல்ல புத்திமானாக இருந்தபோதிலும் பெரிய பரீக்ஷைகள் ஒன்றிலும் தேறவில்லை. அதற்குக் காரணம் அவரை ஹிந்துகாலேஜிலிருந்து வேறொரு பள்ளிக்கூடத்துக்கு மாற்றியதாகும். அது இரண்டொரு வருடத்தில் எடுபடவே, பரீக்ஷைக்கென்று படிப்பதையே அவர் விட்டுவிட்டார். ஆயினும் 1857-ஆம் ஆண்டில் அவர் பள்ளிக்கூடத்தைவிட்டு நிற்குமுன் இரண்டு மூன்று வருஷகாலம் தத்துவ சாஸ்திர விஷயங்களை ஆராய்ந்து வந்தார். அதில் இந்திய சாஸ்திரங்களைப் பற்றி அவர் அக்கறைப் பட்டதாகத் தெரியவில்லை. அக்காலத்தில் பெயர் படைத்த ஆங்கில பிரான்ஷிய தத்துவநிபுணர்களின் புத்தகங்களே அவருக்குச் சிறந்தவையெனத் தோன்றின. மேலும் கல்கத்தாவில் அப்பொழுதிருந்த சிறந்த கிறிஸ்தவப் பாதிரிகளுடன் அவர் நெருங்கிப் பழகிவந்தார். அவர்களுடைய கொள்கைகளும் தம்மதத்தைப் பரவச் செய்ய அவர்கள் அனுஷ்டித்த துறைகளும் கேசவருக்குச் சிறந்தன வெனப்பட்டன. அவர்களைப் போல் காலை மாலைகளில் கடவுள் வந்தனஞ்செய்ய ஆரம்பித்தார். இந்துமதத்தில் அவருக்குப்பற்று அற்றுவிட்டதெனச் சொல்லலாம்.

ஆயினும் அவர் கிறிஸ்தவர் ஆகவில்லை. தமது வைஷ்ணவமதத்தையும் பின்பற்றவில்லை. ஒருசமயத்தில் இவர் குல ஆசாரியர் இவர் குடும்பத்தில் மதவிஷயமான சடங்குகள் செய்து வைக்க வந்தக்கால் தமக்கு அம்மதத்தில் பற்றில்லையெனவும் அந்த ஆசாரியரைத் தாம் தமக்குக் குருவாக ஒப்புக்கொள்ள முடியாதென்றும் கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டனர். இதனால் இவர் குடும்பத்தாருக்கு அதிக மனவருத்தம் உண்டாயிற்று. அவருக்கும் தைரியமாய் வேறுமதத்தைச் சேர இடந்தந்தது.

அம்மதந்தான் பிரம்மஸமாஜம். அக்காலத்தில் தேவேந்திரநாத் தா(க்)கூர் என்பவர் அதற்குத் தலைமை வகித்திருந்தார். தமதுபரிசுத்தமான தன்மையால் எல்லோராலும் அவர் மகரிஷி என அழைக்கப் படுவதுண்டு. கேசவசந்திரர் ஒருக்கால் "பிரம்மமதம் என்பதுயாது" என்னும் புத்தகத்தைப் படிக்க, அதுவே சிறந்தமதமென அவருக்கு மனதில் பட்டது. பள்ளிக்கூடம் விடும் முன்னரே அவர் சமாஜத்தில் சேர்ந்துவிட்டார். பிறகு தம் வாழ்நாள் முழுவதையும் தாம் ஏற்றுக்கொண்டகொள்கைகளை பிறருக்குப் போதிப்பதிலேயே கழித்து விடுவதென அவர் தீர்மானித்தனர்.

ஆயினும் அவருக்குச் சம்பாத்தியம் உண்டு பண்ணக்கூடிய வேலை கிடைக்காம லிருக்கவில்லை. தமது பாட்டனார் வேலையில் அமர்ந்திருந்த வங்காள பாங்கியில் அவருக்கும் உத்தியோகம் கிடைத்தது. ஒரே வருஷத்தில் அவருக்கு வேலையும் உயர்ந்தது. ஆனால் அவ்வேலையை வைத்துக்கொண்டு மதத்துக்குப் பாடுபடுவது முடியாதென அதை விட்டுவிட்டார். பிறகு 1867-ஆம் ஆண்டில் வங்காளத் தங்கச்சாலையில் இரண்டொரு மாதம் தமது குடும்பத்தில் வெகு காலமாக இருந்துவந்த தங்கம், வெள்ளிக் கட்டிகளைப் பாதுகாக்கும் வேலையில் இருந்தது தவிர மற்றக் காலத்தையெல்லாம் அவர் மதாபிவிருத்திக்கே செலவழித்தனர்.

சிறு பிராயமுதல் ஜன சமூகத்துக்கு உதவக்கூடிய பல வழிகளில் இவர் பாடுபட்டனர். பள்ளிக்கூடத்தில் படிக்கும்பொழுதே பிரிட்டிஷ் இந்திய சங்கம் என்றொரு சங்கம் ஏற்படுத்தி அதில் சாகித்தியம், சாஸ்திரம் முதலியவற்றில் பலருக்குப் பயிற்சி உண்டாகும்படி செய்தார். கோலுஸ்தல சாயங்காலப் பாடசாலை யென்று ஒரு ஸ்தாபன மேற்படுத்திப் பொது அறிவை அதற்குச் சுற்றுப் பக்கங்களிலுள்ள பிள்ளைகளுக்குப் போதிக்க முயன்றார்.

ஹிதைஷி சகோதர சங்கம் (Goodwill Fraternity) என்றொரு சங்கமேற்படுத்தி அதில்

மத விஷயங்களைப் பற்றி பிரசங்கங்களை செய்ய முயற்சித்தார். தாமே 'கடவுளே நமது பிதா, மனிதனே நமது சகோதரன்' என்னும் விஷயத்தைப் பற்றிப் பல பிரசங்கங்கள் செய்தார். அவருக்கு ஆங்கிலத்தில் தங்கு தடையின்றிப் பேசும் வல்லமை இருந்தது. பேசுவதற்கென்று முன்னதாக விஷயம் தயார் செய்ய வேண்டிய அவசியமில்லை. "சில சமயங்களில் அதிக மனோவேகத்துடன் வார்த்தைகளைச் சரமாரியாகப் பொழிந்து பிரசங்கம் முடியுமுன் மேலே பேச முடியாமல் களைத்துப் போவதுண்டு" என்று அவர் சரித்திரமெழுதியவர் சொல்லியிருக்கிறார். இச் சங்கத்துக்கு மகரிஷி தேவேந்திரநாத தாகூர் ஒரு நாள் விஜயஞ் செய்து அங்குள்ள சிறுவர்களுக்குத் தமது ஸமாஜத்தைப்பற்றி உபந்நியசித்தார். அதிலிருந்துதான் கேசவருக்கு அம்மதத்தில் மனது ஊன்ற ஆரம்பித்தது.

1859-ஆு த்தில் பிரம்ம வித்யாலயம் என்னும் மதப்பிரசார வித்யாசாலை ஒன்றை நிருமித்து அதில் தாகூரும் கேசவரும் பிரம்ம மதத்தின் தத்துவத்தையும் அதற்கு அடிப்படையாகவுள்ள நியாயங்களையும்பற்றி உபந்நியசித்து வந்தனர். கேசவர் அதில் ஆங்கில பாஷையிலேயே பேசுவார். இங்குதான் இதற்குப்பின் பிரம்ம மதத்தைப் போதிப்பதில் பெயர் பெற்ற சமாஜ ஆசிரியர்கள் தமது தொழிலைக் கற்றுக்கொண்டனர். அம்மதக்கோட்பாடுகளை மாத்திரம் அவர்கள் இந்த வித்தியாலயத்தில் அறிந்துபோனதில்லை: அவர்கள் தமது தொழிலில் காட்டிய ஊக்கமும் அவர்களின் உயர்ந்த நோக்கமும் இங்குதான் அவர்களுக்கு முதலில் உதித்ததெனச் சொல்லலாம்.

தாம் செய்த பிரசங்கங்களைக் கேசவர் பிறகு பதினான்கு வியாசங்களாகத் தொகுத்து அச்சிட்டனர். அவற்றில் ஒவ்வொரு மனிதனுக்கும் மத தத்துவம் இயற்கை உணர்ச்சியால் மாத்திரம் ஏற்படுமேயன்றி, யுக்தி நியாயங்களால் ஏற்படாதென்று அவர் சொல்லியிருக்கிறார்.

மற்றொரு சங்கமும் இவரால் இக்காலத்தில் நிலைபெற்றது. அதற்கு ஸங்கத் ஸபா என்று பெயர். அங்கு பிரம்ம ஸமாஜத்தார் ஆத்ம ஞான விஷயங்களைப் பற்றியும் ஸமாஜத்தாரது சரியை கிரியைகளைப் பற்றியும் சர்ச்சைசெய்தனர். அதில் தீர்மானமாகிய வழிகளை யொட்டியே கேசவ சந்திரர் தமது லௌகிக வேலைகளை யொழித்து மதத்துக்குப் பாடுபடத் தீர்மானித்தனர். அவரது தியாகம் மற்றும் பலரையும் அப்படியே செய்யத் தூண்டிற்று. பிரம்மஸமாஜ ஆசாரியர்களின் தொகை பெருகி, அம்மதப் பிரசாரமும் பலவிடங்களில் பெருகலாயிற்று.

இவை தவிர வித்தியாப்பியாசத்துக் கென்று கேசவ சந்திரர் செய்த வேலைகளை இங்குசொல்லுவோம். கல்கத்தா காலேஜ் என்று ஒரு பள்ளிக்கூடம் ஆண்பிள்ளைகளுக்கு ஏற்பாடு செய்தார் இது ஐந்து வருஷகாலம் நன்றாக நடந்து வந்தது ஆயினும் அதற்குப் பிறகு அதை நடத்த முடியவில்லை. ஸ்திரீகளுக்கென்று விக்டோரியா காலேஜ் என ஒருவித்யாலயமும் ஏற்பட்டது. பிரம்மஸமாஜ நேசர்களின் சங்கம் என்னும் ஸ்தாபனம் அந்தப்புரத்தில் உள்ள வங்க வனிதையருக்குப் படிப்புச் சொல்லி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டதாம்.

பல சமயங்களில் கேசவ சந்திரர் பல பத்திரிகைகளை நடத்திவந்தார். 1861-ஆு த்தில் தேவேந்திரனாதருடைய ஆதரணையைக் கொண்டு இவரும் இவர் சிநேகரும் இந்தியன் மிரர் என்னும் பத்திரிகையைப் பிரசுரிக்கலானார்கள். இது முதலில் மாதம் இரு முறையே பதிப்பிக்கப்பட்டது. பிறகு அதை வாரப் பத்திரிகையாகவும், காலக்கிரமத்தில் தினப் பத்திரிகையாகவும் செய்தனர். அதில் மும்முரமாய் நின்று வேலை செய்தவர்கள் கேசவரும் அவர் சகோதரர் கிருஷ்ணவிஹாரி சேனரும் அவர் உறவினர் நரேந்திரனாதருமே. மத விஷயத்திலும், ஜன ஸமூகத்திலும், ராஜீய விஷயங்களிலும் செய்யவேண்டிய சீர்திருத்தங்களை இப்பத்திரிகை வற்புறுத்தி வந்தது. பிரம்ம சமாஜத்தின் கொள்கைகளைப் பரவச் செய்ய அவரும் அவர் சிநேகரும் தத்வ போதினி பத்திரிகையையும், அது சில காலத்துக்குப் பிறகு தேவேந்திர நாதர் கைக்குள் வரவே தர்மதத்வம் என்கிற பத்திரிகையையும் வங்கபாஷையில் பிரசுரித்தனர். கடைசியாக இவர் இங்கிலாந்துக்குச் சென்று திரும்பி வந்தவுடன் ஏற்படுத்திய இந்திய சீர்திருத்தச் சங்கத்தின் ஆதரவின்கீழ் சுலப சமாசாரம் என்றொரு வாரப் பத்திரிகை நடத்தினார். அதன் விலை காலணா ஆயினும் அரிய விஷயங்கள் பல அதில் பிரசுரிக்கப்பட்டன. மது விலக்கு பிரசாரம் செய்து மத் ன கரல் (கள்ளோ விஷமோ) என்று ஒரு மாதப்பத்திரிகையும் நடத்தினார்.

இரஞ்சிதம்

[ஸ்ரீமான் ஆ. இராமசாமி முதலியார், பீ. ஏ.]

(315-ம் பக்கத் தொடர்ச்சி.)

"இவ்வளவு கஷ்டப்பட்டு இக்கடிதத்தின் அந்தரங்கப் பொருளை யறிந்தும் பிரயோசனமற்று விடும்போ லிருக்கிறதே. எனினும் இத்தீவை இன்னும் நன்றாக ஆராய்ந்து பார்க்கிறேன்" என அப்பெரியவர் மனவுறுதி செய்துகொண்டு அன்றிரவை மிகக் கஷ்டத்துடன் கழித்துக் காலையி லெழுந்ததும் மலைமீதேறிப் பரிசோதிக்க வாரம்பித்தார்.

அன்று முதல் அப்பெரியவருக்கு வேறு தொழிலில்லை சூரியோதயத்திலிருந்து அஸ்தமனம் வரையும் 'சிம்மாசன' மிருக்குமிடத்தைத் தேடுவதிலேயே தம் முழுமனத்தையுஞ் செலுத்தினரேயன்றி முன்போற் கடற்கரையோரஞ் சென்று, கப்பல் வருமா என்று பார்ப்பதையும் தமது வீட்டைப்பற்றி நினைத்து வருந்துவதையும் அறவே நீக்கிவிட்டார். அதைக் குறித்துக் கருதுவதுங் கிடையாது.

அகண்ட சாகரத்தின் மத்தியிலுள்ள இச்சிறு தீவைத் தம் இல்லமாக வைத்துக் கொண்டு இவ்வாறு அலைந்து திரிந்து தம் வாணாட்களை யெல்லாம் வீணாட்களாக்கிக் கொண்டிருக்கும் இப்பெரியவர் யார்?

ஒன்பதாம் அத்தியாயம்

இரஞ்சிதத்தின் சாமர்த்தியம்

பயங்கரமான காரிருள் சூழ்ந்துகொண்டிருக்கவும், வண்டுகளின் இரைச்சல் காதைத் துளைக்கவும் சாலையின் இருமருங்கிலுமுள்ள மரங்கள் தளைத்து வளர்ந்து, ஆகாயத்திற் றோன்றும் நக்ஷத்திரங்கள் கண்களுக்குப் புலனாகவண்ணம், குடைபோற் கவிந்திருக்கவும், அச்சத்தைத் தரக்கூடிய இத்தகையதும், இராமனுதபுரத்திலிருந்து வெற்றிலை மண்டபத்திற்குச் செல்லக்கூடியதுமான பாதையில் தன்னந்தனியாக ஒரு வனிதாரத்தினம் நள்ளிரவில் கொஞ்சதூர மோடுவதும், பின் சற்றுதூரம் நடப்பதுமாகப் பயமின்றி சென்றுகொண்டிருந்தாள். அப்பெண்ணின் முகத்தைப் பார்த்தால் நெடுந்தூரம் நடந்துவந்தவள் போற் காணப்படுகிறாள். அவளுடைய கண் பார்வை யெல்லாம் வலப்பக்கத்திலேயே யிருந்தது. அவளுடைய முகத்தில் தோன்றியிருந்த விசனக் குறி அதிகரித்துக்கொண்டே வந்தது.

பின்னும் அப்பெண் கொஞ்சதூரஞ் சென்று ஓரிடத்தில் நின்று பின்னால் திரும்பிப் பார்த்துப் பெருமூச்செறிந்து, "மங்கம்மாள் ஒரு சமயம் தப்பான வழியைக் காண்பித்திருப்பாளோ? அல்லது நான்தான் அவள் சொன்ன வழியைவிட்டு வேறு மார்க்கமாக வந்திருக்கிறேனோ? ஆமாம். அவ்விதந்தா னிருக்கும். அவ்வுத்தமியின் மீது குறை கூறுவதற்கிடமிருக்காது. அவள் குறித்த வழியைத் தப்பவிட்டு வேறொன்றை பிடித்துவந்திருக்கிறேன் என்பது நிச்சயம். நான் அங்கிருந்து புறப்பட்டு அதிக நேரமாயிற்றே. இப்பொழுது மணி சுமார் பன்னிரண்டிருக்கு மென்று நினைக்கிறேன். நடப்பதும் ஓடுவதுமாக வந்ததில் மணிக்கு நான்கு மைல் வீதம் நடந்திருக்கக் கூடும். என்னே, என் மதியீனம்! அவ்வம்மை சொன்ன பிரகாரம் சுமார் இரண்டு மைல் தூரம் நடந்தால் இருப்புப்பாதை வண்டி நிற்குமிடத்தை யடையவேண்டியதாகவிருக்க, அதைச் சற்றும் யோசித்தறியாமல் ஓடோடியும் இவ்வளவு தூரம் வந்திருக்கிறேனே. இச்சாலை எவ்வூருக்குச் செல்லக்கூடியதோ? இவ்வளவு தூரம் வந்தும் மத்தியில் ஓரூரேனும் கண்ணுக்குத் தென்படவில்லை. ஒரு சமயம் இப்பாதை மதுரைக்குச் செல்லக் கூடியதாக விருக்குமா? அவ்விதம் முடியுமானால் வழிதப்பிப் போனதைப்பற்றி விசனமடையாமற் சந்தோஷங் கொள்ளுவேன். என் கால்கள் வலிக்கின்றன வெனினும் அதைக் கருதாமற் செல்வேன். அவ்வாறின்றி இவ்வழி வேறெங்கேனுங் கொண்டு சென்று மறுபடியும் அப்படுபாவி மதனகோபன் கையிற் சிக்குவேனாயின் என் கதி என்ன வாகும்! அத்துன்மார்க்கன் என்னுடைய கற்பை யழித்த பின்னே மறுவார்த்தை யாடுவான். ஆ! மீனம்பிகா! நீ என் வேண்டுகோளிற் கிரங்கி அவ்வுத்தமியின் மனதிற் புகுந்து அவளுடைய மனதை என்பால் திருப்பி என்னை அங்கிருந்தும் தப்பி வந்து விடும்படி செய்தும் இங்நிர்மானுஷ்யமான இருண்டவிடத்தில் என்னைக் கொண்டுவந்து நிறுத்தி வேடிக்கை பார்ப்பது உனக்கழகா? கருணைக்குச் சாகரமான நீ என்பாற் சிறிது கருணை செலுத்தினால் அது குறைந்து விடுமா! கிருபைக் கண் படைத்திருக்கும் தாயே! உன் கண்ணோட்டத்தை இங்கு செலுத்தி ஏழையைக் காப்பாற்ற

மாட்டாயா! ஆபத்திலிருந்து நீக்கி என்னை இவ்வாறு துன்புறுத்துவதை விட விஷ ஜந்துக்களையேனும் துஷ்ட விலங்குகளையேனும் ஏவி என்னைக் கொன்று உன் பாதாரவிந்தத்திற் சேர்த்துக் கொள்ளலாமே ஏனோ இத்தகைய இன்னல்கள் எனக்குண்டாகுமாறு செய்கிறாய்? எவ்வழி சென்றாலும் துக்கமுண்டாகுமேயன்றிச் சுகமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லையே. திரும்பிச் சென்றால் அச் சண்டாளனின் கையிற் படுவேன் என்பதிற் சந்தேகமில்லை. முன் செல்வதற்கும் மனந் துணியவில்லை. என்னை அறியாமலே இவ்வளவு தூரம் வந்திருக்கிறேன். இதுவும் அச் சொக்கேசுவரரின் திருவிளையாட்டே போலும். சர்வ சக்தியுள்ள பகவானின் எண்ணத்தை யாரே அறிபவல்லார். அவருடைய தூண்டுதலால் இவ்வழியைப்பற்றி நான் வந்திருக்கிறதால் நன்மையே எனக்குண்டாக வேண்டும். ஆதலின் முன்னோக்கி நடக்கிறேன்'' என்று மனவுறுதி செய்துகொண்டு நடந்து போனாள்.

இத்தனி வழியே செல்லும் மாது நல்லாள் நம் கதாநாயகிதான் என்பதை வாசகர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள். இவ்வாறு சென்று கொண்டிருந்த இரஞ்சிதம் கொஞ்ச தூரம் போனவுடன் "யார் அது? நில்'' என்ற சொற்கள் காதில் விழத் திடுக்கிட்டு நின்றாள். சப்தம் வந்த இடத்தைப் பார்த்தாள். சமீபத்திலிருக்கும் வஸ்து கண்ணுக்குப் புலனாகா வண்ணம் இருட்டாயிருந்ததினால் அவளுக்கு யாதோருருவமும் தோன்றவில்லையெனினும், மேற்குறித்துள்ள உத்தரவு பிறந்த ஒரு விநாடிக்குள், கருத்த மேனியையும், திரண்டு பருத்த உருவத்தையுமுடைய ஒருவன் கையில் எரிகின்ற சுளுந்தொன்றைப் பிடித்துக்கொண்டு சாலை மரத்தின் பின்புறத்திலிருந்து வந்து இரஞ்சிதத்தின் எதிரில் நின்று, "ஏ! குட்டி! நீ யார்? இந்நேரத்தில் எங்கு செல்லுகிறாய்?'' என்று கேட்டுக்கொண்டே உற்று நோக்கினான். நடு நிசியையும், மனித சஞ்சாரமற்ற விடத்தையும், அவனுடைய கோர ரூபத்தையும், அவன் எத்தகையோனென்பதையுங் கருதுமிடத்து, இரஞ்சிதம் சொல்லொணாப் பயத்தைக் கொண்டாளெனினும் மனோதைரியத்தைக் கைவிடாமல் "ஐயா! நான் ஒரு ஏழைப் பரதேசி. வயிறு வளர்ப்பதன் நிமித்தம் ஊரூராய்ச் சென்று பிச்சை எடுப்பவள். சமீபத்திலிருக்கும் ஊருக்குச் செல்லலாமென்ற விருப்பத்தினாலும், தம் போன்றார்க்குப் பயப்படும்படியாக என்னிடத்திலொன்றுமில்லை யாதலினாலும் நான் இந்நேரத்தில் இத்தனி வழியே போய்க் கொண்டிருக்கிறேன். என்னிடத்தில் ஏதேனுமிருந்தாற் கொடுத்துவிட்டுப் போவேன். ஒன்றுமில்லையே என்று விசனப்படுகிறேன்'' என்று சொன்னாள். "நீ பிச்சை எடுத்துண்ணும் ஏழைப் பெண்ணாயிருந்தாலும் சாமர்த்தியமாகப் பேசக் கற்றுக்கொண்டிருக்கிறாய். அதுவும் உனக்கு அவசியந்தான். தவிர, உன் இனிய குரலையும் இணையற்ற உன் சுந்தர மேனியையுங் கண்ட எவனும் உன்மீது ஆசை கொள்வானே. அவ்வாறிருக்க நீ இவ்விதங் கஷ்டப் பட்டுச் சீவனஞ் செய்ய வேண்டிய காரணமென்ன?'' என்று அத்திருடன் கேட்டான். ரஞ்சிதத்தை வழிமறித்து வார்த்தையாடினவன் கள்வனே யாகும்.

"ஐயா! எனக்கு இதுவரையுங் கிடைத்து வந்த கஞ்சி என் உயிருள்ள வரையுங் கிடைத்தாற் போதுமானது. இதை விட நான் விரும்பக் கூடிய சுகம் வேறொன்றுமில்லை. தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும். விடியுமுன் ஓரூரை யடைந்தால் ஏதேனுங் கிடைக்கும். தங்களிடம் வார்த்தையாடிக்கொண்டு இங்கு நின்றிருந்தால் காலையில் பட்டினி கிடக்க வேண்டி வரும். ஆதலின் எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும்'' என்று சொல்லி நடந்தாள். திருடன் அவளைப் போகவொட்டாமல் தடுத்து, "பெண்ணே! உன்னிடத்தில் ஏதேனுமிருந்தால் கொடுப்பதாகச் சொன்னாயல்லவா? உன்னிடமிருக்கு மொன்றைக் கேட்கிறேன். கொடுப்பாயா?'' என்று கேட்க, "என்னிடத்தில் தாம் விரும்பக்கூடிய தொன்றுமில்லையே'' என்று இரஞ்சிதம் சொல்ல; "நான் கேட்பது இன்னதென்பதை நீ உணராயாதலின் இவ்வாறு சொல்லுகிறாய். உன் அழகான வாயால் எனக்கு ஒரு முத்தங்கொடு'' என்று கள்வன் சொல்லிக் கொண்டே அருகில் நெருங்க, இரஞ்சிதம் பின்னாற் சென்று, "ஜனசந்தடியில்லாத விடத்தில் துணையின்றி வந்த பிச்சைக்காரியைப் பார்த்துத் தாம் இவ்வாறு சொல்வது ஓர் ஆண்பிள்ளைக் கழகல்ல. எல்லோரையுஞ் சமமாகப் பாவித்து விடக்கூடாது. இரந்துண்ணும் பெண்களினும் பதிவிரதைகள் இருக்கிறார்களென்பதை அறிந்து

நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத் துன்பங்கள் சென்று படும்.

கொள்வீராக. வீணாக என் மனதைப் புண்ணுக்
காமல் என்னைப் போகும்படி விட்டுவிடுவது
உமக்குப் பெரும் புண்ணியமாகும்'' என்று
வேண்ட, ''பிச்சைக்காரியா யிருந்தாலும் மிக
ஒழுங்காகப் பேசுகிறாய். ஆனால் என்னை நீ
அறிந்துகொள்ளாமல் வார்த்தை யாடுகிறாய். புண்
ணிய பாவத்திற்குக் கட்டுப்படுபவனா யிருந்தால்
இத்தொழிலி லிறங்குவேனா? உன் வார்த்தை
களால் மயங்கி விட்டுவிடுவேனென்றும் எண்ணி
விடாதே. ஆதலின் உன்னை வற்புறுத்துமுன்
நான் சொன்னவிதம் செய்வாயாக'' என்று
அவன் சொல்லி நெருங்கினான்.

பஞ்சமாபாதகங்களில் ஒன்றான களவுத்தொழி
லைக் கையாண்டு வருபவனை வார்த்தைகளால் நன்
மார்க்கத்தில் திருப்ப முயல்வது வீணே யென்
பதை யுணர்ந்த இரஞ்சிதம், அவனிடமிருந்து
தப்புவதற்கு வேறு வழியொன்றுந் தோன்றாதவ
ளாய்த் தான் வந்த வழியாகத் திரும்பி ஓடினாள்.
கள்வன் இதை எதிர்பார்க்கவில்லை யாதலின்
சற்று நேரம் சும்மா நின்றிருந்து பிறகு அவளைப்
பின்தொடர்ந்து ஓடினான். இதற்குள்ளாக இரஞ்சி
தம் சுமார் இருபது கஜதூரஞ் சென்று விட்
டாள். மேலும் அவனுடைய தேகம் பருத்திருந்
ததினால் வேகமாக ஓட முடியவில்லை. எனினும்
விடாமல் பின்தொடர்ந்தான். அவ்வாறு அவன்
ஓடும்பொழுது பாதையிற்கிடந்த கொடியொன்று
காலிற் சுற்றித் தடைபடுத்த தடாலென்று
பூமியின்மீது விழுந்தான். மார்பில் அடி பல
மாகத் தாக்கியதாலும், அங்குக் கிடந்த கல்லின்
மீது நெற்றி மோதப்பட்டதாலும் அவன் மூர்ச்
சை யடைந்தான். அவன் விழுந்த சப்தத்தை
யும், அச்சமயம் அவன் கூக்குரலிட்டதையுங்
கேட்ட இரஞ்சிதம் திரும்பிப் பார்த்து நின்றாள்.
அவன் எழுந்திராமற் கிடப்பதைக் கண்டு மூர்ச்
சையுற்றிருப்பானோ என்று சந்தேகித்துப் பரி
தாபங் கொண்டு அவனுக்கு உதவி செய்ய
விரும்பி அவ்விடத்தை நோக்கி வந்தாள். ஒரு
சமயம் அவளை ஏமாற்ற வெண்ணி இவ்வாறு
பாசாங்கு செய்கிறானோ எனச் சந்தேகித்து நின்
றாள். பிறகு, அவ்விதமிருக்க நியாயமில்லை
என்று நினைத்து அவனருகில் வந்து பார்த்தாள்.
அவனுடைய கையிலிருந்த சுழுந்து கீழே விழுந்
ததெனினும் நன்றாக எரிந்து கொண்டிருந்தது.
நெற்றியிலிருந்து உதிரம் வடிவது மாத்திரமன்றி
மூக்கிலும் வாயிலும் இரத்தம் காணப்பட்டது.
இறந்து விட்டானோ என்று சந்தேகித்தாள்.
சுவாசம் விடுவதைக் கண்டு மூர்ச்சை யடைந்தி
ருக்கிறான் என்பதை யறிந்தாள். விடியும்வரை
அவன் மூர்ச்சையிலேயே யிருந்து வழிப்போக்கு
வண்டிகள் ஏதேனும் வந்தால் அநியாயமாக
உயிர் துறப்பானென்பதை யுத்தேசித்துச் சாலை
யினோரத்தில் அவனை இழுத்துவிட எண்ணி
னாள். அவ்வாறு அவனைப் பிடித்திழுக்கும் பொ
ழுது மூர்ச்சை தெளிவானாயின் தனக்கே
கெடுதலாய் முடியுமென்று கருதினாள். ''எவ்வா
றாயினுஞ் சரியே நன்மை புரிவோரைத் தீமை
யணுகாதாதலின் இவனைக் காப்பாற்ற முயல்கி
றேன்'' என மனவுறுதி செய்துகொண்டு அவ
னுடைய கைகளைப் பிடிக்கக் குனிந்தாள்.

அச்சமயம் பின்னால் ஏதோ சப்தமுண்டாக
அது என்னவென்று பார்க்கத் திரும்பினாள்.
இரஞ்சிதம் வந்த மார்க்கத்தில், சுமார் முப்பது
கஜதூரத்திற்கப்பால் தீவட்டிகளைப் பிடித்துக்
கொண்டு இருவர் அதிவேகமாக வருவதைப்
பார்த்தாள். மரத்தின் பின்னால் மறைந்து விட
லாமாவென எண்ணினாள். கீழே கிடக்கும்
சுழுந்து எரிந்து கொண்டிருந்ததினாலும் அவர்
கள் சமீபித்து விட்டதினாலும், தான் ஓடிமறைந்
தாலும் அவர்களாற் கண்டு கொள்ள முடியு
மென்று கருதி அசையாமல் அவ்விடத்திலேயே
நின்றுகொண்டு, ''இவர்களும் இவனைச் சார்ந்த
வர்களாயின் என் கதி என்னவாகும்? ஈசா!
நீதான் எனக்குத் துணை'' என்று சிந்தித்திருந்
தாள்.

அவ்விருவரும் இரஞ்சிதம் நின்றிருந்த இடத்
திற்கு வந்து, ''அம்மா! நீ யார்? இந்நடு
நிசியில் இங்கு எவ்விதம் வந்தாய்? இவ்விடத்
தில் எதற்காக நின்று கொண்டிருக்கிறாய்?
இவன் யார்? பார்த்தால் திருடன் போற்
காணப்படுகிறான். மூர்ச்சையாகிக் கிடக்கிறானா?
அல்லது இறந்துவிட்டானா?'' என்று அவர்க
ளில் ஒருவன் கேட்டான்.

இரஞ்சிதம்:—''அண்ணன்மார்களே! நான்
ஒரு ஏழைப்பரதேசி. வயிறு வளர்ப்பதின் நிமித்
தம் அயலூர் செல்லவெண்ணி இம்மார்க்கமாய்
வந்து கொண்டிருந்த என்னை இவர் சந்தித்துப்
பிடிப்பதன் பொருட்டு துறத்திக்கொண்டு வந்த
வர் தற்செயலாய்க் காலிடறிக் கீழே விழுந்து
மூர்ச்சையானார். ஒரு சமயம் இறந்து விட்டா
ரோ என்னமோ வென்று பார்த்துக்கொண்டிருக்

நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார் சொற்பொருள் சோர்வு படும்.

கும் பொழுது நீங்கள் வந்தீர்கள்'' என்று சொன்னாள்.

வந்தவர்களில் ஒருவன்:—''என்ன எண்ணங் கொண்டு உன்னைப் பிடிக்க வந்தானோ? கடவுள் உடனே தண்டித்து விட்டார். நாங்களும் சமீபத்திலிருக்கும் ஊருக்குப் போகிறோமாதலின் உனக்கு இஷ்டமானால் எங்களுடன் வரலாம். காலத்தையும் இடத்தையும் இவன் செய்த காரியத்தையும் நோக்குமிடத்து இவன் இறக்க வேண்டியது நியாயமேயெனினும் நம்மால் ஒருயிரைக் காப்பாற்றச் சாத்தியமானவிடத்து அவ்வாறு செய்யாமலிருப்பது நன்றல்ல வாதலின், இவனைத் தூக்கிச் சாலையோரத்திற் கிடத்துவோம். இன்றேல் போக்குவண்டிகளிற் சிக்குண்டு மரண மடைவான்'' என்று சொல்லித் தன்னுடன் வந்தவன் உதவிகொண்டு அக்கள்வனைத் தூக்கி அப்புறப்படுத்தினான்.

இவனுடைய வார்த்தைகளையுஞ் செய்கைகளையும் கவனித்த இரஞ்சிதம் அவர்கள்மீது நல்லபிப்பிராயங் கொண்டும், அவர்களை வழிப்போக்கர்களென்றும் சற்குணமுடையவர்களென்றுங் கருதியும் அவர்களின் துணைகொண்டு செல்லச் சம்மதிக்க மூவரும் வழி நடந்தார்கள்.

வ ஒருவன்:—அம்மா நீ யார் என்று நான் கேட்டதற்குச் சரியான பதில் சொல்லவில்லையே?

இர:—அண்ணா! நானொரு பிச்சைக்காரியென்று முன்னமேயே சொன்னேன். தாம் அதைக் கவனிக்கவில்லை போலும்.

வ. ஒருவன்:—அது எனக்கு நினைவிருக்கிறது. அது நிஜமான வார்த்தையன்றென்றே மறுமுறை கேட்டேன்.

இர:—தாம் அவ்வாறு சொன்னால் நான் எவ்விதம் பதிற் கூறுவது? உண்மையைச் சொன்னேன். தங்களுக்கு நம்பிக்கை யில்லை. இதற்கு நான் என்னசெய்வது?

வ. மற்றவன்:—உன்னைப் பார்த்த எவனும் பிரபு வீட்டுப் பெண்ணென்று சொல்லப் பின் வாங்கமாட்டானே. அவ்வித மிருக்க நீ பிச்சைக்காரியென்று சொன்னால் யார்தான் உன் வார்த்தையை நம்புவார்கள் அதோ அங்குக் கிடக்கும் கள்வனுக்குச் சொல்லியிருந்தால் அவன் ஒரு சமயம் நம்பியிருப்பான்.

வ. ஒருவன்:—சுந்தரம்! நீ என் மனதிலுள்ளதையே நன்றாகக் கூறினாய்.

சுந்தரம்:—வேலாயுதம்! மேலும் இப் பெண்ணின் விநய வசனங்களையும், நடை யுடை பாவனைகளையும் மேன்மைக்குணத்தையும் பார்க்குமிடத்து நான் சொன்னதை யுறுதிப் படுத்துகின்றது. அதுவுமல்லாமல், வீட்டில் கோபித்துக் கொண்டேனும், அல்லது எவ்விடத்திலோ தனியாகவிருந்த பொழுது துஷ்டர்கள் கையிற் சிக்குண்டு மறுபடியும் தெய்வச் செயலாய்த் தப்பியேனும் இன்ன விடத்திற்குப் போவதென்னுங் குறிப்பில்லாமலும் இம்மங்கை செல்கிறாள் என்பதையு முறுதியாகச் சொல்லுவேன்.

வேலாயுதம்:—அது என்ன அவ்வளவு உறுதியாகச் சொல்கிறாய்? இதற்கு முன் இந்தப் பெண்ணை எங்கேனும் பார்த்திருக்கிறாயா என்ன?

சுந்தரம்:—நான் இதற்குமுன் பார்த்ததில்லையெனினும், நான் சொன்னதின் உண்மையைக் காட்டுகிறேன் பார். அம்மா! சமீபத்திலிருக்கும் ஊரின் பெயரையாவது அல்லது இன்ன விடத்திற்குப் போக உத்தேசித்திருக்கிறாயென்பதையாவது உன்னால் இப்பொழுது சொல்ல முடியுமா?

இர:—அண்ணா! தயவு செய்து என்னை மன்னிக்கவேண்டும். அத்தகைய கேள்விகட்குப் பதிற் சொல்ல என்னால் முடியாமலிருக்கிறதைப்பற்றி விசனிக்கிறேன். இரந்துண்போர்க்குத் தாம் பிச்சை யெடுக்கும் ஊரின் பெயரை யறிந்துகொள்ளவேண்டிய அவசியமில்லையாதலினாலும், இனிமேற் செல்வது இன்ன விடத்திற்குத்தான் என்னும் குறிப்பு அவர்கட் கில்லையானதினாலும், சமீபத்திலுள்ள ஊர்களின் பெயரை விசாரித்துத் தெரிந்து கொள்ள வல்லநிமித்த மின்றாதலினாலும் தங்களுடைய வினாவுக்குச் சரியான உத்தரமளிக்க என்னாலியலவில்லை. என்போன்றார்க்கு எல்லா ஊர்களும் ஒன்றுதான். பெரிய ஊராகவிருந்தால் சிறிது நாட்கள் தங்கிச் செல்லுகிறேன். குக்கிராமமாகவிருப்பின் அன்றிருந்து மறுநாள் வேற்றூர்க்குச் செல்லுகிறேன். ஆகவே ஊரின் பெயரை அறிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை யென்பது ஏற்படும்.

சுந்தரம்:—நீ உன் உண்மையான நிலைமையை மறைத்துரைக்கிறா யென்பதை நான் நன்றாக அறிந்துகொண்டே னெனினும் உனக்கு அதை வெளியிட இஷ்டமில்லாம லிருக்கும்பொழுது வற்புறுத்திக் கேட்பது நன்றல்ல. இருக்கட்டும். உன் பிறப்பிட மின்னதென்பதையாவது சொல்லுவாயா?

இர :— நான் முன் உரைத்ததைத் தான் மறுபடியுஞ் சொல்லவேண்டி யிருக்கிறது. என் பிறப்பிடத்தைத் தெரிந்து கொள்வதற் குரிய காரணம் எனக்குத் தோன்றவில்லை யானதினும், அதை யறிந்து கொள்வதால் உண்டாகக் கூடிய நன்மை இன்னதென எனக்குப் புலப்படவில்லை யாகையினாலும் இது விஷயத்தைக் குறித்து என் பெற்றோர்களை நான் கேட்கவில்லை.

சுந் :— உன் தாய் தந்தையர் இருக்கிறார்களா ?

இர :— அந்தப் பாக்கியத்தை நான் கொடுத்து வைக்கவில்லை. நான் ஓர் அனாதி.

சுந் :— உனக்கு விவாகமாகிவிட்டதா?

இர :— நான் தனியாகத்தா னிருக்கிறேன்.

சுந் :— கல்யாணம் இன்னும் ஆகவில்லை என்கிறாயா? அல்லது உன் புருஷன் இறந்து விட்டான் என்று சொல்லுகிறாயா ?

வே :— சுந்தரம் இப்பெண் ஓர் ஆடவனாயிருந்தால் நீ கேட்கும் கேள்விகளுக்குச் சரியான பதில் கூச்சமின்றிச் சொல்லக் கூடும். நமக்கு அறிமுகமில்லாத அனாதைப் பெண்ணைத் தனியிடத்திற் சந்தித்து இவ்வாறு கேட்பதும் நமக் கழகல்ல. ஆதலின் நீ இவ்விஷயத்தைப் பற்றி இனிமேல் வார்த்தை யாடாமலிருப்பாயாக. நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதற்கிணங்கி உன்னால் நடக்கமுடியுமா ?

இர :— அண்ணா! தம்முடைய விருப்ப மின்னதென்று தெரிவித்தால், அதற்கிணங்கி என்னால் நடக்க முடியும், முடியாதென்பதைப் பின்னால் தெரிவிக்கிறேன்.

சுந் :— வார்த்தையிற் சிக்கி ஏமாந்து போகக் கூடிய பெண்ணல்ல வென்பதை நன்றாகத் தெரிந்துகொள்

வே :— இதில் ஏமாற்றுவ தொன்றுமில்லை. அம்மா! உனக்கு எழுதப் படிக்கத்தெரியுமா ?

இர :— அதிகமாகத் தெரியுமென்று சொல்வதற்கில்லை. ஏதோ கொஞ்சம் வாசித்திருக்கிறேன்.

வே :— பாண்டித்தியம் வேண்டுமென்று நான் சொல்லவில்லை. எழுதப் படிக்கத் தெரிந்திருந்தாற் போதுமானது. எனக்கிரண்டு பெண் குழந்தைக ளிருக்கிறார்கள். அவர்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்துக்கொண்டு வீட்டு வேலையிலும் சற்று சகாயஞ் செய்து வருவாயானால் உனக்குச் சாதம் போட்டு மாதத்திலும் இவ்வளவு ரூபாயென்று கொடுக்கிறேன். உனக்கு இது சம்மதமானாற் சொல்வாயாக.

இர :— தங்கள் விருப்பத்தைப் பூர்த்திசெய்ய முடியாதவளாயிருக்கிறேன். இதைவிட அதிகஞ் சொல்லவும் என்னாலியலாது.

சுந் :— இப்பதிலை நான் முன்னமேயே எதிர் பார்த்தேன்

வே :— ஏனம்மா ! உனக்கு ஒரு சமயம் வீட்டுவேலை செய்வதற்குப் பிரியமில்லாமலிருந்தால் நீ அதை ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. என் குழந்தைகளுக்குப் பாடஞ் சொல்லிக்கொண்டிருந்தால் போதுமானது.

இர :— வீட்டு வேலை செய்வதற்கென்றே பெண்கள் பிறந்திருக்கும் பொழுது அதைச் செய்ய இஷ்டப்படாத பெண்ணையும் பெண்ணென்று சொல்லலாமா ? இல்லை. ஆதலின் வேலைக்குப் பயந்து தாங்கள் சொன்னதை நான் மறுத்ததாக எண்ணக்கூடாது.

சுந் .— அவ்விதமெனின் வேறு காரணந்தா னென்ன ?

இர :— அண்ணா ! நான் சொல்லாமலே அதைத் தாங்கள் அறிந்து கொள்வீர்களென்று எண்ணினேன். அவ்விதமின்றித் தாம் கேட்டதால் சொல்லுகிறேன் கேளுங்கள். இவ்வுலகத்திலுள்ள மாதர் மாந்தர் ஒவ்வொருவரும் எவ்வாறு அங்க அடையாளங்களில் அநேகமாய் மாறுபட்டிருக்கிறார்களோ, அவ்வாறே குணத்திலும் தன்மையிலும் நடவடிக்கையிலும் எண்ணத்திலும் விருப்பத்திலும் ஆசையிலும் வேறுபட்டு நிற்கிறார்களென்பது அனுபவ வாயிலா யறியத்தக்க உண்மையாகும். பாவ கிருத்தியங்களைச் செய்வதிலேயே சிலர் நோக்கமுடையவர்களா யிருக்கிறார்கள். புண்ணிய கருமங்களைப் புரிவதில் விருப்பமுடையோருஞ் சிலரிருக்கின்றனர். பணத்தைத் தேடிவைப்பதிலேயே ஒருவன் முழு மனதுடையவனாக விருப்பின், மற்றொருவன் செல்வத்தைச் செலவழிப்பதையே பெருந் தொழிலாகக்கொண்டிருக்கிறான். கற்பைக் காத்தலே பெருந் தருமமென்று சில பெண்களிருக்க, வியபசாரத்துவமே பேரின்ப மென்றெண்ணக் கூடிய பெண்களுமுண்டு. தனத்தையும் அதனா லடையவல்ல சுகத்தையும் அதிகமாகக் கிடைக்கப்பட்டிருந்தும் அதனாற் சமாதானமடையாமல் தனமும் சுகமும் அதிகரிக்க வேண்டுமென்று சிலர் பேராசை கொள்ளுகிறார்கள். கந்தையுங் கஞ்சியுங் கிடைக்கப் பெற்றுத் திருப்தியுடன் வாழ்வோரு மிருக்கின்றனர். ஆகவே உலகம் பலவித மென்றேற்

இன்றும் வருவது கொல்லோ நெருநலுங் கொன்றது போலு நிரப்பு.

படுகிறது. தம்முடைய நண்பர், நான் பிச்சை யெடுத்துண்பதிற் சாலவும் கஷ்டப்படுகிறே னென்றெண்ணி அதை நீக்கிவிடலாமென்ற கருத்துக்கொண்டு அவர் என்னைத் தன்னுடைய வீட்டிற்கழைக்கிறார். அவ்வாறு கருதுவதும் இயல்பே யாகும். அதை விரும்பக் கூடியவர்கள் என்போன்றாரில் சிலரிருக்கக்கூடும். ஆனால் எனக்கு அத்தகைய விருப்பமில்லை. எனக்குப் பகவானால் இட்டுவரப்பட்ட கூழை இதுகாறுஞ் சந்தோஷத்துடனே குடித்து வருகிறேன். இது வரையும் எனக்கு யாதொரு கஷ்டமும் ஏற் பட்டதில்லை. இனிமேலும் ஏற்படாதென்பது என் நம்பிக்கை. அது பொய்யாதென்பதும் உறுதி. இருப்பதைக் கொண்டு திருப்தியடை வது என் கொள்கை. ஒருவிதமான ஆசையும் என் மனதிற் கிடையாது. இவைகளை யெல் லாம் சேர்த்துப் பார்ப்பீராயின் நான் மறுத்து ரைத்ததற்குரிய காரணமின்னதென விளங்கும்.

வே :—அம்மா! இனி உன்னை வற்புறுத்து வதில் எனக்கிஷ்டமில்லை. உன்னைப் பார்த்த தும் எனக்கு உன்மீது ஒருவித நல்லபிப் பிராயம் விழுந்து மிடிமையால் உனக்குண்டா யிருக்குங் கஷ்டத்தை நீக்கிச் சுகமுறச் செய்ய லாமென்றெண்ணி என் மனதிலுதித்த ஏற்பாட் டைச் சொன்னேன் உனக்கு அதில் விருப்ப மில்லை யென்றால் மறுவார்த்தையாட எனக்குச் சுதந்தரமில்லை.

இர :—அண்ணா! என்மீது தயை கூர்ந்து மன்னிக்க வேண்டும். கேவலம் பிச்சை யெடுத் துண்ணும் ஏழைப் பெண்ணாகிய இவள், நாம் சொன்னதை மறுத்து அவளுக்குத்தான் பேசத் தெரியுமென்றெண்ணி வாயில் வந்தன வெல்லாம் உளறிக் கொட்டுகிறாளே என்று தாம் நினைத்துவிடக் கூடாதெனத் தங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். அண்ணா! நீங்கள் சென்று கொண்டிருங்கள். இதோ வந்துவிடுகி றேன் என்று சொல்லி மரத்தின் பின்னால் ஒதுங்கினாள்.

சுங் :—வேலாயுதம்! உருப்படி எப்படி? என்று மெதுவாகக் கேட்டான்.

வே :—அதைப்பற்றிக் கேட்கவும் வேண்டு மா! மேலும் நன்றாகக் கற்றறிந்த பெண் போலுங் காணப்படுகிறாள். நமக்கு வேறு வழிப் போக்கரொருவருங் கிடைக்கவில்லை யெனினும், இப்பெண் நம்முடைய கையிலகப்பட்டிருப்பதை ஆயிரம் பொன் கிடைத்த மாதிரி மதிக்கிறேன்.

சுங் :—சபாஷ். என் மனதிலிருந்ததை நன்றா கச் சொன்னாய். வெற்றிலை மண்டபம் வரை யும் நடத்திச் செல்வோம். பிறகு காரியத்தை முடிக்க வேண்டியதுதானே?

வே :—ஆகா! அதிற் சந்தேகமென்ன? வரு கிறாள் போலிருக்கிறது. அவளுடன் அதிகம் வார்த்தையாடாமற் போவதே நல்லது. காரியத் தை மறந்துவிடாதே.

இதற்குள் இரஞ்சிதமும் அவர்களுடன் வந்து சேர்ந்தாள். விசேஷ சம்பாஷணை யாதுமின்றி மூவரும் வழி நடந்து வைகறையில் மண்டபத் தை யணுகினார்கள். அப்பொழுது இரஞ்சிதம், "அண்ணா! வீடுகள் காணப்படுகின்றன. ஏதோ ஊர் போலிருக்கிறது. தங்களுடன் இனிமேல் நான் வருவது நன்றாகவிராது. தாங்கள் முன்ன தாகச் செல்லுங்கள். இது காறும் எனக்குத் துணை வந்ததைப்பற்றி மனமுவந்த நமஸ்காரம். நான் நிற்கிறேன்" என்று சொல்ல, வேலாயுதம், "ஆம்; அம்மா இதுதான் வெற்றிலை மண்டபம்" என்றுரைக்க, "என்ன! வெற்றிலை மண்டபமா!" என்று இரஞ்சிதம் திடுக்கிட்டுக்கூறவும், அவளுக் குப் பின்னால் நின்றுகொண்டிருந்த சுந்தரம் மயக்க மருந்தைக் கொண்ட கைக்குட்டை யொன்றை அவளுடைய மூக்கண்டை வைக்க வும் அவள் மூர்ச்சையானாள். மயக்குற்ற இரஞ் சிதத்தை இருவரும் தூக்கிக்கொண்டு பாம்பன் கால்வாயருகிற் சென்று அங்கு தயாராக நிறுத் தப்பட்டிருந்த கப்பலில் ஏறினார்கள். கொஞ்ச நேரத்தில் கப்பலும் புறப்பட்டது.

பத்தாம் அத்தியாயம்

இரத்தினமணி யார்?

கனகவல்லியின் சூழ்ச்சி

கடந்த அத்தியாயத்திற் கூறின சம்பவங்கள் நடந்துகொண் டிருந்தபொழுது மதுரையில் நிகழ்ந்த ஒரு விசேஷத்தை இங்கு வரைகி றோம். ஒருநாள் பகல் பதினொரு மணிக்குச் சென்னையிலிருந்து இராமேசுவரத்திற்குச் செல் லும்'போட்மெயில்' வண்டி மதுரை ஸ்டேஷனில் வந்து நின்றதும், எண்ணிறந்த பிரயாணிகள் இறங்கி வெளியிற் சென்று கொண்டிருக்கும் பொழுது, சுமார் இருபது வயதென மதிக்கத்

நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள் யாதொன்றுங் கண்பா டரிது.

தகுந்தவளும் சுந்தர வதனத்தை யுடையவளு மான ஒரு பெண்பிள்ளை கையிற் சிறு மூட்டை ஒன்றை வைத்துக்கொண்டு, ஜனங்கள் மத்தியிற் புகுந்து செல்ல அஞ்சி எல்லோருஞ் சென்றபின் செல்லலாமென்ற உத்தேசத்துடன், ஒருபுறமாக நின்றிருந்தாள். சற்று தூரத்தில் நின்றிருந்த அவ்வூர் ஹெட் கான்ஸ்டேபிள் மயில் வாகனம் என்பவன் இப்பெண்ணைக் கண்ணுற்று அவள் நிற்குமிடத்திற்கு அதி விரைவாக வந்து "கனகவல்லி! க்ஷேமமா? இப்பொழுது எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டான்.

கனகவல்லி :—அத்தான்! க்ஷேமந்தான். நான் திரிச்சிராப்பள்ளியி லிருந்து வருகிறேன். தாங்கள் இங்கு எப்பொழுது வந்தீர்கள்? ஏதேனும் உத்தியோக அலுவலாக வந்திருக்கிறீர்களோ? அக்காள் குழந்தைகளெல்லோரும் சௌக்கியந்தானே?

மயில்வாகனம் :—எல்லோரும் க்ஷேமந்தான். என்னை இவ்வூருக்கு மாற்றி யிருக்கிறார்கள். ஒரு மாதம் லீவில் ஊருக்கு எல்லோரும் போயிருந்தோம். அப்பொழுது விசாரித்ததில் நீ நாடகக் கம்பெனியிற் சேர்ந்து கொண்டதாகக் கேள்விப்பட்டேன். முந்தின நாள் தான் எல்லோரும் இங்கு வந்தோம். இவ்வூருக்குப் புதிதாக ஒரு பெண் நாடகக் கம்பெனி வந்திருக்கிறதென்பதை யறிந்ததும் ஒரு சமயம் நீ இக்கம்பெனியில்தான் சேர்ந்திருக்கக்கூடும் என்றெண்ணி இன்று விசாரித்தறியலாமென நினைத்திருக்கும்பொழுது உன்னையே சந்தித்துவிட்டதைப்பற்றிச் சந்தோஷமடைகிறேன்.

கன :—தாங்கள் நினைத்தது போல் இவ்வூரில் சில நாட்களாக நடந்துவரும் நாடகக் கம்பெனியில்தான் சேர்ந்திருக்கிறேன். நாடக விஷயமாகவேதான் திரிச்சிக்கும் போயிருந்தேன். அவ்விடத்தில் ஓர் அபூர்வ சம்பவம் நிகழ்ந்தது. அதின் அந்தரங்கத்தைக் கண்டறிய வேண்டியதாக விருக்கிறது. அதில் ஒரு பெண் சம்பந்தப்பட் டிருக்கிறாள் ஏதோ மோசம் நடந்திருக்குமென்றும் நினைக்கிறேன். இதற்குத் தம்போன்றாருடைய உதவி அத்தியாவசியகம். தங்களைப் பார்த்ததும், கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தமாதிரி யாயிற்று. தாங்கள் இவ்வூரிலேயே வேலையி லமர்ந்திருக்கிறீர்களென்பதை அறியப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று.

மயில் :—கனகவல்லி! நீ சொன்னதொன்றும் எனக்கு விளங்கவில்லை. ஆனால் ஏதோ ஒரு பெரிய 'கேஸ்' நடந்திருக்கிறதென்பது மாத்திரம் எனக்குத் தெரிகிறது.

கன :—விவரமாகச் சொன்னால்தான் தங்களுக்கு விளங்கும். இக்காரியத்தை இரகசியமாக நடத்தவேண்டி யிருப்பதால் இவ்விடத்தில் நின்றுகொண்டு இதைப்பற்றிப் பேசுவது உசிதமல்ல. வீட்டிற்குச் சென்றவுடன் எல்லாவற்றையும் விளங்கக் கூறுகிறேன்.

மயில் :—ஆம். அவ்வாறே செய்பலாம். வா போவோம் என்று அழைத்துக்கொண்டு வெளியிற் சென்று வண்டி யொன்றை யமர்த்தி அதில் இருவரும் ஏறி உட்கார்ந்தனர்.

கொஞ்ச நேரத்திற்குள் வண்டியும் மயில் வாகனத்தின் வீட்டண்டை வந்து நின்றது. இருவரும் இறங்கி வீட்டிற்குட் செல்லும்பொழுது, மயில்வாகனத்தின் மனைவியான விஜயம் என்பவள் கனகவல்லியைக் கண்டு களிப்பெய்தினவளாய் க்ஷேமம் விசாரித்து உள்ளே அழைத்துச் சென்று ஸ்நானஞ் செய்வித்துச் சாப்பாடு போட்டாள்.

மயில்வாகனனும் அவன் மனைவியும் சாப்பிட்ட பின் மூவரும் கூடத்தி லுட்கார்ந்து கொண்டு தாம்பூலந் தரித்தானபின் கனகவல்லி பின்வருமாறு விஷயத்தைத் தெரிவித்தாள். "அத்தான்! ஸ்டேஷனில் தங்களிடம் குறிப்பாக வுரைத்ததை விவரமாகச்சொல்லுகிறேன் கேளுங்கள். எங்கள் நாடகக் கம்பெனி இவ்வூருக்கு வந்துசேர்ந்த நான்கைந்து தினங்களுக்குப்பிறகு இந்நகர வாசியான இரத்தினமணி என்னும் ஓர் இளம்பெண் ஒரு நாள் கம்பெனி வீட்டிற்கு வந்து எங்கள் எஜமானியைக் கண்டு தனக்கு நாடகத்திற் சேர்ந்துகொள்ள விருப்பமிருக்கிற தென்று தெரிவிக்க, எஜமானி அப்பெண்ணைப் பரீக்ஷித்துப் பார்த்து மிகவும் திருப்தியடைந்தவராய் நாடகத்தில் அவளைச் சேர்த்துக் கொள்ள ஒத்துக் கொண்டனர். ஆனால் அப்பெண் அபூர்வமான சில நிபந்தனைகளை ஏற்படுத்தினாள். அதாவது :— தனக்குச் சம்பளம் தேவையில்லை யென்றும், தான் இந்நகர வாசி யென்பதைப் பிறரெவருக்குந் தெரிவிக்கக் கூடாதென்றும், தான் நாடகம் நடக்குஞ் சமயத்தில் மாத்திரம் கொட்டகைக்கு வந்து நடித்துச் செல்

வாளே யன்றிப் பகலில் வீட்டை விட்டு வெளியில் வரமாட்டா ளென்றும், எக்காரணத்தைக் கொண்டும் தன்னை மத்தியில் அழைக்கக் கூடாதென்றும் சொன்னாள். எங்கள் எஜமானி அவளுடைய கானத்திலும் சங்கீத ஞானத்திலும் ஈடுபட்டவர்களாய் அவளுடைய நிபந்தனைகட்குக் கட்டுப்பட்டனர். இவைகள் எஜமானிக்கு மாத்திரந் தெரியுமேயன்றிப் பிறரெவரும் அறியார். அப் பெண் ஆண் வேடந் தரித்து ஒவ்வொரு நாடகத்திலும் நாடகத் தலைவனாகவும், நான் நாடகத் தலைவியாகவும் நடித்து வந்ததால் எங்களிருவருக்கும் பரஸ்பரநேசமுண்டாகிஅன்பதிகரித்து நாங்களிருவரும் நெருங்கின சிநேகிதிகளானது மாத்திரமன்றி அப்பெண் என்மீது மிகுதியும் நம்பிக்கை வைத்தவளாய் நான் சொன்ன நிபந்தனைகளை என்னிடம் வெளியிட்டது மன்றி என்னைத் தன் வீட்டிற்குஞ் சில சமயங்களில் அழைத்துச் செல்வதாயிருந்தாள். அக்காலங்களில் எங்களுடைய எஜமானியிடம் தெரிவிக்காத சில விஷயங்களையும் எனக்குத் தெரிவித்தாள். அவைகளிலிருந்து அப்பெண் ஒரு பெரிய குடும்பத்தைச் சார்ந்தவளென்றும், தாய் தந்தையரை இழந்ததுமன்றி ஏழ்மை நிலைமையிலேயுமிருக்கிறாளென்பதையு முணர்ந்துகொண்டேன். நிற்க, அப்பெண்ணிற்குச் சமமாக ஆண் வேடந் தரித்து நடிக்க வல்லவர் எவருமில்லை யென்றே சொல்லவேண்டும். அத்துடன் இனிய குரலும் பொருந்தியிருந்ததால் தினப்படி ஏராளமான ஜனங்கள் நாடகம் பார்க்க வந்தனர். இவ்வாறிருக்க ஒருநாள் இவ்வூர்த் தாசிகளிலொருத்தியான அம்புஜ மென்பவள் எங்களெஜமாட்டியிடம் வந்து, தான் திரிச்சியில் நாடகக் கம்பெனியொன்றை வைத்து நடத்தி வருவதாகவும், அதில் சில ஆட்டங்கள் நடிப்பதற்கு நான் சொன்ன இரத்தினமணி என்னும் பெண்ணை அனுப்பும்படிக்கும் அதற்கு எவ்வளவு பணம் கேட்டாலுங் கொடுக்கச் சித்தமாக விருக்கிறதாகவும் சொன்னாள். இரத்தினமணியின் நிபந்தனைகட்குக் கட்டுப்பட்ட எங்களெஜமாட்டி இவ்வேற்பாட்டிற்குக் கொஞ்சமேனும் இடங்கொடாமல் மறுத்தனர். அச்சமயம் தற்செயலாய் இரத்தினமணி அங்குவர எஜமாட்டியால் விஷயத்தையறிந்து கொண்டபின் திரிச்சிக்குச் செல்வதில் தனக்கு யாதொரு தடையுமில்லை யென்று சொன்னாள். மற்றவர்களுக்கு இதில் விசேஷமொன்று மிருப்பதாகத் தோன்றவில்லை யெனினும் எனக்கும் எஜமாட்டிக்கும் ஆச்சரியத்தை விளைத்தது.

இன்னுமொரு விசேஷம். திரிச்சியில் நடிப்பதற்குத் தனக்குக் கூலி ஒரு பைசாகூட வேண்டியதில்லை யென்றும் சொன்னாள். பிறகு நியமித்த நாளாகிய சென்ற சனிவாரமன்று எஜமாட்டியின் உத்திரவைப் பெற்று என்னையும் அழைத்துக்கொண்டு இரத்தினமணியும் நானுமாகத் திரிச்சிராப்பள்ளிக்குச் சென்றோம். அன்றிரவு நாடகம் நடந்து முடியுஞ் சமயம் இரத்தினமணி என்னைத் தனியாக வழைத்து 'கனகவல்லி! நான் உன்னைத் தனியாக விட்டுச் செல்ல வேண்டியிருக்கிறதைப் பற்றி என்னை நீ மன்னிக்க வேண்டும். ஒரு முக்கிய காரியத்தை முன்னிட்டு நான் வெளியிற் செல்ல வேண்டியிருக்கிறது. நான் மறுபடியும் இங்கு வரமாட்டேன். இன்னும் பத்து நாட்களுக்குள் மதுரைக்குத் திரும்பி வந்து உன்னைச் சந்திக்கிறேன். இடையூறு ஏதேனு மேற்படுமென்ற சந்தேகத்தால் உன்னையும் என்னுடன் அழைத்துச் செல்லக்கூடாதவளா யிருக்கிறேன். யாவரேனும் வந்து என்னைக் கேட்டால் சந்தேகத்திற் கிடங்கொடாமல் நான் வெளியிற் சென்றிருப்பதாகச் சொல்லவும். நீ மதுரைக்குப் போனவுடன் என் பாட்டியைக் கண்டு பத்துநாட்களுக்குள் திரும்பி வருவதாக நான் சொன்னேனென்று சொல்லவும். மறுபடியும் உன்னைச் சந்திக்கும் பொழுது எல்லா சங்கதிகளையும் விவரமாகக் கூறுகிறேன். நம் எஜமாட்டிக்கும் இந்த விஷயத்தைச் சொல்லவும். நான் சென்று வருகிறேன்' என்று சொல்லி வெளியிற் போய்விட்டாள்.

ஆச்சரியத்தை மேற்கொண்ட நான் இன்னதுதான் நினைப்பதென்று தோன்றாதவளாய் நின்று கொண்டிருக்கும் பொழுது, சுமார் கால்மணி நேரத்திற்குப் பிறகு நான் சொன்ன அம்புஜம் என்பவள் அங்கு வந்து 'இரத்தினமணி எங்கே?' என்று கேட்டாள். இரத்தினமணி என்னிடம் சொன்னதற்கிணங்க 'வெளியிற் சென்றிருக்கிறாள். கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவாள்' என்று சொன்னேன். ஆனால் அம்புஜம் என் வார்த்தையை நம்பிக் காத்துக்கொண்டிராமல் வெளியிற் சென்றாள். பின் நடந்தனவொன்றும் எனக்குத் தெரியா. நாடகம் முடிந்து சுமார் அரை மணி நேரத்திற்குப் பிறகு நாடகசாலைக்கு வந்த அம்புஜத்தைப் பார்த்து 'இரத்

தினமணி எங்கே?' என்று நான் கேட்க அதற்கு அவள் 'அப்பெண் எங்கள் கம்பெனி எஜமானரைக் கூட்டிக் கொண்டு எங்கேயோ ஓடிவிட்டாள். அவர்களிருவரும் சென்றது இன்னவிடமென்பது தெரியவில்லை. இப்பேற்பட்டவள் என்பது முன்னமே தெரிந்திருந்தால் நான் இவளை அழைத்துக் கொண்டு வந்திருக்கமாட்டேன். யானை தன்மீது தானே மண்ணை வாறிப் போட்டுக் கொண்டதுபோல் நானே என் வாழ்வைக் கெடுத்துக்கொண்டேன். என் தலை விதி இவ்வாறு முடிந்தது. வீட்டிற்குச் செல்வோம்; வருகிறாயா'' என்று சொல்லி என்னை அழைத்துக் கொண்டு கம்பெனி வீட்டிற்குச் சென்றாள். இரத்தினமணி அத்தகைய குணத்தை யுடையவளல்ல வென்பதை நான் நன்றாக அறிவேனாதலினாலும், ஒரு நாடகக் கம்பெனியை வைத்து நடத்தக் கூடிய ஒருவர் ஒரு பெண்ணை யழைத்துக் கொண்டு ஒருவருக்குந் தெரியாமற் செல்வதென்பது சிறிதும் நம்பத் தகாத காரியமானதினாலும், அவள் சொன்னவற்றில் எனக்குச் சந்தேகமுண்டாகி இதில் ஏதோ அந்தரங்கமிருக்கிறதென்று நினைத்து அவளிடம் அதிகம் வார்த்தையாடாமற் சயனித்துக் கொண்டேன். அம்புஜமும் என்னருகிற் படுத்துக் கொண்டாள். இதைப்பற்றியே யோசித்துக் கொண்டிருந்ததால் எனக்கு நித்திரை வரவில்லை. நாங்கள் படுத்துக் கொண்ட பொழுது சுமார் மூன்று மணி இருக்கும் விடியற் காலம் நாங்கள் படுத்திருந்த அறைக்குள் 'அம்புஜம்' என்றழைத்து கொண்டே ஓராடவன் வந்தான். அம்புஜமும் எழுந்துட்கார்ந்தாள். வந்த ஆடவன் 'இந்தச் சிறுக்கியை இனி என்ன செய்கிறேன் பார். என்ன சாமர்த்தியமாக என்னை ஏமாற்றிவிடப் பார்த்தாள். இவைகளையெல்லாம் இவள் எவ்வாறு கற்றுக் கொண்டாளென்பதே ஆச்சரியமாயிருக்கிறது'' என்று சொல்ல அம்புஜம் 'இருவரையும் ஓரிடத்திற்கே கொண்டு செல்வது உசிதமாக எனக்குத் தோன்றவில்லை. மேலும் அவள் மயக்கந்தீர்ந்தெழுந்து சப்தமிட்டாற் கெடுதலாக முடியுமே. அதற்கேதேனும் செய்தீர்களா' என்று கேட்டாள்.

அதற்கு அவ்வாடவன் அவளை மதுரையில் உன் வீட்டில் விட்டுப் போகும்படி சொல்லியிருக்கிறேன். அவள் மயக்கம் நீங்காமலிருப்பதற்கும் ஏற்பாடுசெய்திருக்கிறேன். அம்புஜம்! என்ன மூடத்தனம் செய்தோம். இப்பெண்ணிருப்பது தெரியாமல் இதுவரையும் வார்த்தையாடி விட்டோமே'' என்று நானிருந்ததைக் குறிக்க அம்புஜம் 'அவள் நித்திரை போகிறாள். அதையறிந்துதான் தங்களுடன் வார்த்தையாடுகிறேன்' என்று சொல்ல அம்மனிதன் 'எனினும் நாம் கொஞ்சம் சாக்கிரதையாகவே இருக்க வேண்டும். இப்பெண்ணை ஒன்றிரண்டு நாட்கள் இங்கு தங்க வைத்தே அனுப்பவேண்டும். அவள் அங்குச் சேரும் வரையாவது இவள் இங்கிருக்கவேண்டும். இல்லாவிடில் புகார் உண்டாகி விடும். பிறகு நமக்குக் கஷ்டமாக முடியும். முன் சொன்னவைகளெல்லாம் ஞாபகத்திலிருக்கட்டும் எனக்கு நேரமாகிறது. நான் சென்று வருகிறேன்' என்று சொல்லி நீங்கினான். அவன் சென்ற கொஞ்ச நேரத்திற்குப் பிறகு நான் நித்திரைவிட்டெழுந்தவள்போ லெழுந்து அம்புஜத்தைப் பார்த்து 'அம்மா! நான் இன்று மதுரைக்குச் செல்ல உத்தேசித்திருக்கிறேன்; தங்களுடைய உத்திரவு வேண்டும்' என்று சொல்ல, அவள் 'நானும் நாளையதினம் வருகிறேன். இருவரும் போகலாம்' என்றுரைக்க நான் அதற்கிசைந்து தங்கினேன். மறுநாளாகிய நேற்றும் என்னை அங்கு நிறுத்தி வைத்துத் தனக்குக் கொஞ்சம் வேலையிருப்பதால் மதுரைக்கு என்னுடன் வருவதற்கில்லையென்று சொல்லி என்னை இன்று காலையிலனுப்பினாள். அங்குத் தங்கியிருந்த இரண்டு நாட்களில் இதைப்பற்றி அதிகமாக அறிந்துகொள்ள என்னால் முடியவில்லை. இவ்வளவுதான் சங்கதி. தங்களுடைய அபிப்பிராய மென்ன?'' என்று கேட்டாள்.

மயில்:—நீ சொல்லி வந்தவைகளில் ஒன்றுக்கொன்று சம்பந்தமிருக்கிறதாகத் தோன்றவில்லை. ஓர் ஆடவனையும் ஒரு பெண்ணையும் சிலர் கூடி எக்காரணத்தினாலோ, எதற்காகவோ, எவ்விடத்திற்கோ கொண்டு சென்றிருக்கிறார்களென்பது மாத்திரம் சிறிது புலப்படுகிறது. ஆனால் அவ்வாடவன் நீ சொன்ன கம்பெனியின் எஜமானாகவிருக்கக் கூடுமென்றாவது அப்பெண் இரத்தினமணிதானென்றாவது உறுதியாகச் சொல்வதற்கில்லை. மேலும் இவ்விருவர்க்கும் ஏதேனும் சம்பந்தமுண்டா என்பதும் தெரியவில்லை இதிற் சம்பந்தப்பட்டவர்களில் ஒருவரையேனுங் குறிப்பாகத் தெரிந்து கொள்வதற்குமில்லை. நம் இனத்தாளாகிய அம்புஜம் ஒருத்

தியே இருக்கிருள். அவளைப் பிடித்தால் எல்லாம் வெட்ட வெளியாகிவிடும். ஒரு விஷயம். இச்சம்பவம் நடந்த பின் இரண்டு நாட்கள் திரிச்சியில் தங்கி யிருந்தாயே. அப்பொழுது அந்நாடகக் கம்பெனி எஜமானனைப் பார்த்தாயா? அல்லது அதற்கு முன்னேனும் பார்த்திருக்கிருயா?

கன:—நானும் இரத்தினமணியும் திருச்சிக்குச் சென்று எங்களுக்கென்று நியமிக்கப்பட்டிருந்த வீட்டில் தங்கின கொஞ்ச நேரத்திற்குப் பிறகு எங்களை வரும்படியாக அவ்வெஜமானன் சொல்லி யனுப்பினன். இரத்தினமணி என்னை மாத்திரம் போய் வரும்படி சொல்ல நான் சென்று அவரைப் பார்த்து வந்தேன். அன்றிரவு கொட்டகையிலும் அவரைப் பார்த்தேன். ஆனல் அதற்குப்பிறகு அவ்விரண்டு நாட்களில் ஒரு முறையேனுஞ் சந்திக்கவில்லை.

மயில்:—அப்பெண் ஏன் உன்னுடன் வரவில்லை யென்பது சந்தேகத்தைத் தரக் கூடியதாக விருக்கிறது. நீ காரணங் கேட்கவில்லையா?

கன:—"கேட்டேன். சிரமமாக விருக்கிறதென்று சொன்னள்.

மயில்:—அவ் வெஜமானனுக்கு வயதென்ன விருக்கும்?

கன:—சிறு வயதுதான். இருபது அல்லது இருபத்திரண்டிருக்கலாம்.

மயில்:—உறுதியாக இப்பொழுது ஒன்றையுஞ் சொல்வதற்கில்லை. நீ நித்திரை போகிருயென்று நினைத்து அம்புஜத்துடன் வார்த்தையாடின ஆடவனை நீ பார்த்தாயா?

கன:—நான் பார்க்கவில்லை.

மயில்:—சரி; இப்பொழுது அறிந்து கொள்ள வேண்டிய சில விஷயங்களிலிருக்கின்றன. இரத்தினமணி என்பவள் யாவளென்பதையும், அக்கம்பெனி எஜமானன் யாவனென்பதையும், இவ்விருவர்க்கும் யாதேனும் சம்பந்தமுண்டா வென்பதையும், இவர்களுக்கு விரோதிகள் யாவரேனுமுளரா என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். உனக்கு அப்பெண்ணின் வீடு தெரியுமாதலாலும், நீ இப்பொழுது அங்குச் செல்ல வேண்டிய காரியமிருக்கிறதினலும் அதைத் தெரிந்து கொண்டு மேல் நடக்கவேண்டிய விஷயங்களைப் பற்றி யோசிக்கலாம்.

கன:—அத்தான்! நான் தங்களை யொன்று கேட்டுக்கொள்ளுகிறேன். உங்களுடைய உத்தியோக முறையில் இதைக் குறித்து விசாரியாம லிருக்க வேண்டும். அவ்வாறு செய்வீராயின் தங்களிடத்தில் இதைக் குறித்துச் சொன்னதைப் பற்றி நான் விசனப்படவேண்டி வரும். அந்தரங்கத்தில் விசாரித்தறிய வேண்டுமென்பது என் கோரிக்கை. முற்றுமறிந்து கொள்வதன் முன் வெளிக்கு வந்தால் இரத்தினமணிக்கு ஏதேனும் கெடுதலுண்டாகு மென்பது என் சந்தேகம். தாங்கள் இதற்கு முன்னும் இவ்வூரில் வேறு பார்த்திருக்கிறீர்களாதலினல் ஒரு சமயம் அப் பெண்ணைத் தாங்கள் பார்த்திருத்தலுங் கூடும். அவளுடைய வீடு வடக்கு மாசி வீதியிலிருக்கிறது. நான் அங்குச் செல்லும்பொழுது என்னுடன் தாங்கள் வருகிறீர்களென்பது பிறருக்குத் தெரியாமலே வந்து அவ் வீட்டைக் கண்டு கொள்ளவும்.

மயில்:—உன் கருத்து எனக்கு விளங்கவில்லை. எனினும் உன் இஷ்டம்போலவே செய்கிறேன். உனக்கு வண்டி யொன்றை யமர்த்திக் கொண்டு வருகிறேன் என்று சொல்லி எழுந்து வெளியிற் சென்ருன்.

கொஞ்ச நேரத்திற்குள் வண்டி யொன்றை யமர்த்திக் கொண்டு வந்து வீட்டுக் கெதிரில் நிறுத்திவிட்டு உள்ளே சென்று கனகவல்லிக்குத் தெரிவிக்க அவளும் உடனே வந்து வண்டியிலேறிச் செல்லவும், மயில்வாகனம் சற்றுப் பின்னக வண்டி போகும் வழியையே பிடித்துச் சென்ருன். வடக்கு மாசி வீதிக்குச் சென்றதும் மயில்வாகனம் பின் தொடர்ந்து செல்லாமல் வண்டி எங்குப் போகிறதென்பதைப் பார்த்துக் கொண்டே நின்ருன். வண்டியும் இரஞ்சிதத்தின் வீட்டிற்கு எதிரில்போய் நின்றது. கீழிறங்கின கனகவல்லி இரண்டடி தூரஞ் சென்று அவ்வீட்டின் இருமருங்கிலுமுள்ள மாளிகைகளைக் கண்ணுற்று மதிமயங்கி நின்ருள். அவள் அநேக முறை இரஞ்சிதத்தின் வீட்டிற்கு வந்திருந்தாளெனினும் அவள் தனியாக வந்ததில்லை. இரஞ்சிதத்துடன் வந்த சமயங்களிலும் அவ்வீட்டின் முன் தோற்றத்தையாவது, பக்கத்திலிருந்த மாளிகையையாவது அவள் கவனித்தவளல்ல. இப்பொழுது, ஒன்றுக்கொன்று ஒரு சிறிதும் பேதமில்லா மூன்று மாளிகைகளையுங் கண்ட கனகவல்லி, தான் முன் பல முறைகளிற் சென்றதும் தற்சமயம் போக வேண்டியதுமான

வீடு எது வென்பதைத் தெரிந்து கொள்ள முடியாமல். திகைத்தாள். தெருவிற் செல்வோரைக் கேட்கவும் மனங் கூசினாள். அங்கு நின்று பார்த்துக் கொண்டிருப்பதும் உசிதமன்று என நினைத்து "நான் வண்டிக்காரனை மேல்புற மிருக்கும் வீட்டண்டையே நிறுத்தச் சொல்லியும் குதிரை நிற்காமல் மத்தியிலுள்ள இவ் வீட்டிற் கெதிரே வந்து நின்றதால் ஒரு சமயம் இதுதான் நான் செல்ல வேண்டிய வீடுபோலும்" என்று எண்ணியும் இரஞ்சிதத்தின் வீட்டில் நுழைந்தாள். அங்கு தான் முன் பார்த்துள்ள வஸ்துக்களைப் பார்த்துத் தான் சரியான எண்ணத்தையே கொண்டதாக நினைத்துக் கூடத்திற்குள் செல்ல அங்கு உட்கார்ந்திருந்த இரஞ்சிதத்தின் பாட்டியைக் கண்டதும் அவள் மனம் தேறுதலடைந்தது.

கனகவல்லியைக் கண்ணுற்ற இரஞ்சிதத்தின் பாட்டி சந்தோஷமும் ஆச்சரியமுங் கொண்டவளாய் "கனகவல்லி! வா; க்ஷேமமா. எப்பொழுது வந்தாய்? என்ன தனியாக வந்திருக்கிறாய்! உன் தோழி எங்கே? அவள் என்னிடஞ் சொன்ன வண்ணம் திரிச்சியிலேயே தங்கிவிட்டாளோ?" என்று கேட்டாள்.

கன.—ஆகவே இரத்தினமணி திரிச்சியில் தங்கிவிடுவாளென்பது தங்களுக்குத் தெரிந்த விஷயம் போலும்.

இர-பாட்டி.—போகும்பொழுது என்னிடத்திற் சந்தேகமாகச் சொல்லிச் சென்றாள். நீ தனியாக வந்ததைப் பார்க்க அது உறுதியாயிற்று. உன்னிடம் என்ன சொல்லி யனுப்பினாள்? எப்பொழுது வருவதாகச் சொன்னாள்?

கன :—இன்னும் பத்து நாட்களுக்குள் திரும்பி வருவதாகச் சொன்னாள். அங்குத் தங்களுக்கு உறவினர் யாவரேனு மிருக்கிறார்களோ?

இ-பாட்டி.—ஆம் இருக்கிறார்கள்.

கன :—ஏன் பாட்டி! தங்கள் வீட்டிற்கு இருபக்கங்களிலு மிருக்கும் வீடுகள் யாருடையன. இம் மூன்று வீடுகளும் ஓரே மாதிரியாக இருக்கின்றன. இவைகளில் தங்களுடைய வீடு இன்னதுதான் என்று முதலில் என்னால் குறிப்பிட முடியாமற் போயிற்றே.

இ. பாட்டி:—ஆம்; இம்மூன்றும் ஓரே சமயத்தில் ஓரே சிற்பியாற் கட்டப்பட்டன. உன்னைப்போல் ஏமாந்தவர் அநேகர். மேல்புறத்திலிருப்பது உன் சிநேகியின் மாமன் வீடு. கீழ்புறத்திலிருப்பது அவளுடைய அத்தையின் வீடு. இம்மூன்று குடும்பங்களும் கொஞ்ச நாட்களுக்கு முன் மிக்க செல்வாக்காக விருந்தன. ஆனால் இப்பொழுது இம்மூன்றும் அழிந்து கெட்டிருக்கிற மாதிரி எக்குடும்பமு மிராது. இம்மூன்றும் ஒரு குலக்கனிகளெனினும் ஒன்றை யொன்று விரோதித்து நிற்கின்றன. இம்மூன்று குடும்பங்களிலும் பெரியவர்கள் என்னைத் தவிர வேறெவருமில்லை. இதில் அவளுடைய அத்தைமகன் தனியாக விருக்கிறான். அதில் அவளுடைய அம்மான் மகனிருக்கிறான். இருவருக்கும் மத்தியில் இவளிருக்கிறாள். மாமன் மகனுக்கு இவளைக் கலியாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்ற ஆவல். இவளுக்கோ தன் அத்தை மகன் மீது பிரியம். இதனால் அவ்விரு ஆடவர்களுக்கும் விரோதம். மாமன் மகனோ எவ்வித மேனும் இவளை விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்று கங்கணங் கட்டிக்கொண்டு திரிகிறான். உன்தோழி அவனை முற்றும் வெறுத்துத் தாசி வீடே தஞ்சமென்றிருக்கும் தன் அத்தை மகனை நாடித்திரிகிறாள். இது எவ்வாறு முடியுமோ. என்ன கெடுதல்கள் உண்டாகுமோ எனக்கொன்றும் விளங்குவதாயில்லை. இவளுடைய மாமன் மகன் மகா துஷ்டன். எதை வேண்டு மென்றாலும் துணிந்து செய்வான் போலிருக்கிறது. இடையில் நான் குறுக்கிட்டு ஏதாவது சொல்லலாமென்றால் என்னுடைய பேச்சை யார் கேட்கப் போகிறார்கள். நம் பல்லையே நாம் குத்தி முகர்ந்து பார்த்தால் நாறாமலிருக்குமா! குடும்ப இரகசியங்களை வெளியிற் சொல்லக் கூடாது. அதைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்ததால், உன்னைப் பார்த்தவுடன் வெளியிட்டு விட்டேன். இது விஷயமாக உன் தோழியை ஒன்றுங் கேட்காமலிருப்பாயாக.

கன:—பாட்டி! தாம் அவ்விதமான சந்தேகம் கொள்ள வேண்டாம். நான் எதற்காக இதைப்பற்றி இரத்தினமணியைக் கேட்கப் போகிறேன். பாட்டி! நான் சென்று வருகிறேன். என் தோழி வந்த பிறகு தங்களை மறுபடியும் வந்து பார்க்கிறேன்.

இ. பாட்டி —அது என் அப்படி? அவளில்லாத சமயத்தில் இங்கு வரக் கூடாதென்பது என்ன?

இரத்தலு மீதலே போலுங் கரத்தல் கனவிலுந் தேற்றாதார் மாட்டு.

கன :—வரக் கூடாதென்றல்ல. சாவகாச மேற்பட்ட பொழுது வருகிறேன் என் றுரைத்து விடைபெற்றுக் கொண்டு வெளியில் வந்து வண்டியிலேறினள்.

வண்டியும் புறப்பட்டது. அப்பொழுது கனக வல்லி "இப்பாட்டியிடத்தில் நடந்த விருத்தாந் தங்களையும் என் மனதில் இப்பொழுதுண்டா யிருக்கும் சந்தேகத்தையுஞ் சொல்லலாமென்றால் எங்கு கலவர மேற்பட்டு விடுமோ என்று பயப் பட வேண்டியிருக்கிறது" என்று பலவாறு ஏதேதோ சிந்தித்துக் கொண்டு வந்தாள். வண் டியும் மயில்வாகனத்தின் வீட்டண்டை நின்றது. கனகவல்லி இறங்கி உள்ளே சென்றாள். அவ ளைப் பார்த்த விஜயம் "என்னம்மா உன் அத்தான் எங்கே? போன காரியம் என்னவாயிற்று?" என்று கேட்க, "அந்தப் பாட்டியைப் பார்த் தேன்" என்று தனக்கும் அவளுக்கும் நடந்த சம்பாஷணையைக் கூறி "அத்தான் யாருடனே நின்று வார்த்தையாடிக் கொண்டிருக்கிறார்கள்" எனக் கனகவல்லி சொன்னாள்.

கொஞ்ச நேரத்திற்குப் பின் அங்குவந்த மயில் வாகனம் "கனகவல்லி! கேஸ் பிரமாதமாக முடி யும்போ லிருக்கிறது. நீ அந்த வீட்டில் நுழைந் ததைப் பார்த்துச் செல்லவேண்டிய இடத்தை விட்டுத் தப்பிதமாக அவ்வீட்டிற்குட் சென்றா யென்றே முதலில் நினைத்தேன். ஏனெனில் நான் முன் இவ்வூரிலிருந்தபொழுது நீ இன்று சென்ற வீட்டுக்காரரையும் அதற்கிருபக்கங்களிலுமுள்ள வீட்டின் சொந்தக்காரர்களையும் நான் நன்றாக அறிவேன். அநேகமுறை அம்மாளிகைகளுக்குட் சென்றிருக்கிறேன். அம்மூவரும் பெரிய தனவந் தர்களாயிருந்ததுமன்றி மகா உத்தமர்கள். மூவ ரும் நெருங்கின பந்துக்கள், பரோபகாரிகள். இவர் களையறியாதவர்கள் இந்நகரிலெவரு மிருக்க மாட் டார். நீ சென்ற வீட்டின் சொந்தக்காரர் பெயர் இரத்தினம் பிள்ளை. அவருடைய ஏக குமாரத்தி யான இரஞ்சிதம் என்னும் பெண்ணை நான் நன் கறிவேன். நீயுரைத்த பெண்ணின் பெயர் இரத் தினமணி. பெயர் மாறாட்டமாக வைத்துக் கொண்டிருப்பினும், அத்தகைய பிரபுவின் மகள் நாடகத்தில் வேஷம் போட்டு நடித்தாளென்றால் யார்தான் நம்புவார்கள். ஆதலின் நீ அடையாளந் தெரியாமல் அவ்வீட்டில் நுழைந்தாயென்றும், சீக்கிரம் வெளியில் வருவாயென்றும் எண்ணிக் கொண்டிருந்தேன். நீ வெகு நேரம் வெளியில் வாராததைக் கண்டு சந்தேகமுண்டாகி அத்தெரு விலுள்ள என் நண்பரொருவரைக்கண்டு க்ஷேமம் விசாரிப்பவன் போல் அம்மூன்று வீடுகளின் எஜமானரைப் பற்றிக் கேட்டேன். அவர் சொன்னவைகளைக் கேட்டபின் என் மனம் மிக வும் விசனமுறுகின்றது. இரத்தினம் பிள்ளை தன் பணத்தையெல்லாம் வைத்திருந்த ஆர்பத் நட் கம்பெனி யுடைந்ததால் அதனாலுண்டான விசனத்தைப் பொறுக்கலாற்றாது விண்ணுலகெய் தவும் அவர்தம் பத்தினி பின் செல்லவும் இரஞ் சிதம் ஏழ்மை நிலையிலிருக்கிறாளாம். மேல் புறத்து வீட்டின் எஜமானன வீரபத்திர பிள்ளை வியாபார நிமித்தமாகக் கப்பலேறிச் சென்றவர் கப்பல் உடைந்து சமுத்திரத்திற் கிரையாகவும் அவருடைய ஏகபுத்திரன் மதனகோபனென்ப வன் துர்ச்சன சகவாசத்தை மேற்கொண்டு தன் தந்தையின் செல்வத்தைத் துர்விநியோகஞ் செய்து துஷ்டனாகத் திரிகிறானும். கீழ் புறத் துள்ள வீட்டிற் கதிபதியான மாணிக்கவாசகம் பிள்ளை குதிரைமேலிருந்து விழுந்து மரண மடைய அவருடைய குமாரனை இரத்தினம் என் பவன் சிறிதுகாலம் நன்மார்க்கத்தைக் கையாண்டு வந்தானெனினும் மதனகோபனின் தூண்டுத லால் தன் வீட்டை விட்டுத் தாசிவிட்டிலிருக்கி றானும். இம்மூன்று குடும்பங்களும் இவ்வாறு நிலைகுலைந்து போகுமென்று எவரும் கனவிலுங் கூட நினைத்திருக்க மாட்டார்கள். நிற்க, இரஞ்சி தமே இரத்தினமணி யென்று பெயர் வைத்துக் கொண்டு நாடகத்தில் வந்து நடித்தாளென வைத்துக்கொண்டாலும் பணம் வாங்காமல் அவ் வாறிருந்ததின் காரணம் எனக்கு விளங்கவில்லை" என்று சொன்னான்.

கன: —அத்தான்! எனக்குற்றிருந்த சந்தேக மெல்லாம் நிவர்த்தியாகி ஒவ்வொன்றும் பட்டப்பகல்போல் தெளிவாகத் தோன்றுகிறது என்று சொல்லி இரஞ்சிதத்தின் பாட்டி தன் னிட முரைத்ததையுங் கூறி "அத்தான்! அவள் கூலியின்றி எங்கள் கம்பெனியில் நடித்தது விசேஷமல்ல. அவள் ஏற்படுத்தியிருந்த நிபந் தனைகட்கு மாறாகத் திரிச்சிராப்பள்ளிக்குச் செல்ல அவள் சந்தோஷத்துடன் ஒத்துக் கொண்டதே ஆச்சரியமாகத் தோன்றும். ஆனால் அதிலும் அபூர்வமான தொன்றுமில்லை யென்பது நான் சொல்லப் போவதால் தமக்கு விளங்கும். அவள் எங்களுடைய எஜமானியிடம் ஏற்படுத்

JL NOBVB 18-9 2.18382

திக்கொண்ட இரகசிய நிபந்தனைகளையும், அந்த ரங்கமாகக் கொட்டகைக்கு வந்து நடித்துச் சென்றதையும், ஒரு விதமான பிரயோசனத்தை யுங் கருதாதவள் போல் மறுவார்த்தையின்றிக் களிப்புடன் திரிச்சிக்குச்செல்ல ஒத்துக்கொண்டதையும், அங்குச் சென்றபின் அக்கம்பெனியின் எஜமானனைப் பார்க்கச் செல்ல மறுத்ததையும் அவள் என்னை விட்டகலும்போது என்னிடஞ் சொன்னவைகளையும், தாங்கள் கேட்டறிந்து வந்தவைகளையும், அவளுடைய பாட்டி எனக்குத் தெரிவித்தவைகளையும் ஒன்று சேர்த்துப் பார்க்கு மிடத்து, அவளுடைய மனதைக் கொள்ளைகொண்ட தன் அத்தை மகன், அவளுக்கு விரோதமான தன் மாமன் மகளுல் கெட்டழிந்து போவதைக் கண்டு சகிக்க முடியாமல் அவனை நல்வழிப் படுத்த முயற்சி செய்தும் பயன் பெறுமற் போக, அவன் நாடகக் கம்பெனியொன்றை வைத்து நடத்துகிறுன் என்பதை யறிந்து தான் நேரில் அவனைக் கண்டு அவனுடைய மனதைத் திருப்பிவிடலாமென்ற உறுதி கொண்டவளாய்த் தன் பெயரை மாற்றி வைத்துக்கொண்டு எங்கள் கம்பெனியிற் சேர்ந்தாளென்பதும், தன் எண்ணம் கைகூடுமென்ற எண்ணத்தால் என்னையழைத்துக்கொண்டு திரிச்சிக்குச் சென்றுளென்பதும் வெள்ளிடை மலை போல விளங்குகிறது மேலும், அங்கு நாடகம் நடந்து கொண்டிருந்தபொழுது இடையில் அக்கம்பெனிக்கு எஜமானன் எழுந்துசென்றதையும் அவன் திரும்பி வராமலிருந்ததையும், அவன் சென்ற கொஞ்ச நேரத்திற்குப் பின் ஓராடவன் அங்கு வந்து இரத்தினமணியை உற்றுப்பார்த்துவிட்டு அம்புஜத்தை யழைத்துக்கொண்டு வெளியிற் சென்றதையும், இரத்தினமணி சென்ற பிறகு அம்புஜம் திரும்பிவந்து அவளைக் கேட்டதும் நான் சொன்னதையும் நம்பாதவளாக வெளியிற் சென்றதையும், பின் இரத்தினமணியும் கம்பெனி எஜமானும் காணமற் போனதையும், அன்று விடியற்காலம் அம்புஜத்திற்கும் அந்நியனுக்கும் நடந்த சம்பாஷணையையும் புணர்த்தி யோசித்தால், இரத்தினமணியை அவளுடைய எதிரிகள் கண்டு கொண்டார்களென்பதும், அவ்வுண்மையை யறிந்தோ அறியாமலோ இரத்தினமணி தன் காதலனை கம்பெனியின் எஜமானனிடம் சென்றுளென்பதும், இதை யுணர்ந்த அவளெதிரிகள் அவளைப் பின்தொடர்ந்து போய் அவளையும் அவளுடைய காதலனையும் பிடித்து எங்கேயோ கொண்டு சென்றிருக்கிறுர்களென்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கமாகின்றன. அவளுடைய காதலனை அம்புஜத்தின் வீட்டில் வைத்திருக்கிறுர்களென்பது அவ்வாடவனின் வாய்ப்பிறப்பால் விளங்குகிறதெனினும் இரத்தின மணியை எங்கு வைத்திருக்கிறுர்களென்பது தெரியவில்லை. அம்புஜத்தைக் கொட்டகையிலிருந்து அழைத்துச் சென்ற ஆடவன் தாம் சொன்ன மதனகோபனு யிருக்குமென்று நினைக்கிறேன். இவர்களைக் கொண்டு சென்ற சங்கதியைச் சொன்னவனும் அவனுகத்தா னிருக்கும் அக்கம்பெனியை நடத்தினவன் தாம் சொன்ன இரத்தினமும் என் சிநேகியின் அத்தை மகனுகவுமே இருக்கவேண்டு மெனினும் அதைத் தாம் விசாரித்தறிந்து வர வேண்டும். இரண்டாவது அம்புஜத்தின் வீடெங் கிருக்கிறதென்பதையும் அறிந்து வருவீராக '' என்று சொன்னுள்.

மயி:—அம்புஜத்திற்கும் இரஞ்சிதத்திற்கும் முன் அறிமுகமில்லை போலிருக்கிறது.

கன:—அம்புஜத்தை இரஞ்சிதம் அறிந்திருத்தல் கூடுமேயன்றி அவள் இவளை யறியாளென்றே சொல்லவேண்டும். அவ்விதம் பரஸ்பர அறிமுக மிருந்திருப்பின் அம்புஜத்தின் அழைப்பை இரஞ்சித மேற்றுக்கொண்டிருக்க மாட்டாள்.

மயி:—மதுரைக்குத் திரும்பிவரப் பத்து நாட்கள் பிடிக்குமென்று இரஞ்சிதம் உன்னிடத்திற் சொன்ன கருத்தென்ன ?

கன.—தன் காதலனை அழைத்துக் கொண்டு எதிரிகள் கண்களுக் ககப்படாமல் சிறிது நாட்கள் அயலூரிலிருக்க வேண்டுமென்ற எண்ணத்தாற் போலும்.

மயி:—சரி. நீ சொன்ன இரண்டு விஷயங்களையும் அறிந்துவருகிறேன்.

கன:—அத்தான் ! நான் முதலிற் சொன்னது நினைவிலிருக்கட்டும் உத்தியோக முறையில் ஒன்றுஞ் செய்யக்கூடாது. இவ்விரண்டையும் தாமறிந்து வருவதுடன் மதனகோபன் எங்கிருக்கிறுனென்பதையும் விசாரித்து வந்தால் மேல் நடத்த வேண்டியதைப் பற்றியோசிக்கலாம். தாம் திரும்புவதற்குள் என் எஜமானியைப் பார்த்துவருகிறேன். எனச் சென்றுள்.

சிறுத்தொண்டர்

(317-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனிமேல் இப்படிச் செய்தால், வேளைக்குப் பத்தடியாய் முதுகுத்தோலை உரித்துப்போடுவேன், ஜாக்கிரதை.

கிச்:—வந்தால்தானே அடிப்பிங்கோ ?

உபா:—ஹூம் உனக்கு அவ்வளவு வாயாய்விட்டதா. நீட்டு கையை.

[அடித்தல்]

எங்கே உங்கள் பாடங்களை ஒப்புவியுங்கள். முதல் பையன், கேசவன், சொல்லு.

கே:—அட்டாலும் பால்சுவையிற் குன்றாதளவல்ல; நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர், கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே — சங்குசுட்டாலும் வெண்மை தரும்.

உபா:—அடுத்த பையன்.

முகுந்தன்:—(ஒரு திக்கு வாயன்)

ஆஆஆஆஆஅறம் பொபொபொபொருள் இஇஇன்பம் வீடும் பபபபபயக்கும் புபுபுபுறங் கககடை நநநல்வி இஈஈஈசையு நாட்டும். உஉஉ உறுங் கககவல் ஒஒஒஒன்றுற்றுள் இஇயும் கககககை கொகொகொடுக்கும் கககல்வியி இஇனுங்கில்ல்ல்லை சீசீசீசிற்றுயிர்க்குகுகுற்ற தா தா தா துணை.

உபா:—அடுத்த பையன், வேணு.

வே:—[பாடந் தெரியாது விழித்தல்]

உபா:—என் அங்கு நின்றுகொண்டு ஆந்தைபோல் விழிக்கிறாய். பாடத்தை ஒப்புவி.

வே:—தெரியாதையா.

உபா:—ஏண்டா பாடம் படிக்கவில்லை ?

வே:—ராத்திரி படிக்க நேரமில்லையா. அதான் படிக்கிலே.

உபா:—தடிப்பயலே. படிக்க நேரமில்லையா ? அதைவிட உனக்கு என்ன வேலை ?

வே:—சாப்பிட்டுத் தூங்கிப் போனேனையா படிக்கிலே.

உபா:— சாப்பிடுவதற்கு முன் விளக்கு முன்னால் உட்கார்ந்து படிக்கவேண்டுமென்று சொன்னேனா இல்லையா ? ஏன் படிக்கவில்லை ?

வே:—வெளக்கு வைக்கிறதுக்கு முன்னே சாப்பிட்டாச்சு அதுதான் தூங்கிப் போனேன். வெளக்கையே பார்க்கலே ஐயா.

உபா:—அதெல்லாம் தெரியாது. வா இப்படி.

[வேணு வருதல். உபாத்தியாயர் அடித்தல்]

வேங்கிடராமன், நீ சொல்.

வேங்:—(பாடந் தெரியாது நிற்றல்)

உபா:—நீ ஏன் பாடம் படிக்கவில்லை ?

வேங்:—மறந்துட்டேனையா.

உபா:—மறந்துவிட்டாயா? என்-சாப்பிட மறக்கவில்லையே ?

வேங்கு:—எங்க வீட்டுக்கு எங்க அத்தை வந்திருந்தா, பணியாரம் கொண்டு வந்திருந்தா. அதை தின்னூட்டே மறந்துபோனேன்.

உபா:—உம். பணியாரம் தின்ன மறக்கவில்லை. பாடம் படிக்க மறந்துவிட்டாயல்லவா. இப்படி வா.

[வெங்கு வருதல். உபாத்தியாயர் அடித்தல்]

சுப்பா நீ சொல்.

சுப்பன்:—(ஒரு மூக்கறையன்)

நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்குமாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லாரொருவ ருளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை.

உபா:—சீராளா உன் பாடத்தைச் சொல்.

சீரா:—"பிறக்கும்பொழுது கொடு வந்ததில்லை
பிறந்து மண் மேல்
இறக்கும் பொழுது கொடு போவதில்லை
இடை நடுவிற்
குறிக்குமிச் செல்வம் சிவன் தந்ததென்று
கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென் சொல்வேன்கச்சி
ஏகம்பனே."

உபா:—பேஷ்! மிக்க சந்தோஷம். நீ சொல்லுவதற்கேற்ற கவிதான். உன்னுடைய தாய் தந்தையரின் தர்ம குணத்தை யுத்தேசித்து அக்குணத்தில் பழகி முழுகி ஒழுகி ஓங்கி உயர்ந்து வரும் நீ சொல்ல வேண்டுமென்றே இக்கவியை அடியார் அருளிச் செய்திருக்கவேண்டும். பொருத்தம் வெகு விசேஷமா யிருக்கின்றது.

சீ:—குருஸ்வாமி, தங்களது திவ்ய க்ருபா கடாக்ஷத்தால் அடியேன் இச்சிறுவன் எம்போன்ற சிறுவர்களுக்கு உபயோகமாகுமென்று ஔவைப்பிராட்டியின் ஆத்திசூடியின் உயிர்வருக்கப் பாடல்களை கீத வகையால் ஓதுவண்ணமாக மழலைச் சொல்லால் ஒரு பாடல் பாடியுள்ளேன். சந்நிதானத்தில் அநுமதி கிடைத்தால் அடியேன் பாடத் துணிகின்றேன்.

உபா:—அப்படியா?மெத்த சந்தோஷம்.எங்கே பாடு.

சீரா:—[பஞ்சணை மீதிலே—மெட்டு]

அனா என்பது அறஞ் செய விரும்பு
ஆவன்னா என்பது ஆறுவதுசினம்
இனா என்பது இயல்வது காவேல்
ஈயன்னா வென்பது ஈவது விலக்கேல்
எனா என்பது எண்ணெழுத்திகழேல்
ஏ யன்னா என்பது ஏற்ப திகழ்ச்சி
ஐ யன்னா என்பது ஐய மிட்டுண்
ஒனா வென்பது ஒப்புர வொழுகு

ஓ வன்னு வென்பது ஓதுவ தொழியேல்
ஔவன்னு வென்பது ஔவியம் பேசேல்

ஸ்வாமி! இவ்வளவுதான். தித்திக்குஞ் செந்தமிழில் தத்திக் குழறும் இச்சிறுவன் கவிபாடத் துணிவு கொண்டது பெரும் பிழையே என்றாலும், அடியேனை க்ஷமித்து ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

உபா:—அப்பா சீராளா! உன் பாடல் உருக்கமுள்ளது. உத்தமர் வாக்சமைந்தது. உயர்ந்த இசையமைந்தது. செவிக்கோர் உணவமைந்தது. கருவில் திருவுடையவ னன்றோ நீ. உனக்கு ஒப்பில்லாத் திப்பிய ஞானந்தான் சித்திக்கும். என் மனங் குளிர்ந்து சந்தோஷம் பொங்கியதுபோல் உனக்குச் சர்வ மங்களமும் பெருக உண்டாவதாக. அடே பெரிய சுப்பா உன் பாடத்தைச் சொல்.

பெ. சு:—எந்த பாடம்?

உபா:—இன்ன பாடமென்று கூட நினைவில்லையா? இந்த மூன்று மாத காலமாக உங்களுக்குச் சொல்லிக் கொடுத்த பாடங்களையும் நேற்றைய புதுப் பாடத்தையும் நன்றாக படித்துக் கொண்டு இன்றைக்கு வரவேண்டுமென்று இந்நாலைந்துநாளாய் சொல்லிவந்திருக்கிறேன் அல்லவா?

பெ. சு:—ஆமாங்கையா.

உபா:—சரி. நீ முதலில் உன் புதுப்பாடத்தைச் சொல்.

பெ. சு:—எங்கம்மா ஒடம்புக்காகா துண்ணு ரொம்ப படிக்க வேண்டா மென்று சொல்ரா ஐயா.

உபா:—அடே என்னடா. வேடிக்கையாயிருக்கிறது. படிக்கவேண்டாமென்று சொல்லுவது உன் அம்மா உடம்புக்காகாதென்றா உன் உடம்புக்காகாதென்றா?

பெ. சு:—என் ஒடம்புக்காகா துண்ணு.

உப:—குண்டோதரனைப்போ விருக்கிறாய். படித்தால் உடம்புக்கென்னடா வரும்? புதுப்பாடந்தான் உடம்புக்காகாது; பழைய பாடம் எப்படியிருக்கிறது. சொல் பார்ப்போம்.

பெ. சு:—பழைய பாடத்தை ராத்திரியெல்லாம் படித்தேன். காலமே பழையது குடித்தேன். எல்லாம் பழையதுக்குக் கீழே இருக்குது. வெளியே வரமாட்டேண்ணுதையா.

உபா:—பழையதுக்குக் கீழே இருக்கிறதா? அடே, உன் தாயாரே என்னிடத்தில் இரண்டொரு நாளுக்கு முந்தி நீ படிக்கிறதேயில்லே யென்று முறையிட்டுக் கொண்டிருக்கிறாள். நீ இங்குவந்து புளுகுகின்றாய்.

பெ. சு:—ஐயா, அவள் பொய்க்காரி. அவளை நம்பாதிங்கோ. நேத்து ராத்திரிகூட அவள் பொய் சொன்னாண்ணு எங்கப்பா அடி அடியிண்ணு அடிச்சாங்கோ.

உபா:—அடே, நீ ரொம்ப யோக்கியன்.

பெ.சு:—ஐயா, ஆமாங்கோ. பரமசிவனை வேணுமிண்ணு கேட்டுப் பாருங்கோ.

பரம:—இல்லையா. அவன் ரொம்ப அயோக்கியன் அப்படிச்சொன்னா வெளியே போனா உதைப் பானையா.

உப:—அவன் அப்படிச் செய்கின்றான் என்று என் முந்தியே என்னிடம் சொல்லவில்லை?

பரம:—அவன் வீட்டிலிருந்து வெல்லம் திருடி எங்களுக்கு கொடுப்பானையா. சொல்ல வேண்டாமிண்ணு மிரட்டுறான். அவன் ரொம்ப பெரியவன், பயமா யிருக்குதையா.

உபா:—அடே நீ பாடம் படியாதது மாத்திரமல்ல தாய் தந்தையர்மேல் பழிசுமத்துகிறாய். மற்ற பையன்களை ஹிம்ஸிக்கின்றாய். வீட்டிலுள்ள பொருள்களைக் களவாடுகிறாய். இன்றைக்கு உன்னை நன்றாக சிக்ஷிக்கிறேன் பார்.

பெ. சு.:—ஐயா, அதோ சீராளன் தூங்குகின்றான்.

உபா:—(திரும்பிப் பார்த்து விட்டு) நீ படிக்கும் லக்ஷணத்திற்கு கோள் கூடவா.—அடித்தல். பெரிய சுப்பன் ஓவெனக் கதறி அழுதல்—அந்தச் சப்தத்தால் சீராளன் நித்திரையினின்று எழுந்து,

சீரா:—சுவாமி, என்றுமில்லாதபடி எனக்குத் தெரியாமலே நித்திரை போய்விட்டேன். மன்னிக்க வேண்டும். குருஸ்வாமி, என் நித்திரை முழுவதும் கனவாக முடிந்தது. எனக்குப் பயமாக இருக்கிறது.

உபா:—சீராளா, பயப்படாதே. என்ன கனவது? சொல் கேட்போம்.

சீரா:— (நொண்டிச்சிந்து.)

கேளும் என தையனே — எந்தன்
கனவின் விபரமதை கனிவுடனே
நாளாயிரமவராய் — அடியார்
நயந்தெங்கள் அன்னதான மடந்தனிலே
உண்டு மகிழ்ந்திடுவார்—ஓர் நாள்
ஒருவரும் வரவில்லை யானதினால்
கண்டேன் தந்தையரும்—வெளியே
கனிவுடன் அடியாரை காணச்சென்றார்.
அந்நேர வேளையிலே—என்மனைக்கு
அரியவராய் ஒரு பெரியவர் தான்
இந்நிலமதைப் படைத்த—ஈசன்
எப்படியோ அவர் அப்படி வந்தார்
கண்டாள் என் தாயார்—கடுகிக்
கைதொழுதாள் பாதத் தைதொழுதாள்
உண்டுபா லன்ன மென்றாள்—கனிவாய்
உண்ணுமென்றாள் தயை பண்ணுமென்றாள்
ஆளனில்லா வீட்டில்—பெரியார்
அன்ன முண்ப தில்லை—யென்ன நடந்தார்

தாழாதென் தந்தை—அடியார்
தட்டுப்பட வில்லை யென்று கஷ்டமுடனே
வந்தார்மனைநாடி—அன்னையும்
வந்தசிவனடியார் சிந்தைபகர்ந்தாள்
நொந்தே யென்னையரும்—இதோ
நொடியில்வருவே னென்று கடுகிச்சென்று
கண்டார் யோகியரை—தெய்வத்தைக்
கண்டவர் போலின்பங்—கொண்டு பணிந்து
உண்டுபசிதீரும்—ஐயா
உருக்கமுடனெந்தன் மனைக்குவாரும்
என்றே நயந்தழைத்தார்—யோகியர்
இணங்கித்தமக்கினிய அருங்கறியை
தந்தால் வருவேனென்றார்—தந்தையும்
தருவேனென்றார் உறைதவரே னென்றார்
அஞ்சுவயதுடைய—திவ்விய
ஆண்பிள்ளைக்கறிதான்—வேண்டுமென்றார்
நெஞ்சந்தடுமாறி—தந்தைதான்
நிச்சயமாய்த் தாரேன்—பக்ஷமாயென்று
ஓடோடியும் வந்து—என்னை
உரிமையுடனறுத்துக் கறிசமைத்தார்
ஆடியலைந்து மனம்—பயந்து
அரண்டெழுந்தேன் உள்ளமிரண்டெழுந்தேன்
நினைத்தால் பயமாகுதே—ஸ்வாமி
நினைத்தால் பயமாகுதே.

ஐயோ நான் என்ன சொல்லுவேன். நினைக்க நினைக்க எனக்குப் பயமாயிருக்குதே. சுவாமி, இது எப்படி முடியுமோ தெரியவில்லையே.

உபா:—குழந்தாய் உன் கனவைக் குறிப்பாகக் கேட்டேன். எதோ நினைவே யல்லாமல் வேறன்று. கனவிற் கண்ட பொருள் கறிக்குதவுமோ என்ன? நீ கிஞ்சித்தும் அஞ்சாதே. கவலையற்றிரு. உமாபதி உனக்கு ஒரு குறைவும் வையார்.

(சிறுத்தொண்டர் வருதல்)

சிறு:— (தொந்திசரிய மயிரே—மெட்டு)
[ஆநந்த பைரவி—ஆதி தாளம்]

(1) கொஞ்சு கிளியின் மொழியாய் கதியருளும்
மிஞ்சு புதன விழியாய் சிறுவயதில்
கொஞ்ச மலவு னழகா லடைந்தசுக
மினியேது.

(2) அஞ்சு வயதில் மகனே கலியகலும்
விஞ்சை புகல்வாய் சுதனே—சதுர்மறையி
னந்தமுதலு மதனே கரைதெரிய
அறிவாயே

(3) இன்று நமனு வருவா னுனதுயிரைத்
தின்று மகிழ்வு முறுவான் கொடியவரை
யென்று மவனு மறவான் முடிவுதின
மெதிர் பார்ப்பான்

(4) கொன்றை யருகுநதி சூடிய பரம
ரென்று முனதுவசமா யினியுறவு
கொண்டு பரமகதியே தருவரிது
நிஜமாமே

யான் அருமையாய்ப் பெற்றெடுத்த பாலகன் படிக்கும் பள்ளியையும் அடைந்தேன். இனியவனைக் கூட்டிச் செல்லவேண்டுமே. ஹா! பரமேசா இதுவும் நின் திருவிளையாடலோ.

[உபாத்தியாயரிடம் வருதல்.]

உபா:—(எழுந்து) ஆஹா சுவாமி! நமஸ்காரம் வரவேண்டும்.

சிறு:—குருஸ்வாமி. நமஸ்காரம்.

உபா:—சுவாமி, ஏது தாங்கள் இவ்வளவு தூரம் வந்தது?

சிறு:—விசேஷம் ஒன்றுமில்லை. குழந்தையைப் பார்க்க வந்தேன். சீராளன் எப்படியிருக்கிறான்? கிரமமாகப் படிக்கிறானா?

உபா:—கேட்பானேன். பிரகஸ்பதியே பிராப்த மானாற் போல்தான். அவன் விஷயமாய் நான் என்ன சொல்லவிருக்கிறது? சீராளா, குழந்தாய், உன் தந்தை வந்திருக்கிறார். நமஸ்காரம் புரிந்து என்னவென்று கேள்.

சீரா:—அப்பா, நமஸ்காரம்.

சிறு:—மங்களமுண்டாகுக.

சீ:—தாங்கள் என்னைப்பார்க்க இங்குவந்தது என் அப்பா?

சிறு:—உன்னைக் கூட்டிச்செல்லலா மென்றே.

சீ:—இன்னும் புதுப்பாடம் ஒன்றும் கேட்டுக்கொள்ளவில்லையே—என் இவ்வளவு சீக்கிரத்தில் என்னை அழைக்கிறீர்கள்?

சிறு:—கண்மணி, உன் மாமன் முதலியோர் வந்திருக்கின்றனர். எதோ அவசரமாய் வந்தவர்கள் ஆதலால், இப்பொழுதே போகவேண்டுமென்று நிற்கிறார்கள். உன்னைப் பார்க்கவேண்டுமென்று பேராவல் கொண்டிருக்கிறார். வா சென்று பார்த்து வருவாய்.
உபாத்தியாயரிடம் விடைபெற்றுக்கொள்.

சீ:—ஸ்வாமி, என் மாமன் முதலியவர்கள் வந்திருக்கிறார்களாம். என்னைப்பார்க்க விரும்புகிறார்களாம். என் தந்தை யழைக்கின்றார்.

உபா:—குழந்தாய் சுகமாய்ப் போய்வா. மங்களமுண்டாகுக.

சிறு:—சுவாமி, குழந்தையைக் கூட்டிச் செல்கின்றேன்.

உபா:—ஆஹா.

சீ:—என் பிரிய நேசர்களே, நான் போய் வருகிறேன்.

பையன்கள்:—சுகமாய் போய் வாடா சீராளா!

ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்துகோண் மேவா ரிலா அக் கடை

சிறுவர்களுக்கான பக்கங்கள்
CHILDREN'S PAGES
பரசுராமாவதாரம்
PARASURAMAVATHARAM

சந்திர குலத்தில் புரூரவ சக்கரவர்த்தி வம்சத்தில் பிறந்த காதி என்னும் பிரசித்த மன்னனுக்கு ஸத்தியவதி என்றொரு புதல்வியிருந்தாள். இவள் வெகு ரூபலாவண்யம் பொருந்தியவள். பிருகு வம்சத்திலுதித்த ரிசீகர் என்னும் மாமுனிவர் இவளைத் தனக்கு விவாகஞ் செய்து கொடுக்கும்படி காதியை வேண்டினர். ரிசீகர் தவத்தில் சிறந்தவரெனினும், பார்வைக்கு லக்ஷணக்குறைவுள்ளவரா யிருந்தார். ஆகையால், காதிக்குத் தன் அருமைப் புதல்வியை அவருக்கு மணம் புரிவிக்க மனம் வரவில்லை. அசாத்தியமான ஒரு நிபந்தனை ஏற்படுத்தி, அவரை நிராகரிக்கக் கருதினன். 'சந்திரன்போல் சுத்த வெண்மையும், ஆனல் ஒரு காதுமட்டில் கறு நிறமுள்ள ஆயிரம் ஜாத்யசுவங்களை நீர் கன்யாசுல்கமாகக் கொடுத்தால், உமக்கு நாம் ஸத்தியவதியை மணந்துகொடுப்போம்' என்று காதி சொல்ல, ரிசீகரும் அவனுடைய கருத்தையறிந்து, வருணனிடம்போய் அவ்விதக் குதிரைகளைப் பெற்றுத் திரும்பி வந்து, அவற்றைக் கன்யாசுல்கமாகக் கொடுத்து, ஸத்தியவதியை மனைவியாகக்கொண்டார்.

பின்னர் ஒரு ஸமயம், ஸத்தியவதி ரிசீகரைப் பார்த்து, தனக்கு ஒரு ஸத்புத்திரனை அளித்து அனுக்கிரகிக்கும்படி வேண்டிக் கொண்டாள். அவள் தாயாரும் தனக்கும் ஒரு புதல்வனுண்டாக வேண்டுமென்று கருதினள்.

இவர்களின் விருப்பத்திற்கேற்ப, ரிசீகரும் தக்க மந்திரங்களை உச்சரித்து இருவித பாயஸங்கள் (சருக்கள்) தயாரித்துவைத்துவிட்டு, ஸ்நானஞ் செய்யச் சென்றார். இதற்குள், ஸத்தியவதியின் தாயானவள் தன் பெண்ணுக்கு வைத்திருக்கும் பாயஸம் உயர்ந்ததாயிருக்குமென்று நினைத்து, அதைத் தனக்கு அளிக்கும்படி ஸத்தியவதியை வேண்ட, அவளும் அதைத் தன் அன்னைக்குக் கொடுத்துவிட்டு, மற்றதைத் தான் புஜித்தாள். ரிசீகர் திரும்பிவந்து, இவ்விவர மறிந்தார். தன் பத்தினியைப் பார்த்து, "என்ன அகாரியம் செய்துவிட்டாய்? பயங்கரமான ஸ்வபாவமும், எல்லோரையும் அழிக்கும் வல்லமையுமுள்ள புத்திரன் உனக்கு உண்டாவான். உன் தாயிடம் பிறக்கும் உன் சகோதரன் பிரம்மஞானம் நிறைந்து பிரகாசிப்பான்" என்று கூறினர். ஸத்தியவதி இதுகேட்டுப் பச்சாத்தாபமடைந்து, தனக்கு அவ்வித புத்திரன் உண்டாகாமலிருக்கும்படி அனுக்கிரகிக்குமாறு ரிசீகரைப் பலவாறு வேண்டினள். அவரும் சற்று மனமிரங்கி, 'அப்படியானல், உன் பௌத்திரன் அவ்வாறிருப்பான்' என்று பதிலளித்தார். ஸத்தியவதியின் சகோதரன் உத்தம பிரம்மஞானம் நிறைந்த விசுவாமித்திர மஹரிஷியானன். ஸத்தியவதியிடம் ஜமதக்னி என்னும் ரிஷிச்சிரேஷ்டர் உண்டானர் இவர் தவத்தில் சிறந்தவர். இவர் ரேணுகை என்பவளை மணந்து, அவளிடம் ஐந்து புத்திரர்களை யடைந்தார். இவர்களுள் கனிஷ்டனுக்கு ராமன் என்று பெயர்; இவர் விஷ்ணு அம்சமாய்ப் பிறந்தவர்; பிராமண தேஜஸோடு, நிகரற்றக்ஷத்திரியபலமும் பொருந்தியவர். இவருடைய முக்கிய ஆயுதமானது எதையும் அழிக்கவல்ல ஒரு கோடரியாயிருந்ததால், இவர் பரசுராமர் எனப் பெயர் விளங்கலானர்.

பரீக்ஷித் மஹாராஜன் பசி, தாகம் முதலியன அறியாமல், ஸ்ரீசுகப்பிரம்ம ரிஷியிட மிருந்து பகவானது அவதார ரஹஸ்யங்களைக் கேட்டுப் பேரானந்தமடைந்து வருகையில், 'தவசிரேஷ்டரான ஜமதக்னியின் புத்திரனை ராமன் எதற்காக க்ஷத்திரியர்களை இருபத்தோரு தலைமுறை கருவறுத்தார். அவர் வாஸுதேவாம்சம் என்றால், அந்த அவதாரத்தின் காரணமும் பயனும் என்ன?" என்று வினவினர். இதுகேட்ட சுகர், 'வேதோக்த தர்மரக்ஷணத்திற்காக ஏற்பட்ட க்ஷத்திரியர் பெரும்பாலும் தங்கள் கடமைகளை மறந்து, ஸத்வகுணம் குறைந்து, ரஜஸ், தமஸ் என்னும் இழிகுணங்கள் மேலிட்டவர்களாய், பாபமாயும், விப்பிரர்களுக்கு விரோதமாயுமுள்ள காரியங்களைச் செய்யத்தலைப்பட்டனர். பூமிக்கு ஒரு பாரம்போல் நடந்துவந்த இவ்வித துஷ்ட க்ஷத்திரியர்களை அழித்து, பூபாரத்தை நீக்கக்கருதியே இவ்வவதாரம் ஏற்பட்டது' என்று கூறி, பரசுராம அவதாரக் கதையைச் சொல்லலுற்றார்:—

ஹைஹய தேசத்தில் கார்த்தவீர்யார்ஜுனன் என்னும் ஒரு சக்கரவர்த்தி இருந்தான். அவன்

ஸ்ரீமந் நாராயண அம்சமான தத்தாத்ரேய பகவானை விசேஷமாய் ஆராதித்து, அரிய வரங்கள் பெற்றான்; நிகரற்ற பலம்பொருந்திய ஆயிரம் புஜங்களும், எங்கும் செல்லத்தக்க உத்தம ரதமும், ஒப்பற்ற தேஜஸும், அணிமாதி எட்டு ஸித்திகளும், தேவர்களாலும் எதிர்க்க முடியாத பராக்கிரமமும் அடைந்து, மிக்க மகிழ்வுடன் வாழ்ந்துவந்தான். ஒரு ஸமயம், இவன் தனது கைகளால் ரேவா நதியின் பிரவாகத்தைத் தேக்கி, உத்தம ஸ்திரீகளுடன் உல்லாஸமாய் ஜலக்கிரீடை செய்துவந்தான். அப்போது அந்நதியின் கீழ்ப்பிரதேசத்தில் லங்காதிபதியான ராவணன் தண்டிறங்கி வசித்து வந்தான் ஜலக்கிரீடை முடிந்ததும், தடைப்பட்டிருந்த பிரவாகம் விடுபட்டுப் புரண்டு வந்து, ராவணனது வஸதியை வெள்ளமாக்கி யழித்தது. இது கண்ட தசகண்டனுக்குக் கோபம் பிறந்து, அவன் அர்ஜுனனை அவமதித்துக் கூறினான். உடனே ஹைஹயன் தன் ஸ்திரீகள் முன்னிலையில் இராவணனை ஒரு குரங்கு போல் வேடிக்கையாய்ப் பிடித்துக் கட்டி, மாஹிஷ்மதி என்னும் தன் பட்டணத்தில் கொஞ்ச நாள் சிறையிட்டு வைத்து, பின்னர் விடுவித்தனுப்பினான்.

பின்னர் ஒருக்கால், கார்த்தவீர்யார்ஜுனன் தனது பரிவாரங்களுடன் புறப்பட்டு, காடுகளில் ஸஞ்சரித்து வேட்டையாடி வந்தான். அச்சமயம் அகஸ்மாத்தாய் ஜமதக்னி மகரிஷியின் ஆசிரமம் போய்ச் சேர்ந்தான். அவ்வித மன்னன் அதிதியாய் வந்ததுகண்டு வெகுவாறு களிப்புற்ற அம் மகரிஷியும் நல்வரவேற்று, அவனுக்கும் அவனது பரிவாரங்களுக்கும், தனது ஹோமப்பசுவைக் கொண்டு அறுசுவை அன்னதிகள் அளித்து, தக்கவாறு உபசரித்தார். அரசனிலும் அதிகமாய் விருந்தளிக்கக்கூடிய அந்த மாமுனிவரது திறமையைக் கண்டு, ஹைஹயன் அஸூயை கொண்டான். அவ்வளவு உத்தமமான விருந்திட்ட அப்பசுவைத் தானே கிரகித்துக் கொள்ளக் கருதினான். ரிஷியின் அக்கினி ஹோத்திராதி கர்மங்களுக்கு அது முக்கிய ஸாதனமாயிருந்தது. ரிஷி என்ன சொல்லியும் கேளாது, அவ்வேந்தன் ஐசுவரிய மதங்கொண்டு, தனது சேவகர்களைக் கொண்டு, கன்றுடன் அப்பசுவைக் கதறக் கதற மாஹிஷ்மதி நகரம் இழுத்துச் சென்றான் அரசன் சென்ற பிறகு, பரசுராமன் ஆசிரமம் வந்து ஹைஹயனது அக்கிரமச் செயலைக் கேள்வியுற்றார்; அடங்காக் கோபமடைந்தார்; உடனே தமது கோடரி, வில் முதலிய யுத்தத்திற்கு வேண்டிய ஆயுதங்களைக் கைக்கொண்டு, ஜடாமண்டல தாரியாய் வெகு கோபாவேசத்துடன் மாஹிஷ்மதி பட்டணம் போனார். அச்சமயம் அவரது உக்கிரதேஜஸை ஒருவரும் கண்ணெடுத்துப் பார்க்க முடியவில்லை.

அவரது கருத்தை யறிந்த கார்த்தவீரியன் அவரை எதிர்த்து அழிக்கும்பொருட்டுத் தனது ஏராளமான ஸைன்னியங்களை ஏவினான். கத்தி கதை ஈட்டி முதலிய ஆயுதங்களைப் பூண்டு, பதினேழு அக்ஷௌஹிணி சேனைகள் அவரைத் தாக்கிப் போராட ஆரம்பித்தன உடனே ராமன் அந்நால்வகைச் சேனையுட் புகுந்து, தமது கோடரியாலும், பாணங்களாலும் அவர்களைக் கைவேறு, கால் வேறு, உடல் வேறாய்த் துண்டித்து, ரணகளமெங்கும் பிணக்காடாகவும், இரத்தப் பிரவாகமாகவும் செய்தார். இவ்வாறு தனது ஸைநியம் அழிக்கப்பட்டது கண்ட ஹைஹயன் கோபாவேசங் கொண்டு, தனது ஐந்நூறு கைகளால் ஐந்நூறு சாபங்களை ஏந்தி, ராமனை எதிர்த்து அவர் மீது சரமாரிகள் பொழியத் தொடங்கினான். ரணதீரனான பார்க்கவரும் தமது ஒரே வில்லிலிருந்து பாணங்களைத் தொடுத்து, அவனது வில்லுகளை அறுத்துத் தள்ளினார். உடனே அவன், கிட்டவிருந்த மலையிலிருந்து பெரும் விருக்ஷங்களை வேருடன் பிடுங்கி எடுத்துக்கொண்டு அவரை நோக்கி ஓடிவந்தான். ராமனும் தமது கோடரியினால் அவனது புஜங்களைத் துண்டித்து, சிரத்தையும் அறுத்துத் தள்ளினார். இது கண்டு, அவனது புத்திரர்கள் பதினாயிரம் பேர்களும் நடுநடுங்கி ஓடிப்போயினர்.

பின்னர், ராமன் அந்த ஹோமப் பசுவையும் கன்றையும் ஓட்டிக்கொண்டு, ஆசிரமம் திரும்பி வந்து, தனது பிதாவிடமும் ஸகோதரர்களிடமும் நிகழ்ந்ததெல்லாம் தெரிவித்தார். ஹைஹயன் கொல்லப்பட்டதைக் கேட்ட ஜமதக்னி முனிவரும், 'குழந்தாய்! என்ன அகாரியம் செய்துவிட்டாய்! ஸர்வ தேவாம்சமாயுள்ள சக்கரவர்த்தியைக் கொல்வது தகுமா? அந்தணருக்குப் பொறுமை யல்லவா ஓர் உத்தம அணியாகும். பொறுமையுள்ள இடத்தே லக்ஷ்மீ வசிப்பாள்; அச்யுதனும் திருப்தியடைவார். பொறுமையா

கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணு மிரவாமை கோடி யுறும்.

லல்லவோ பிரம்மதேவனும் பரமேஷ்டி என்னும் உத்தம பதத்தை யடைந்துள்ளார். அரசனைக் கொன்ற பாவம் தொலையும் பொருட்டு, நீ ஜனார்த்தனனை ஸதாத் தியானித்துக்கொண்டு, ஒருவருஷ காலம் தீர்த்த யாத்திரை செய்வாயாக!'' என்று மொழிந்தருளினர். ராமனும் தமது பிதுர்வாக்கியத்தைச் சிரமேற் கொண்டு, அவ்வாறே தீர்த்த யாத்திரை செய்து, ஆசிரமம் திரும்பிவந்தார்.

பின்னர் ஒரு சமயம், **ரேணுகா** தேவியானவள் தீர்த்தம் கொண்டு வருவதற்காக கங்கைக் கரை சென்றாள். அங்குக் கந்தர்வ ஸ்திரீகளுடன் ஜலக்கிரீடை செய்து கொண்டிருந்த கந்தர்வ ராஜனைப்பார்த்து, அவளது மனம் சற்று சலனமடைந்தது; ஹோம வேளையை மறந்து, அங்கு தாமதித்து நின்றாள். அப்பால் தீர்த்தம் எடுத்துக் கொண்டு திரும்பித் தனது பார்த்தாவின் முன் நின்றாள் ஜமதக்கினியும் அவளது மனதில் ஏற்பட்ட கல்மஷத்தைத் தமது தபோ பலத்தாலுணர்ந்து, அடங்காக் கோபங்கொண்டு, அவளது சிரத்தை வெட்டி எறியும்படி தமது புத்திரர்களை ஆஞ்ஞாபித்தார். ராமன் தவிர மற்றைய குமாரர்கள் அவ்வித பாபச்செயலைச் செய்ய முடியாதென்று கூறி மறுத்துவிட்டனர். ராமனே பிதாவின் கட்டளையைச் சிரமேற் கொண்டு, தமது தாயையும் சகோதரர்களையும் ஒரே வெட்டாய் வெட்டிக்கொன்றார். இதனால் மிகக் களிப்படைந்த ஜமதக்கினியும், யாது வரம் வேண்டுமென்று ராமனைக் கேட்க, அவரும், தமது பிதாவின் தவப்பிரபாவம் நன்கறிந்தவராகையால், தமது தாயும் சகோதரர்களும் உயிர் பிழைத்தெழவேண்டும் என்றும், அவர்களுக்கு அவ்வாறு வெட்டுப்பட்டுண்ட ஞாபகம் ஏற்படாமல் இருக்கவேண்டு மென்றும் அனுக்கிரகிக்கும்படி பிரார்த்தித்தார். அவ்விதமே அவர் அருள்புரிய, ரேணுகை முதலானோர் முன் போல் உயிர் பெற்று விளங்கினர்.

இங்ஙனம் இவ்வாறிருக்க, ஹைஹயனது வதத்தைக் குறித்து மிக்க வன்மம் பாராட்டி, ஆராத் துயரங்கொண்டு தவித்து வந்த அவனது புத்திரர்கள், தங்கள் வயிற்றெரிச்சலைத் தீர்த்துக் கொள்ள எப்போது சமயம் வாய்க்கு மென்று காத்துக் கொண்டிருந்தனர். ஒருக்கால், பரசுராமனும், அவரது சகோதரர்களும் ஆசிரமத்தை விட்டு வெளிச் சென்று, காடுகளில் ஸஞ்சரித்து வருகையில், கார்த்தவீரியனது புத்திரர்கள், ஜமதக்கினியின் ஆசிரமம் சென்றனர். அக்கினி ஹோத்திரசாலையில் தியானத்தி லாழ்ந்திருக்கும் மாமுனிவரைக் கண்டனர்; தங்கள் வன்மத்தைத் தீர்த்துக்கொள்ள அதுவே தருண மென்று நினைத்து, அத்துஷ்டர்கள் அவரை அடித்து இம்சிக்கத் தொடங்கினர். ரேணுகை எவ்வளவு மன்றாடிக் கேட்டும், அவர்கள் மனமிரங்காது, அவரைப் பிடித்திழுத்து, சிரத்தை வெட்டியெறிந்தனர். இக்கோரமான காட்சியைக் கண்டு ஸஹியாத ரேணுகாதேவி, வயிற்றிலடித்துக் கொண்டு, 'குழந்தாய்! ராமனே!' இந்த அக்கிரமம் சகிக்க முடியவில்லையே!' என்று கதறிக் கூக்குரலிட்டாள். இந்த ஆர்த்த ஸ்வரமானது தூரத்திலிருந்த ராமன் காதிற்பட்டது உடனே அவர் வேகமாய்த் திரும்பிவந்து, தமது பிதாவுக்கு ஏற்பட்ட பரிதாப நிலைமையைக் கண்டார்; தீராத்துயரமும் அடங்காக் கோபமும் கொண்டார். பின்னர் அவர் பிதாவின் மரணத்தைக் குறித்து வெகுவாறு பிரலாபித்தார். அவரது சரீரத்தைத் தம் சகோதரர்களிடம் ஒப்புவித்து விட்டு, க்ஷத்திரியர்களை அடியோடு மாய்த்தழிப்பதாய்த் திடமான சங்கற்பம் செய்தார்; தமது கோடரியை எடுத்துக்கொண்டு, மாஹிஷ்மதி நகரஞ் சென்று, பிரம்மஹத்தி செய்துள்ள ஹைஹய புத்திரர்களின் சிரங்களை அறுத்து மலைபோல் குவித்து, அவர்களது இரத்தத்தால் ஒரு பெரும் நதி பெருகும்படி செய்தார்.

பின்னர், துஷ்கிருத்தியங்கள் செய்துள்ள க்ஷத்திரியர்களை இருபத்தோரு தலைமுறை கறு வருத்து, ஸ்யமந்த பஞ்சகம் என்னும் க்ஷேத்திரத்தில் ஒன்பது இரத்த மடுக்கள் உண்டாக்கி, ஜமதக்கினியின் சிரஸை அவர் தேகத்தோடு கூட்டி, அக்கினியில் ஸம்ஸ்காரஞ் செய்வதற்காக, ஸர்வதேவமயனான பரமாத்மாவை யஞ்ஞத்தால் ஆராதித்தார்; தாம் ஜயித்துள்ள பூப்பிரதேசங்களை ஹோதாக்கள் முதலானோருக்குத் தக்ஷிணையாக தானம் செய்துவிட்டு, ஸரஸ்வதி நதியில் அவபிருத ஸ்நானஞ்செய்து, மேகங்களால் விடுபட்ட சூரியன்போல் ஜ்வலித்து விளங்கினர். இவ்வாறு பூஜிக்கப்பெற்ற ஜமதக்கினியும், மஹாஞ்ஞானத்தோடு கூடிய தமது சரீரத்தை யடைந்து, ஸப்த ரிஷி மண்டலத்தில் ஏழாவது ஜ்யோதியாக விளங்கலானர்.

(இதன் தொடர்ச்சி 360-ம் பக்கம் பார்க்க.)

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

அதிதி ஸத்கார மகிமை

நசிகேதஸின் உபாக்கியானம்

முற்காலத்தில், நமது பரததேசத்தில் வாஜச்ரவஸ் என்னும் மாமுனிவர் ஒருவர் இருந்தார். அவர் தபோபலமும் பிரம்மஞ்ஞானமும் நிறைந்தவர். அவர் அபூர்வமான ஒரு பெரும் வேள்வி செய்யக்கருதினர். இவ்வேள்வி செய்பவன் தன் சொத்துக்கள் யாவற்றையும் ஸத்பாத்திரங்களில் வினியோகம் செய்யவேண்டு மென்பது நியமம். அவ்வாறே அவர் அந்த யாகத்தை ஆரம்பித்து, பிரம்மஞ்ஞானம் நிறைந்த மஹான்கள் பலருக்குத் தக்கவாறு தானதிகள் செய்துவந்தார்

இம்முனிவருக்கு நசிகேதஸ் என்னுமோர் உத்தம புத்திரனிருந்தான். இவன் நற்குணங்கள் பொருந்தியவன்; பித்ருபக்தி நிறைந்தவன்; உத்தம ஞானம் பெற்றவன். தனது பிதா செய்துவந்த அவ்வித அபூர்வமான யாகத்தில், ஸத்பாத்திர விநியோகத்துக்குரிய வஸ்துக்களில் தன்னையும் ஒன்ருகக்கருதினன்; ஆகையால் வாஜச்ரவஸ் யாகத்திலுள்ளோருக்குத் தக்கவாறு தானங்கள் செய்துவருகையில், தன்னையும் தானமாக அர்ப்பணம் செய்வாரென்று பிரதி க்ஷணமும் ஆவலுடன் எதிர்பார்த்து வந்தான். தானங்கள் எல்லாம் செய்யப்பட்டன. யாகம் முடிவுபெறும் சமயம் கிட்டியது. ஆனல், அவனது மனோரதம் ஈடேறவில்லை. உடனே அவன் அம்முனிவரிடம் சென்று, "என்னருமைப் பிதாவே! என்னை யாருக்குத் தானமாக அளிக்கப் போகிறீர்கள்?" என வேண்டினன். ஆனல் அவர் இதைக் கவனியாது, வேள்விக்காரியங்களைப் பூர்த்தி செய்து முடிப்பதில் மனதைச் செலுத்திவந்தார்.

இதுகண்ட நசிகேதஸ் இதுவிஷயமாய் அவரை மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கேட்கலானன். இதனல் வாஜச்ரவஸுக்கு வெறுப்புண்டாயிற்று; அவர் கோபங் கொண்டு, "நசிகேதஸே! வணக்கமின்றி ஏன் இவ்வாறு என்னைத் துன்புறுத்துகிறாய்? உன்னை யமனுக்கு அர்ப்பணம் செய்கிறேன்" என்று மொழிந்தார். தாம் ஏதோ கோபாவேசத்தால் சொன்னதின் தாத்பரியம் உடனே அவர் மனதில்பட்டது. வெகுவாறு பச்சாத்தாபமுற்றார்; அதற்கு எவ்வித பரிகாரம் தேடுவது என்று நெடு நேரம் ஆலோசித்தார். பின்னர் அவர் தம் புதல்வனை நோக்கி, "குழந்தாய்! நான் உரைத்தது பொய்யாகாது. நீ யமபுரம் போக வேண்டியதுதான். ஆனல், நான் சொல்லும் பிரகாரம் செய்யவேண்டும். யமன் தனது வீடுவிட்டு வெளியில் போயிருக்கும்போது நீ அங்குச் சென்று, யாதொரு உணவும் கிரகிக்காமல் மூன்று இராத்திரி தங்கியிருக்க வேண்டும். யமதர்மன் திரும்பிவந்து உன்னைக் கேட்கும் கேள்விகளுக்கு, நான் உபதேசிக்குமாறு நீ பதிலுரைக்கவேண்டும்" என்று கூறி, நசிகேதஸ் சொல்லவேண்டிய உத்திரங்களை அவனுக்குப் போதித்து அனுப்பினர்.

அவ்வாறே நசிகேதஸும் யமபுரம் சென்று, அவன் வெளிப் போயிருக்கும் சமயம் பார்த்து, யமன் வீட்டிற்குச் சென்று, மூன்று நாள் ஒரே பட்டினியாய்க் கிடந்தான். பின்னர் யமன் திரும்பிவந்து, மகாதேஜோவானன முனிகுமாரன் தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். உடனே அவன் நசிகேதஸுக்கு அர்க்கியாதிகள் அளித்து உபசரித்து, எவ்வளவு நாளாய் அவன் அங்குத் தங்கியிருக்கிருன் என்று வினவினன். அவன் வந்து மூன்று ராத்திரிகள் கடந்து விட்டன என அறிந்து, அவ்வித அதிதி பட்டினியாய் மூன்று நாள் இருக்க நேர்ந்தது பற்றி நடுநடுங்கினன். என்ன அனர்த்தம் நேரிடுமோ என்று வருந்தினன். நசிகேதஸ் அம் மூன்று இரவுகளிலும் எதைச் சாப்பிட்டு வந்தான் என்று யமன் வினவ, நசிகேதஸும், 'முதல் இரவில் உமது பிரஜைகளையும், இரண்டாவது இரவில் உமது நாற்காணி பிராணிகளையும், மூன்ருவது ராத்திரி உமது புண்ணியத்தையும், தவப்பயனையும் உண்டேன்' என்று மறுமொழி பகர்ந்தான்.

அதுகேட்ட யமதர்மனும், அவ்வித அதிதியைப் பூஜிக்காது இருந்ததால் உண்டாகக் கூடிய தீப்பயனுக்கு அஞ்சி, அதிதியைச் சாந்தப்படுத்தி, அரிய வரங்களால் திருப்திசெய்து, தனக்கு நேரக்கூடிய அநிஷ்டத்தைத் தீர்த்துக் கொள்ளக் கருதினன். உடனே அவன் நசிகேதஸைப் பார்த்து, 'அதிதிச் சிரேஷ்டரே! உமக்குத் தக்கவாறு அதிதிஸத்காரம் செய்யாது, தவறுதல் நேர்ந்ததுபற்றி மிகவும் விசனிக்கிறேன்.

நீர் க்ஷமித்தருள வேண்டும். உமக்கு நல் வரங்கள் அளித்து, இவ்வித அபராதத்தைப் போக்கடித்துக் கொள்ள விரும்புகிறேன். உமக்கு வேண்டிய வரங்களைக் கேட்பீராக! என்று வினயமாய்ப் பிரார்த்தித்தான். 'நான் உயிருடன் என் பிதாவிடம் திரும்பிப் போகும்படி அருள் புரிவீராக !' என்று நசிகேதஸ் பிரார்த்தித்தான். யமதர்மன் அவ்வாறே அனுக்கிரகித்து, மீண்டும் ஒரு வரம் கேட்குமாறு ஏவினன். "அநேக தான தர்மங்கள், யாகங்கள் முதலியன செய்த புண்ணிய பலன் எனக்குக் கிடைக்குமாறு அனுக்கிரகிக்க வேண்டும்" என நசிகேதஸ் விரும்ப, அந்தகனும் அவ்வாறே அருள் புரிந்து, மற்றுமொரு வரம் கேட்கச் சொன்னன்.

இதற்கு நசிகேதஸ் 'தர்மராஜனே ! எனக்கு அகால மிருத்யுவோ, பாபமான துன்மரணமோ நேரிடாம லிருக்கவேண்டும், மேலும் இந்த உபாக்கியானத்தைப் படித்து ஸ்மரிப்பவருக்கும் இவ்வித ஆபத்து ஏற்படாமல் இருக்கும்படி ஆசீர்வதிப்பீராக !' எனப் பிரார்த்தித்தான். யமனும் 'அப்படியே ஆகட்டும்' என மனம் உவந்து கூறினன்.

பின்னர் நசிகேதஸ் திரும்பிவந்து, தன் பிதாவின் அடிகளில் வணங்கி நின்று, அவரது ஆசியைப் பெற்றான். அவன் இப்மையில் மானிடருக்குரிய சதாயுளைப் பூர்ணமாய் அடைந்து, பலவித ஸத்கருமங்கள் செய்து சுகமனுபவித்து, மறுமையில் சாசுவதமான லோகங்களை யடைந்து, பேரானந்தம் பெற்று மகிழ்ந்தான்.

நமது பரத நாட்டில் தொன்றுதொட்டு அனுஷ்டிக்கப்பட்டு வரும் இன்றியமையாத தருமங்களுள், அதிதி ஸத்காரமும் முக்கியமானது என்பது இந்தப் பூர்வீக உபாக்கியானத்தால் நன்கு விளங்கும்.

அதிசய மாணிக்கம்:—டாக்டர் எச் பி. மொரேண என்பவர் தன்னிடம் அப்பழுக்கற்ற ஒரு பர்மா மாணிக்கம் இருப்பதாயும், அதனுள் ஒரு வெள்ளையுடைப்புற்ற சிறிய மனித உருவம் காணப்படுவதாயும் சொல்லுகிறாராம். இம்மாணிக்கம் மிக்க விலையுயர்ந்ததாய் இருப்பதுடன் மிகவும் அதிசயமா யிருக்கிறதாம். அநேக உத்தியோகஸ்தர்கள் இதைப் பரீக்ஷித்து மிகவும் உயர்ந்த மா[illegible] சொல்லுகிறார்களாம்.

வர்த்தமானக் குறிப்புகள்

NEWS AND NOTES

பிலடேல்பியா கண்காட்சி:—இக் கண்காட்சியில், இந்தியாவிற்கு என்று ஒரு கட்டடம், வெம்பிளியிலிருந்தது மாதிரி 60,000 சதுர அடி விஸ்தீரணமுள்ளதாய் கட்டப்பட் டிருக்கிறது. அதில் அநேக வகையான இந்திய சாமான்கள் பார்வைக்கிருக்கின்றனவாம். அதில் ஒரு இந்திய நாடகசாலையும், காடும் இருக்கின்றனவாம். இவையெல்லாம் தயார்செய்ய, £30,000 செலவாயிற்றும்.

(358-ம் பக்கத் தொடர்ச்சி.)

அதன் பிறகு பரசுராமனும் சாந்த புத்தியை யடைந்து, இம்சை ரூபமான காரியங்களை ஒழித்து, வைராக்கிய புத்தியுடன் மஹேந்திர பர்வதத்தில் தவஞ்செய்யச் சென்றார். அவர் உலகிலுள்ள சிரஞ்சீவிகளுள் ஒருவரென்றும், அடுத்த மன்வந்தரத்தில் ஸப்தரிஷிகளுள் ஒருவராக ஆகப்போகிறாரென்றும் வியாஸர் சொல்லி முடித்தார்.

பின்பு, ஸ்ரீராமன் தசரத குமாரனாக அவதரித்து, சிவதனுஸை ஒடித்து, ஸீதையை விவாகம் செய்துகொண்டு, அயோத்திக்குத் திரும்பி வருகையில், பரசுராமன் அவரை எதிர்த்துக் கேவலமாய்ப் பேசி, தம்மிடமுள்ள விஷ்ணு தனுஸை வளைத்து நாணேற்றி, அவரது ஸாமர்த்தியத்தைக் காட்டும்படி கேட்டார். ஸ்ரீராமனும் எளிதில் அவ்வாறே செய்து, ஜமதக்கினியின் கர்வத்தைப் பங்கப்படுத்தினர். துஷ்ட நிக்கிரகம் சிஷ்டபரிபாலனம் செய்து, தர்மத்தை நிலைநிறுத்த ஸ்ரீராமாவதாரம் ஏற்பட்ட பிறகு, பூர்வம் பரசுராமனிடமிருந்த விஷ்ணு தேஜஸும் இவரை விட்டு விலகி, தாசரதியிடம் சேர்ந்தது என்பது இவ்விருத்தாந்தத்தால் அறியப்படவேண்டிய விஷயம். பித்ரு பக்தி மகிமையும், பிரம்மதேஜஸின் பிரபாவமும், எவ்வளவு தேகபலமும் ஐசுவர்யமும் இருந்தாலும், அதர்மத்தில் நடப்பவருக்குப் பகவந் நிக்கிரகம் கட்டாயம் ஏற்படுமென்பதும், ஸ்திரீகளுக்குக் கற்புடைமை உத்தம தர்மமென்பதும் பரசுராம அவதார கதையால் அறியக்கூடிய நற்போதங்களாகும்.

218382

1926 அமிருதாஞ்சனம் காலண்டர்கள் 1926

அழகிய மூன்று கலர்களில் ஸ்ரீ கிருஷ்ணன், மோஹினி ஆகியவர்களின் படங்கள், பிரபல சித்திரக்காரர்களால் எழுதப்பட்டவை.

ஒன்று விலை ரூ 0—2—0; டஜன் ரூ. 1—4—0; 100 ரூ. 9—12—0.

தினசரி கிழிக்கக்கூடிய ஆபீஸ் காலண்டர் 1-க்கு அ. 4 (தபால் பாக்கிங் சார்ஜ் வேறு.)

அமிருதாஞ்சனம்

ஸர்வ நோய்களுக்கும் ஸித்த ஒளஷதம்

அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. எல்லா நோய்களுக்கும், தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து (விலை அணா பத்து). அமிருதாஞ்சனம் எல்லாவிடத்திலும் கிடைக்கும்.

இதர அமிருதாஞ்சனம் ஒளஷதங்கள்

படைத்தைலம். — இது எல்லா விதமான படைகளையும் போக்கும் இரண்டு தடவை உபயோகித்தவுடன். எவ்வித படையும் போய்விடும். விலை டப்பி ஒன்றுக்கு அணா ஆறு.

தந்தசூரணம்.—பல்துலக்க இது நல்லதாள். பல் வியாதி, ஈறுவலி முதலியநோய்கள் நீங்கும். தினந்தோறும் உபயோகித்தால் பல் வெண்மையாகிமுகவசீகரமுண்டாகும். விலை டப்பி ஒன்று அணா 2.

அமிருதாஞ்சனம் டிப்போ,

நெ. 7, தம்புசெட்டி தெருவு, ஜார்ஜ் டவுன்,

சென்னைப்பட்டணம்.

THE QUEEN OF HAIR OILS

KAMINIA OIL (Registered)

கூந்தல் வளர் எண்ணெய்களுள் ராணி

காமினியா ஆயில் (ரிஜிஸ்டார்ட்)

இந்தக் காமினியா எண்ணெய் அதிக விலை உயர்ந்த சாமான்களடங்கியது. இது மயிர் உதிர்வதையும் மண்டை குடைச்சலையும் நிறுத்தி, பொடுகைப் போக்கிப் புது மயிர் வளர்ச்சியை விருத்திசெய்து வர்ணம் மாறிய கூந்தலை சுபாவ வர்ணத்திற்குத் திருப்பும். இது வியாபாரிகளுக்கும், மூளை சம்பந்தமாய் உழைப்புள்ளவர்களுக்கும், மாணாக்கர்களுக்கும், மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விருத்திசெய்து தலையின் அடிப்பாகத்தைச் சுத்திசெய்யும். இதுவும் தவிர, காமினியா ஆயில், அதிக வாசனையு முடையது.

நற்சாக்ஷி பத்திரம்

மூவத்துப்புழையி லிருக்கும் மிஸ்டர் பன்ஸோஸ் எழுதுகிறார்:—காமினியா தைலத்தை நான் மிகவும் சந்தோஷத்துடன் உபயோகித்தேன். அதின் அபூர்வமான குணங்களைப் பற்றி உங்களுக்கு வந்தனம் செய்யப் போதுமான காரணத்தைக் கண்டேன். இந்தத் தைலம் அதிக குளிர்ச்சியைக் கொடுப்பதும் தவிர, கொடிய தலைவலியை துரத்துகின்ற நிபுண "டாக்டர்". தயவுசெய்து ஒரு புட்டி காமினியா ஆயில் வி. பி-யில் சீக்கிரம் அனுப்பவும்.

மைசூர் பொருட் காட்சியில் தங்கமெடலும், அலஹாபாத் பொருட்காட்சியில் நல்ல நற்சாக்ஷிப் பத்திரமும் பெற்றிருக்கிறது.

ஒரு தரம் உபயோகிக்கவும்

ஒரு புட்டியின் விலை ரூ.	1	0	0	வி. பி. தபால் செலவு ரூ.	0	5	0	பிரத்தியேகம்
4—புட்டிகள்	,, 2	10	0	,, ,, ,,	0	14	0	,,

☞ எச்சரிக்கை:—காமினியா ஆயில் ஒவ்வொரு முக்கியமான பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள கடைகளில் விற்கப்படுகிறது. உங்களுடைய சமீபத்தில் காமினியா ஆயில் விற்பவர் இல்லாவிடில், கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேராய் ஆர்டர் அனுப்பவும். ஆனால் உங்களூர் வியாபாரிகளிடம் வாங்கும்பொழுது, தங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். வேறு மாதிரியான தெரியாத எண்ணெய்களை இதுதான் நல்ல எண்ணெய் என்று இந்தக் காமினியா ஆயிலுக்குப் பதிலாய்க் கொடுக்க முயற்சிசெய்வார்கள். காமினியா ஆயிலைத் தவிர நல்ல குணமுடைய வேறு எண்ணெய்கள் கிடையாததினால், அவர்கள் முயற்சிக்கு ஏமாறாமல் எப்பொழுதும் இக் காமினியா ஆயிலே வேண்டுமென்று சொல்லிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஸோல் ஏஜண்டுகள் :— ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,
155, ஜும்மா மஸீத், பம்பாய்.

Printed at the B. N. Press & Published by The Alliance Company, "Shanmuga Vilas", Mylapore, Madras.